# அப்பிள் பழத்தினூடாகப் பார்த்தல்

எழுத்தாளர்
**Dr. Mirza Ayhan Inak**

மொழி பெயர்ப்பு
**Dr. M. Hussain Farook**

Hayrât Neşriyat

# அப்பிள் பழத்தினூடாகப் பார்த்தல்

எழுத்தாளர்
**Dr. Mirza Ayhan Inak**

மொழி பெயர்ப்பு
**Dr. M. Hussain Farook**

மொழி மேற்பார்வை:
**Azmica Kaleel Rahuman (M.Sc)**
**Moulavia Sajidha Junaid**

ஞசு குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் டிஜிடல் உள்ளடக்கத்தை பார்வையிட முடியும். மற்றும் இந்தப் புத்தகம் குறித்த உங்களது கருத்துக்களை எதிர்பார்கின்றோம்.

“மனமார்ந்த நன்றிகள்”

ISBN: 978-605-193-637-6

**Hayrât Neşriyat**

Baskı ve Cilt
**Hayrât Neşriyat San. ve Tic. A.Ş.**
**Isparta Matbaa Tesisleri**
Kuleönü / ISPARTA
Telefon: 0 (246) 259 46 20
**www.hayratnesriyat.com**

இந்த புத்தகத்தின் அனைத்து உரிமையும் ஸுஆதா பதிப்பபகத்துக்கே உரியது. ஆதாரம் மற்றும் மேற்கோள் காட்ட முடியும்

வெளியீட்டுக்கு தயாரித்தவர்:
**Yusuf Irmak**

மேற்பார்வை:
**Psk. Dnş. Salim Köse**

மொழி மேற்பார்வை:
**Akif Atabey, Hüseyin Kurt**

சித்திரம்:
**Z. Oflaz**

வடிவமைப்பு:
**Erdem Köymen**

முதலாம் பதிப்பு: **2024**

புதிப்பு:
**Hayrât Neşriyat San. ve Tic. A.Ş.**
**Isparta Matbaa Tesisleri**
**Kuleönü / ISPARTA**
**Telefon: 0 (246) 259 46 20**
**www.hayratnesriyat.com**

# உள்ளடக்கம்


புது விடயங்களைக் கற்றுக் கொள்ளும் ஆர்வம் ........ 5
ஈமான் எவ்வளவு அழகானது ........ 8
எமது இறைவனை எமக்கு அறிமுகப் படுத்தும் மூன்று மிகப் பெரும் அம்சங்கள் ........ 18
ஈமானுக்கு படித்தரங்கள் உண்டா? ........ 25
அப்பிள் பழத்தைப் பார்க்க வேண்டுமா அல்லது அப்பிள் பழத்தினூடாகப் பார்க்க வேண்டுமா? ........ 33
பனித்துளி, அருமையான பூனை ........ 40
பிரபஞ்சத்தை முழுப்பார்வையோடு பார்த்தல் ........ 47
பல்கலைக்கழகத்தை நோக்கிய பயணம் ........ 52
சட்டம், சட்டத்தை இயற்றியவனின் இருப்புக்கான ஆதாரமாகும் ... 56
இஸ்லாம் மற்றும் விஞ்ஞான பல்கலைக்கழகம் ........ 65
இஸ்லாத்திற்கும் அறிவியலுக்கும் இடையே ஒருமைப்பாடு உள்ளது ........ 68
பகுத்தறிவு, ஆதாரங்களின் அடிப்படையில் செயற்படுகின்றன .. 73
ஒரு விடயத்தை செய்தவர் கண்களுக்கு தென்படாமல் இருப்பது அந்த விடயம் தானாக உருவாகியது என்பதனைக் குறிக்காது .. 74
நாம் வாழும் இந்த உலகம் அற்புதமான ஒரு அரண்மனையைப் போன்றது ........ 77
படைப்புகளின் ரகசிய மொழி ........ 79
தன்நிலையில் இருந்து கொண்டு உங்களுக்கு செய்திகள் வழங்குகின்றேன். உங்களுக்குத் தெரியுமா? ........ 81
அறிவு வேண்டி நிற்கும் ஒரு விடயத்தை அறிவற்ற ஒருவரால் செய்ய முடியாது ........ 83
ஓவியன் இல்லாமல் ஓர் ஓவியம் தோன்ற வாய்ப்பில்லை ........ 86
ஒரு செயல் அந்த செயலின் தோற்றத்திற்கு காரணமாக இருப்பவரின் வகையைச் சேர்ந்தது அல்ல ........ 89
ம்டுண்வே ர்யவிஓ ருஓ டகூ குற்தித்யவிஓ ன்யிசிச்பூம்டடப்ப ........ 92
ஒவ்வொன்றும் இன்னொன்றோடு தொடர்புடையவை! ........ 93
உயிர் அற்ற ஒன்று உயிர் கொடுக்க முடியாது ........ 94

ஒரு வேலையை பலர் செய்ய முற்பட்டால் அந்த வேலை தாருமாறாகிவிடும்....... 96
ஆச்சரியமான பேச்சாளர் ....... 99
ஒவ்வொரு கவிதையும் கவிஞரின் இருப்பை சுட்டிக் காட்டுகின்றது....... 100
மலக்குகள் கண்களுக்கு தென்படாமல் இருப்பது அப்படி ஒரு படைப்பு இல்லை என்பதனை சுட்டிக்காட்ட மாட்டாது....... 101
மனிதகுலத்திற்கு தீர்க்கதரிசிகள் தேவை....... 105
மறுமை வாழ்வும் நிச்சயமானது ....... 107
முதல் படைப்பை விட இரண்டாவது படைப்பு எளிதானது....... 109
மனிதர்களுக்கு தெரிவுச்சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது....... 111
அனைத்து படைப்புகளுக்கும் ஒரு நோக்கம் இருக்கும் பொழுது மனிதன் எப்படி நோக்கமின்றி இருக்க முடியும்! ....... 114
ஈமான் எமது வாழ்வின் மிகப் பெரும் துணையாகும் ....... 118
ஈமானை எப்படி பலப்படுத்திக் கொள்ள முடியும்? ....... 123



# புது விடயங்களைக் கற்றுக் கொள்ளும் ஆர்வம்

அந்த அழகிய கோடைகால விடுமுறை நாட்கள் முடிவடைந்து, புதிய கல்வியாண்டு ஆரம்பித்திருந்தது. மாணவர்கள் புது விடயங்களைக் கற்றுக் கொள்ளும் நோக்கில் புதிய கல்வியாண்டை ஆர்வத்துடன் எதிர்ப்பார்த்திருந்தனர். மாணவர்களின் இந்த ஆர்வத்தோடு செப்டம்பர் மாதம் முடிவடைந்து ஒக்டோபர் மாதம் ஆரம்பித்திருந்தது. மரங்களின் இலைகளின் நிறங்கள் மங்கி மஞ்சள் நிறமாக மாற ஆரம்பித்திருந்தன.

பாடசாலை வளாகத்தில் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் ஆலமரத்தின் இலைகள் உதிர ஆரம்பித்திருந்தன. மாணவர்கள் வசந்த காலங்களிலும் கோடை காலங்களிலும் அதன் நிழலில் குதூகலமாக ஓடியாடி விளையாடுபவர்களாக இருந்தனர். கோடை காலத்தில் பறவைகள் கூடுகட்டி வாழ்ந்து வந்த ஆலமரத்தின் கனமான கிளைகள் காய்ந்து வரண்டு போய் அதன் இலைகள் காற்றுக்கு அடிபட்டு அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன. இந்தத் தோட்டம், அழகிய இஸ்தான்பூல் நகரத்தில், உஷ்குதார் என்ற பிரதேசத்தில் 1898ஆம் ஆண்டு, சுல்தான் அப்துல் ஹமீத் ஹான் அவர்களுடைய கட்டளையின் அடிப்படையில் கட்டப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பாடசாலையின் அழகிய தோட்டமாக இருந்தது.

# அப்பிள் பழத்தினூடாகப் பார்த்தல்

சுல்தான் அப்துல் ஹமீத் அவர்கள் இந்தப் பாடசாலையையும் அதில் கல்வி கற்கும் மாணவர்களையும் மிகவும் நேசித்ததினால் இந்தத் தோட்டத்தை செய்வித்தார். அல்லாஹ், அவருக்கு உயர்ந்த சுவனத்தை வழங்கி அருள் புரிவானாக!. இந்தக் கட்டிடம் ஆரம்பத்தில், ஆரம்பப் பாடசாலை நடாத்தும் நோக்கில் கட்டப்பட்டது. கட்டிடம் கட்டப்படுவதற்காக பயன்படுத்தப்பட்ட கற்கள் விஷேடமாக தெரிவு செய்யப்பட்டன. அதன் கூரைகள் மிகவும் உயரமாகக் கட்டப்பட்டதனால் பாடசாலையில் காற்றோட்டம் அதிகமாக இருந்தது. அத்தோடு அதிக ஜன்னல்கள் பொறிக்கப்பட்டிருந்ததனால் மாணவர்களுக்கு சுற்றுப்புறச் சூழல் சௌகரியமானதாகவும் சிநேகபூர்வமாகவும் இருந்தது. பாடசாலையின் நுழைவாயில் மிகவும் விசாலமானதகவும், எழுத்தணிகளால் அலங்கரிக்கப்பட்டு அழகாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

பாடசாலைக்கு முன்னால் விசாலமானதொரு புத்தகக் கடை காணப்பட்டது. மாணவர்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளும் விற்கப்படும் ஒரு மாடிக் கட்டிடமாக அது இருந்தது. புத்தகக் கடையின் சுற்றுச்சூழல் பச்சைப்பசேல் என்று ரம்மியமாகக் காட்சியளித்தது. அப்புத்தகக் கடையில், மாணவர்களுக்குத் தேநீர் வசதிகள் உட்பட தேவையான அத்தனை வசதிகளும் செய்யப்பட்டிருந்தது. பாடசாலை முடிவடைந்ததன் பிறகு புத்தகக் கடை மாணவர்களால் நிரம்பி வழியும். மாணவர்கள் மேலதிகமாக வாசிக்க விரும்பும் புத்தகங்களை அங்கு அவர்களால் பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தது. அந்த புத்தகங்களின் மூலம் மேலதிகக் கல்வியின் பெரும் பகுதியை பெற்றுக் கொண்டனர். ஓய்வு பெற்ற கல்வியாளர் ஒருவர்தான் அந்தக் புத்தகக் கடைக்குப் பொறுப்பாக இருந்தார். அவர் வாசிப்பை அதிகம் நேசிப்பவராக இருந்தார். இளைஞர்கள் அவரை “உமர் மாமா” என்று அன்பாக அழைத்தனர். மாணவர்கள் அங்கு வருகைத் தரும் போதெல்லாம், அவர் தனது அழகிய மூக்குக் கண்ணாடியை அணிந்தவராக அவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் அமர்ந்து புத்தகம் வாசித்துக் கொண்டிருப்பார். மாணவர்கள் அவரிடம் சில போது கேள்விகள் கேட்பார்கள். சில போது அவர்களால் பெற்றுக் கொள்ள முடியாத புத்தகங்கள் இருக்கும் இடத்தைக் கேட்டு அறிந்து கொள்வார்கள். உமர் மாமா, அவர்களுக்கு மகிழ்ச்சியோடு உதவி செய்பவராக இருந்தார்.





புத்தகக் கடையின் சுவர்களில்: **“வாசிக்க விரும்பும் புத்தகங்களை எடு, வாசித்த பின் மீளக் கொடு”** என்று பெரிய எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருந்தது. புத்தகக் கடைக்கு முதன்முதலாக வரும் மாணவர்கள் இந்த வாசகத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார்கள். அவர்கள்: **“இந்த வாசகத்தின் மூலம் என்ன நாடப்படுகின்றது?”** என்று மனதிற்குள் கேட்டுக் கொள்வார்கள். ஆனால் வாசகத்தின் கருத்தை புரிந்து கொண்டதன் பின்னர் அவர்கள் மகிழ்சியடைந்தார்கள். காரணம் மிகக் குறைந்த செலவில் அப் புத்தகங்களின் மூலம் பிரயோசனம் அடையும் சந்தர்ப்பம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. தாம் விரும்பும் புத்தகங்களை உமர் மாமாவிடமிருந்து 15 நாட்களுக்கு இரவல் வாங்க அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

அதே போன்று உமர் மாமா ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும் துடிதுடிப்பான மாணவன் அலி ஜானின் பாட்டனுமாவார்.

அலி ஜான் துடிதுடிப்பான வேடிக்கையை விரும்பக் கூடியவன், எப்போதும் புன்னகை முகத்தோடு இருப்பவன். மதிய இடைவேளையின் போது தனது நண்பர்களோடு புத்தகக் கடைக்கு வருவான். சில போது பாட்டனுக்கு உதவி செய்வான். சில போது பாட்டன் சொல்லும் அழகிய கதைகளை நண்பர்களோடு அமர்ந்து செவிசாய்பான். உமர் மாமாவின் ‘‘பனித்துளி’’ என்ற பெயருடைய பூனையைப் பற்றியும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஏனெனில் பனித்துளி என்ற பூனை புத்தகக் கடையின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக இருந்தது. புத்தகக் கடைக்கு வருகின்றவர்கள் பனித்துளியை கண்டவுடன் நேசித்து விடுவார்கள். அதனை காணாத பட்சத்தில் அதனைப் பற்றி விசாரிப்பவர்களாக இருந்தார்கள். பனித்துளி, வெள்ளை வெளேரென்று அழகான தோற்றத்தை கொண்டிருந்தது. புத்தகக் கடைக்கு வருகின்றவர்களோடு விளையாடுவதற்கு மிகவும் ஆர்வமாக இருந்தது. இஸ்லாம் பாட ஆசிரியரான யூசுப் ஆசிரியர், உமர் மாமாவோடு உரையாடுவதற்காக அடிக்கடி புத்தகக் கடைக்கு வருபவராக இருந்தார்.

## ஈமான் எவ்வளவு அழகானது

அன்று செவ்வாய்க் கிழமை. மாணவர்கள், இறுதிப் பாடவேளையில் இஸ்லாம் பாடத்திற்கு தயாராகிக் கொண்டிருந்தனர். இறுதிப் பாடவேளையாக இருந்ததனால் மாணவர்கள் ஓரளவு சோர்வாக தென்பட்டாலும் இஸ்லாம் பாடம் என்பதனால் மாணவர்களுக்கு மிகவும் விருப்பத்திற்குறிய வேளையாக இருந்தது. இஸ்லாம் பாட ஆசிரியராகக் கடமை புரியும் யூசுப் ஆசிரியர், பாடசாலையில் அனைவராலும் நேசிக்கப்படும் ஒரு சிறந்த ஆசிரியராக வலம் வந்தார். ஏனெனில் அவர் மாணவர்களோடு கௌரவமாக நடந்து கொள்ளக் கூடியவராகவும், அவர்களது சிந்தனைகளை மதிக்கக் கூடியவராகவும், கேள்விகள் தொடுத்து அவர்களது சிந்தனையைத் தூண்டக் கூடியவராகவும் இருந்தார். மாணவர்களால் கேட்கப்படும் கேள்விகளுக்கு உடனே பதிலளிக்காமல் அதற்குறிய விடையை மாணவர்கள் தாமாகவே கண்டு பிடிக்கத் தூண்டுவார். மாணவர்கள் சிந்திக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதே அவரது எதிர்பார்ப்பாகும். யூசுப் ஆசிரியர், தனது கற்பித்தல் செயற்பாடுகளில் மாணவர் மையக்கற்பித்தல் முறையைக்



கையாண்டார். தனது பாடத்தை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தும் போது வாழ்வின் யதார்த்தங்களிலிருந்தும், அனுபவங்களிலிருந்தும் உதாரணங்களை முன்வைத்துத் தெளிவுபடுத்துவார். பிரபஞ்சம் மற்றும் பிரபஞ்ச அற்புதங்கள், அல்லாஹ்வின் அருள்கள், அல்லாஹ்வின் படைப்புக்களில் பிரதிபலித்திருக்கும் அழகு போன்றவற்றை மாணவர்களோடு பகிர்ந்து கொள்வார். மாணவர்களையும் இணைத்துக் கொண்டு அவர்களின் கருத்துக்களையும் வரவேற்றவராக கற்பித்தலை கொண்டு செல்வார். சில போது மாணவர்களை பாடசாலையின் முற்றத்திற்கு அழைத்துச் சென்று திறந்த வெளியினில் பாடம் நடாத்தக்ககூடியவராகவும் காணப்பட்டார்.

மாணவர்கள் தமது ஆசிரியர் மீது அளவில்லா நேசம் கொண்டார்கள். அவரது பாடத்தில் மிகவும் உற்சாகமாகவும் விருப்பத்துடனும் கலந்து கொள்வார்கள். தமக்குத் தெரியாத விடயங்களை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். பல நேரங்களில் இஸ்லாம் பாடம் முடிவடையக் கூடாது என்று ஆசைப்படுவார்கள். ஆனாலும் யூசுப் ஆசிரியர் புன்னகைத்தவராக:“அடுத்த பாடத்திற்குத் தயாராகுவதற்காக நீங்கள் ஓய்வு எடுக்க வேண்டும் எனது அன்பு மாணவர்களே!” எனக் கூறி அவர்களை ஆறுதல் படுத்துவார். மணி ஒலித்ததன் பின்னர் பாடத்தை முடித்துக் கொண்டு “எமது பாடத்தை அடுத்து வரும் வகுப்பில் தொடருவோம். அல்லாஹ்வுடைய

பாதுகாப்பில் இருங்கள்'' என்று கூறியவராக வகுப்பை விட்டு வெளியேறினார்.

யூசுப் ஆசிரயர் தனது இஸ்லாம் பாடத்தில்: **"அல்லாஹ்வின் மீது நம்பிக்கை"** என்று மற்றுமொரு தலைப்பை பின்வருமாறு ஆரம்பித்தார்:

"நண்பர்களே! அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை குறித்து பேசுவதற்கு முன்னர் மனிதன் பற்றி சிறிது உரையாடலாம் என விரும்புகின்றேன். மனிதன் ஏனைய படைப்புக்களை விட வேறுபட்டவன் என்பதனை நீங்கள் அறிவீர்கள். நாம் மனிதர்கள் என்ற வகையில் சிந்திக்கின்றோம், கேள்வி கேட்கின்றோம், எம்மைச் சூழ நடைபெறும் நிகழ்வுகள் குறித்து ஆழமாக கரிசனை செலுத்துகின்றோம். இந்த நிகழ்வுகளின் காரண காரியங்களை ஆராய்கின்றோம். உதாரணமாக, சிறியதொரு வித்து எப்படி பெரு விருட்சமாக மாறுகின்றது என்ற விடயம் குறித்து அந்த மரமோ அல்லது மரத்தில் வாழும் பறவைகளோ சிந்திக்க மாட்டாது. ஆனால் மனிதன் சிறியதொரு வித்து எப்படிப் பெரு விருட்சமாக மாறுகின்றது என்று சிந்திப்பான். அதனை ஆச்சரியத்தோடும் பார்ப்பான்.

அன்பு நண்பர்களே! மனிதன் பிறக்கும் போதே அபார ஆற்றல் மற்றும் திறமைகளோடு பிறக்கின்றான். மனிதனிடம் காணப்படும் அறிவு, உணர்வுகள் மற்றும் பண்புகள் போன்றவை அவன் ஏனைய படைப்புகளை விட பிறப்பால் உயர்ந்தவன் என சுட்டிக் காட்டுகின்றது. மனிதன் ஏனைய படைப்புகளை விட்டும் படைப்பால் வேறுபட்டவன் என்பதும் மனிதனுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆற்றல்களும் திறமைகளும் மனிதன் உலகத்திற்கு உயர்ந்ததொரு நோக்கத்திற்காக அனுப்பப்பட்டுள்ளான் என்பதற்கு மிகத் தெளிவானதொரு சான்றாகும். இந்த நோக்கங்களில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வது மிக முதன்மை பெறுகின்றது. இப்போது, வாருங்கள் "ஈமான் என்றால் என்ன?'' என்ற கேள்விக்கு பதிலைத் தேடுவோம்.''

ஈமான் குறித்து மாணவர்களும் தங்களது கருத்துக்களை முன்வைக்குமாறு யூசுப் ஆசிரியர் தனது மாணவர்களிடம் கேட்டுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர் மத்தியில் பின்வரும் கலந்துரையாடல் நடைபெற்றது:

நஸீபா: ஆசிரியரே! ஈமான் என்பது நம்பிக்கையாகும்.

ஆசிரியர்: சிறப்பானதொரு பதில்.

அலி ஜான்: ஈமான் என்பது உள்ளத்தால் மனப்பூர்வமாக நம்புவதாகும்.

ஆசிரியர்: சரியான விடை. மிகவும் சிறப்பான விடைகள் வந்து கொண்டிருக்கின்றன. அடுத்து விடை சொல்லப் போவது யார்?

இந்தத் தடவை சாரா எழுந்து நின்றாள். வகுப்பில் அதிகம் புத்தகம் வாசிக்கும் மாணவியாவாள். அவளின் பதில் பின்வருமாறு அமைந்திருந்தது:

"ஈமான் என்பது, கடுகளவேனும் சந்தேகமின்றி உள்ளத்தால் அல்லாஹ்வை நம்புவதாகும் என்று நான் புத்தகமொன்றில் வாசித்தேன்."

ஆசிரியர்: மிகவும் அழகானதொரு பதில்.

முஸ்தபா தனது கையை உயர்த்தியவனாக ஆசிரியரோடு பின்வரும் கலந்துரையாடலை ஆரம்பித்தான்:

ஆசிரியரே! ஈமான் என்ற விடயம் மனிதன் படைக்கப்பட்ட நாள் முதலே உள்ள ஒரு அம்சம் தானே?

ஆசிரியர்: ஆம் முஸ்தபா, ஈமான் என்ற விடயம் முதல் மனிதன் படைக்கப்பட்ட முதல் இருந்து வரும் ஓர் அம்சமாகும். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதல் மனிதர் என்பது போலவே முதல் நபியும் அவரே. மனிதர்கள் நபிமார்களின் மூலம் ஈமானைக் கற்றுக் கொள்கின்றனர். அவர்கள் மக்களுக்கு ஈமானின் அவசியம் மற்றும் ஈமான் எப்படி அமைய வேண்டும் என்றும் கற்றுக் கொடுக்கின்றனர். மனிதன் என்பவன் யார்? உலகம் எப்படிப்பட்டதொரு இடம்? நாம் ஏன் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டோம். உலகத்தில் எமது பணி என்ன? மரணத்தின் பின்னர் நாம் எங்கு செல்கின்றோம்? போன்ற கேள்விகளுக்கு நபிமார்களைத் தவிர வேறு யாராலும் திருப்பதிகரமான பதில்களை முன்வைக்க முடியாது.

ரையான்: ஆசிரியரே! ஈமான் எப்படி அமைய வேண்டும்? வெறுமனே உள்ளத்தால் நம்பினால் போதுமானதா?

மாணவர்கள் கற்றலில் ஆர்வமாக ஈடுபடுவதனைக் கண்ட யூசுப் ஆசிரியர் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தவராகப் பின்வருமாறு கூறினார்.

ரையய்யான், நீங்கள் மிக முக்கியமான ஒரு அம்சத்தைக் கேட்டீர்கள். ஈமான் உள்ளத்தோடு சம்பந்தப்பட்ட ஒரு விடயமாகும். ஆனாலும் உள்ளத்தில் ஏற்பட்ட அந்த நம்பிக்கையை நாவினாலும் மொழிய வேண்டும். உள்ளம் என்பது ஈமான் என்ற இறை நம்பிக்கை தோன்றி வளரும் ஆன்மீக மையமாகும். நாவு, உள்ளத்தில் ஊற்றெடுத்த நம்பிக்கையை வெளிப்படுத்தும் ஓர் ஊடகமாகும். இறை நம்பிக்கையின் ஆழமாக வேரூன்றிய உள்ளம் பௌதீகத்திற்கு அப்பாற்பட்ட விடயமாகும். எனவே இங்கு உள்ளம் என்பதன் ஊடாக உடலின் இரத்த சுற்றோட்டத்திற்கு காரணமான கையளவு இதயம் கருத்திற்க் கொள்ளப்படவில்லை.

நீங்கள், ஈமான் என்றால் என்ன? என்பது குறித்தும் ஈமானின் பல்வேறு வரைவிலக்கணங்களையும் மிக அழகாக முன்வைத்தீர்கள். எனவே உங்கள் கருத்துக்கள் அனைத்தையும் நான் பின்வருமாரு சுருக்கமாகக் கூறுகின்றேன்: ‘‘ஈமான் என்பது எமது நேசத்துக்குரிய முஹம்மத் நபியவர்கள், அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட ஒரு தூதர் என்றும் அல்லாஹ் அவருக்கு வஹியாக அறிவிக்கப்பட்டவற்றையும் உள்ளத்தால் உறுதியாக நம்புவதாகும்.’’ எனவே, ஒருவர் உளத்தூ ய்மையோடு உண்மையாக ஈமான் கொள்வதோடு அதனை நாவினாலும் மொழிய வேண்டும்.

அனைத்து நபிமார்களும், அல்லாஹ்வின் இருப்பு மற்றும் அவன் ஏகன் என்றும் அவர்களுக்கு வஹியாக அறிவிக்கப்பட்டவற்றை மக்களுக்குப் போதித்தார்கள். எமது நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களும் இறைவன் இணை துணை அற்ற ஏகன் என்று எமக்குப் போதித்தார்கள். இதனைத்தான் நாம் ஏகத்துவம் (தௌஹீத்) என்று அழைக்கின்றோம். இஸ்லாம் ஏகத்துவத்தின் மார்க்கமாகும்.

ஹஸன், ‘ஏகத்துவம் என்றால் என்ன ஆசிரியரே?! சற்று விளக்க முடியுமா?’ என்று கேட்டான்.

ஆசிரியர்: ஏகத்துவம் என்பது அல்லாஹ் ஒருவன் என நம்புவதாகும். அதாவது அல்லாஹ்வின் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டு உறுதியாக நம்புவதாகும். ஏகத்துவம் எமது மார்க்கத்தில் மிக முக்கியமான ஒரு அடிப்படையாகும். இஸ்லாத்தை தனது வாழ்வாக தெரிவு செய்ய விரும்பும் ஒருவர்

''அல்லாஹ்வைத் தவிர வணங்குவதற்குத் தகுதியானவன் வேறு யாரும் இல்லை, முஹம்மத் அல்லாஹ்வின் தூதர்'' என்ற ஏகத்துவத்தை பிரகடனப்படுத்தும் கலிமாவை மொழிய வேண்டும். இந்தக் கலிமாவின் முதல் பகுதி அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்பதனையும் இரண்டாம் பகுதி முஹம்மத் நபியவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதனையும் குறிக்கிறது. எனவே இந்தக் கலிமாவை மொழியாத எவரும் முஸ்லிமாக கருதப்பட மாட்டார்.

அஹ்மத், இந்த விடயத்தோடு சம்பந்தப்பட்ட நிகழ்வொன்றை முன்வைப்பதற்காக ஆசிரியரிடம் அனுமதி வேண்டினார். ஆசிரியர் அனுமதி வழங்கவே அந்த நிகழ்வை பின்வருமாறு தெளிவு படுத்தினார்:

ஆசிரியரே! நாம் வாரவிடுமுறையில் குடும்ப ரீதியாக ஆயாசோபியாவிற்குச் சென்றோம். பிரமாண்டமான அந்த மஸ்ஜிதில் அனைவரினதும் கவனத்தை ஈர்கும் ஒரு நிகழ்வு நடைபெற்றது. சுற்றுலா நோக்கில் துருக்கி நாட்டிற்கு வருகை தந்திருக்கும் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த புறைதீ என்ற இளைஞன் இஸ்லாத்தைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டுள்ளார். பின்னர் ஆய்வின் முடிவில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறார். அவர் ஜேர்மன் நாட்டில் தமக்கு அறிமுகமான முஸ்லிம் அயலவர்களோடு ஆயாசோபியா மஸ்ஜிதின் இமாமை சந்திப்பதற்கு வருகை தந்திருந்தார். ஆயாசோபியாவின் கம்பீரமான மிம்பருக்கு அருகில் அந்த இளைஞன் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கான தனது முதல் எட்டுக்களை எடுத்து வைத்ததைக் கண்டேன்.

அலி ஜான்:''நானும் அந்த இடத்தில் இருந்திருக்கக் கூடாதா? உண்மையிலே கவனத்தை ஈர்க்கும் ஒரு செயலாகும்''என்றார்.

யூசுப் அசிரியர், அஹ்மதிடம் அந்த நிகழ்வை இன்னும் விவரமாகத் தெளிவு படுத்துமாறு வேண்டிக் கொண்டார்.

அஹ்மத்: ஆரம்பமாக இமாம் அவர்கள், இந்த முக்கியமான தீர்மானத்தை எடுத்ததற்காக இளைஞனிற்கு தனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டார். இளைஞனின் முஸ்லிம் நண்பர்கள் அவர்களுக்கு மத்தியில் மொழிபெயர்ப்பாளராக இருந்தார்கள். பின்னர் இமாம், அந்த இளைஞனிற்கு

இஸ்லாத்தின் சிறப்புக்கள் குறித்து தெளிவுபடுத்தியதன் பின்னர் அவரிடம் தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கான காரணத்தையும் வினவினார். அந்த இளைஞன் தமது முஸ்லிம் அயலவர்களை சுட்டிக்காட்டியவராக:“நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு மிக பிரதான காரணம் எனது முஸ்லிம் அயலவர்களும் பாடசாலை நண்பர்களுமே. அவர்களது அழகிய முன்மாதிரியான வாழ்வு முறை என்னை மிகவும் கவர்ந்தது. அவர்களது குடும்ப வாழ்வு, மனித நேயம், அயலவர்களுடனான நல்லுறவு, அன்பு மற்றும் நீதி, நேர்மை போன்ற அம்சங்கள் என்னுள் தாக்கத்தை ஏற்படுத்தியது. பின்னர் நான் அவர்களது மார்க்கம் பற்றி ஆய்வு செய்யத் தொடங்கினேன். இஸ்லாம், அல்-குர்ஆன் மற்றும் முஹம்மத் நபி (ஸல்) குறித்து ஆய்வு செய்யும் போதெல்லாம் அவற்றின் மீதான எனது நேசம் அதிகரிக்க ஆரம்பித்தது. எனவே இஸ்லாம் குறித்த ஆய்வு செய்ய வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் இன்னும் அதிகரித்தது. இந்தப் பின்னணியில் துருக்கி நாட்டுக்கு சுற்றுலா நோக்கத்தில் வந்தேன். இஸ்தான்பூல் நகரில் அமைந்திருக்கும் மஸ்ஜித்களும், 5 நேரம் ஓயாமல் ஒலிக்கும் பாங்கோசையும் என்னுள் அதிக தாக்கத்தை ஏற்படுத்தின. எனவே இன்று இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு முஸ்லிமாகத் தீர்மானித்தேன்” என்றார்.

இமாம் மீண்டும் ஒரு முறை அந்த இளைஞனை பாராட்டியதன் பின்னர் ஷஹாதா கலிமாவின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தி, ஷஹாதா கலிமாவை அவருக்குச் சொல்லிக் கொடுத்தார். அவரோடு சேர்ந்து நாம் அனைவரும் “அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் முஹம்மத் (ஸல்) அவனது அடியானும் தூதருமாவார் என்றும் சான்று பகர்கின்றோம்” என்று கூறினோம். உண்மையில் இந்த நிகழ்வு என்னுள் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது ஆசிரயரே! பின்னர் மஸ்ஜிதில் காணப்பட்ட அனைவரும் புதிய முஸ்லிமை ஆரத்தழுவி, பாராட்டி துஆச் செய்தார்கள். அங்கிருந்த முஸ்லிம்களினால் அந்த இளைஞனுக்கு காட்டப்பட்ட அன்பையும் மகிழ்ச்சியையும் கண்ட ஜேர்மன் நாட்டு இளைஞர் ஆனந்தக் கண்ணீர் விட்டழுத காட்சியை என்னால் இன்னும் மறக்க முடியாது ஆசிரியரே!

யூசுப் ஆசிரியர்: உண்மையிலே நீங்கள் உணர்ச்சி பூர்வமான ஒரு நிகழ்வில் கலந்து கொண்டுள்ளீர்கள். அல்லாஹ்விற்கே

எல்லாப் புகழும் மற்றுமொரு இளைஞன் இஸ்லாத்தின் மூலம் கண்ணியமடைந்தார். எவ்வளவு சந்தோசமான செய்தி இது!.

யாவுஸ்: இஸ்லாத்தின் மூலம் கண்ணியம் அடைதல் என்றால் என்ன ஆசிரியரே!?

யூசுப் ஆசிரியர்: ஆம் இது மிக ஆழமானதொரு கேள்வி. அன்பு நண்பர்களே! அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான் என ஏற்று அவனை ஈமான் கொள்வது எம்மனைவரினதும் முதற் கடமையாகும். ஏனெனில் நாம் உலகத்திற்கு அனுப்பப்பட்டதன் முதன்மையான நோக்கம் இதுவாகும். அல்லாஹ், மனிதர்களுக்கு தன்னை அறிமுகப்படுத்தும் நோக்கில் பிரபஞ்சத்தைப் படைத்தான். அதன் மூலம் மனிதர்கள் அல்லாஹ்வை நேசிக்க வேண்டும் என மனிதர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட அனைத்து தூதர்களும் நபிமார்களும் மனிதர்களை இறைநம்பிக்கையை நோக்கி அழைப்பு விடுத்தார்கள்.

மனிதர்கள் ஷஹாதா கலிமாவின் மூலம் அறிவைப் பெற்றுக் கொள்கின்றான். பின்னர் அல்லாஹ்வை தனது இறைவனாக ஏற்றுக் கொண்டு அவனுக்கு கட்டுப்படுகின்றான். அனைத்தும் அவனின் நாட்டப்படியே நடைபெறுகின்றது என புரிந்து கொள்வான். கை, நாவு, கண், அறிவு, உள்ளம், தாய், தந்தை மற்றும் தேசம் போன்ற அனைத்தையும் அல்லாஹ்வினால் அவனுக்கு அருளாக வழங்கப்பட்டது என்பதனை இறை நம்பிக்கை மூலமே அறிந்து கொள்கின்றான். இதன் விளைவாக மனிதனுக்கும் அல்லாஹ்விற்கும் இடையில் ஈமான் என்ற ஒரு உறவு தோற்றம் பெறுகின்றது. இந்த ஈமானிய உறவு ஒரு மனிதனால் அடைய முடியுமான அதி உயர் அந்தஸ்தாகும். இஸ்லாத்தின் பார்வையில் கண்ணியம் செல்வம், பட்டம், பதவி, இனம், குடும்பம் போன்றவற்றில் இல்லை. மாறாக உண்மையான கண்ணியம் ஈமானிலும் இஸ்லாத்திலும்தான் இருக்கின்றது. எனவேதான் புரைத் இஸ்லாத்தின் மூலம் கண்ணியமடைந்தார் என்று கூறினேன்.

ஆம், ஆசிரயரே! இன்னுமொரு விடயம் நடைபெற்றது அதனை சொல்ல மறந்து விட்டேன். அதாவது புரைத் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் பின் தனது பெயரை மாற்ற வேண்டும் என்று கூறினார். அதற்கு இமாமவர்கள் நீங்கள் விரும்புவது போன்று செய்யலாம் என்றார். ஈஸா அலைஹிஸ்ஸ

லாம், முஹம்மத் நபியவர்களின் வருகை குறித்து பல நூற்றாண்டிற்கு முன்னர் அஹ்மத் என்ற பெயரைக் குறித்து நன்மாராயம் செய்தார். அஹ்மத் நபியவர்களின் பெயர்களில் ஒன்றாகும். எனவே உங்களுக்கும் அஹ்மத் என்ற பெயரை சூட்டுவோம் என்றதும் புரைத் மகிழச்சியாக ஏற்றுக் கொண்டார்.

யூசுப் ஆசிரியர், அஹ்மதைப் பார்த்து ஏய் அஹ்மத்! நீங்கள் இஸ்லாத்தை தழுவிய அந்த இளைஞனின் பெயரிலும் மார்க்கத்திலும் ஒன்று படுகிறீர்கள் என்றார். அஹ்மத்: ஆம் ஆசிரியரே! உண்மையிலே அந்த நாள் எனக்கு மிகவும் சிறப்பானதொரு நாளாக இருந்தது. வாழ்நாள் முழுவதும் மறக்கவே மாட்டேன். ஆயாசோபியாவை நினைக்கும் போதெல்லாம் எனது பெயரை உடைய அந்த முஸ்லிம் இளைஞனும் ஞாபகத்திற்கு வருவார்.

யூசுப் ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து பின்வருமாறு சொன்னார்: உங்களது நண்பன் அஹ்மத்துக்கு நன்றியை தெரிவிக்கின்றேன். எங்கள் அனைவரது உள்ளத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு அழகிய நிகழ்வை எங்களோடு பகிர்ந்து கொண்டார். ஈமானிய உணர்வின் அழகு எப்படி இருக்கும் என்பதை அனுப ரீதியாக எமக்குத் தெளிவுப் படுத்தினர். அருமை நண்பர்களே! இறை நம்பிக்கை என்பது சூரியனைப் போன்றதாகும். இருளில் இருக்கும் ஒரு மனிதனை உள்ளாலும் வெளியாளும் பிரகாசப்படுத்துகின்றது. ஒரு மனிதன் இறை நம்பிக்கையின் மூலமே முழு மனித சமூகத்திற்கும் முன்னுதாரணமான முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் போதிக்கப்பட்ட உன்னத பண்புகளையும் பெறுமானங்களையும் தனது வாழ்வில் எடுத்து நடப்பான். அப்போது அவன் பூரண மனிதனாக மாறுகிறான். மனித நேயம், இரக்கம், தூய்மை, தியாகம், அர்ப்பணம், நம்பிக்கை, நாணயமாக நடந்து கொள்ளல், அழகிய

**இறை நம்பிக்கை மனிதனை உண்மையான மனிதனாக மாற்றும்.**

பண்பாடு மற்றும் ஒழுக்க விழுமியங்கள் போன்றவற்றை நபியவர்களின் வாழ்விலிருந்து கற்றுக் கொண்டு தனது வாழ்வில் நடைமுறைப்படுத்துகின்றான். முஸ்லிம் அல்லாத ஒரு நாட்டில் வாழ்கின்ற சிறந்த மனிதர்கள் இஸ்லாத்தை அழகிய முறையில் தமது வாழ்வில் நடைமுறைப் படுத்தும் போது முஸ்லிம் அல்லாதவர்களிடத்தில் எப்படி அழகிய தாக்கங்களை ஏற்படுத்த முடியும் என்றும் அவர்களை இஸ்லாத்தின் பால் கவரச் செய்கிறது என்றும் நீங்கள் இப்போது அறிந்து கொண்டீர்கள். ஜேர்மன் நாட்டில் வாழும் அந்த இளைஞனின் நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கும் நாம் நன்றி தெரிவிக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் இஸ்லாத்தை அழகிய முறையில் தமது வாழ்விலே நடைமுறைப்படுத்தியதன் விளைவாகத்தான் இஸ்லாத்தை பற்றிய நல்லெண்ணம் அந்த இளைஞனின் உள்ளத்தில் ஏற்பட்டது.

நுசைபா: ஆசிரியரே! ஈமானின் படித்தரங்கள் மற்றும் அதன் வகைகள் பற்றியும் குறிப்பிட முடியுமா?

வகுப்பறையில் மயான அமைதி நிலவியது. அவர்களது தலைகளில் பறவைகள் அமர்ந்திருப்பது போன்று இந்த கேள்விக்கான விடையை எதிர்பார்த்து அமைதியாக காத்திருந்தார்கள். அப்போது பாடவேளை முடிவதற்கான மணி ஒலித்தது.

யூசுப் ஆசிரியர்: நண்பர்களே! இந்த கேள்விக்கான விடையை எதிர்வரும் வியாழக்கிழமை பார்ப்போம் இன்ஷா அல்லாஹ் என்று சொல்லிவிட்டு பாடத்தை நிறைவு செய்தார்.



# எமது இறைவனை எமக்கு அறிமுகப் படுத்தும் மூன்று மிகப் பெரும் அம்சங்கள்

மாணவர்கள் தங்களது புத்தகப்பைகளை எடுத்துக் கொண்டு வகுப்பிலிருந்து அமைதியாக வெளியேறிச் சென்றார்கள். நான்கைந்து மாணவர்கள் தங்களுக்குள் கதைத்தவர்களாக பாடசாலைக்கு முன்னாள் இருக்கும் புத்தகக் கடையை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் புத்தகக் கடைக்குள் நுழைந்த போது உமர் மாமா வழமை போன்று தனது கதிரையில் அமர்ந்து புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தார். பனித்துளி என்ற பூனையும் வழமைபோல் தனது அழகிய தோற்றத்தோடு அங்கே இருந்தது.

உமர் மாமா, வாருங்கள், வாருங்கள் அன்பு மாணவர்களே! என்று புன்முறுவல் பூத்தவராக அவர்களை வரவேற்றார். உமர் மாமாவின் மேசையில் காணப்பட்ட பூச்சாடியில் நறுமணமுள்ள வண்ண வண்ண பூக்கள் இருந்தது. அலி ஜான், மேசையில் இருக்கும் அந்தப் பூக்களை நுகர்வதற்காக உமர் மாமாவிடம் அனுமதி கேட்க எத்தனிக்கும் போது தவறுதலாக பூச்சாடியுடன் மோதினார். பூச்சாடி அப்படியே மேசையில் புரண்டு விட்டது. ஆனாலும் பூச்சாடி உடையவில்லை என்றாலும் அங்கிருந்த பனித்துளி அச்சமடைந்து மியாவ் என்று கத்திக் கொண்டு உமர் மாமாவின் மடியில் பாய்ந்து அமர்ந்து கொண்டது. அனைவரும் அலி ஜானை பார்த்து சிரிக்கலானார்கள். அலி ஜான் வழமை போன்று சிரித்தவராக தனது பாட்டனான உமர் மாமாவைப் பார்த்து: “அருமைப் பாட்டனே! மன்னிக்கவும். தவறுதலாக நடை பெற்றது.”

உமர் மாமா: பரவாயில்லை அலி ஜான்! நாம் அனைவரும் மனிதர்கள் இப்படியான தவறுகள் எங்களுக்கும் நடைபெறுவது இயல்பானதாகும். மனித நேயமும், ஒருவரை ஒருவர் மதித்து நடந்து கொள்வதும், பரஸ்பரம் அன்பு காட்டுவதும் தான் மிக முக்கியமானது. மக்கள், ஒரு முஸ்லிமை பண்பாடாக பேசுகிறான், எப்போதும் சிரித்த முகத்தோடு உறவாடுகின்றான், பிறரை புரிந்து நடந்து கொள்கின்றான் போன்ற அம்சங்களுக்காகவே நேசிக்கின்றனர். எமது முன்னோர்கள் “யார் எல்லாவற்றிலும் பரிபூரணமான ஒரு நண்பனை எதிர்பார்ப்பாரோ அவர் எந்த ஒரு நண்பரையும் பெற்றுக் கொள்ள மாட்டார்” என்று சொன்னார்கள்.

## அப்பிள் பழத்தினூடாகப் பார்த்தல்




உமர் மாமா: ஆம் நண்பர்களே! எப்படி இருக்கிறீர்கள்? கற்றல் செயற்பாடுகள் எப்படி நடைபெறுகிறது? மாஷா அல்லாஹ் உங்களை நல்ல நிலையில் காண்கின்றேன்.

ஹசன்: எல்லாம் நல்ல முறையில் நடைபெறுகின்றது. அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உமர் மாமா! நாம் எமது இறுதிப் பாடவேளையில் இறை நம்பிக்கை குறித்து கலந்துரையாடினோம். ஒரு மனிதனின் வாழ்வில் இறை நம்பிக்கை எவ்வளவு முக்கியம் என்பதனை அறிந்து கொண்டோம். எனவேதான் நாம் இறை நம்பிக்கை குறித்து மேலதிகமான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமான புத்தகங்களை வாசிக்கும் நோக்கில் இங்கு வந்தோம்.

உமர் மாமா: நண்பர்களே! முதலில் உங்களை நான் பாராட்டுகின்றேன். இந்த விடயத்தில் என்னால் உங்களுக்கு உதவி செய்ய முடியும். ஒரு மனிதன் ஈமானின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளும் போது அதனை எப்படி பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் யோசிப்பான். ஏனெனில் மனிதன் படைக்கப்பட்ட நோக்கம் அல்லாஹ்வை ஈமான் கொண்டு, அவனை வணங்கி வழிபட வேண்டும் என்பதாகும். உண்மையில் நாங்கள் எமது ஈமானை பலப்படுத்திக் கொள்ளத் தேவை உடையவர்களாக இருக்கிறோம். எமது ரப்பை எமக்கு அறிமுகப்படுத்துகின்ற மூன்று முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. ஆரம்பமாக நாம் அவற்றை அறிந்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

இப்ராஹீம்: அந்த முக்கிய அம்சங்களும் எவை உமர் மாமா?

உமர் மாமா: பிரபஞ்சம், இறைத் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மற்றும் அல்லாஹ்வினால் இறக்கப்பட்ட அல்குர்ஆன் ஆகிய மூன்று அம்சங்களும் எமது ரப்பை எமக்கு அறிமுகப்படுத்தும் மிக முக்கிய அம்சங்களாகும்.

பிரபஞ்சம் எமது ரப்பை எமக்கு அறிமுகப்படுத்தி அவனை நேசிக்கச் செய்யும் ஒரு புத்தகத்துக்கு ஒப்பானதாகும். நாம் பிரபஞ்சம் என்ற அந்த புத்தகத்தை வாசித்து படிப்பினைகள் பெறவேண்டும். பிரபஞ்சத்தில் இருக்கின்ற அத்தனையையும் படிப்பினை கண்ணோட்டத்தில் பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். பிரபஞ்சத்திலிருந்து நாம் எப்படி படிப்பினை பெற வேண்டும் என்று அல்குர்ஆனில் அல்லாஹ் கூறி நபியவர்கள் தனது வாழ்வில் வாழ்ந்து காட்டினார்களோ அவ்வாறே நாமும் பிரபஞ்ச அத்தாட்சிகளிலிருந்து படிப்பினை பெற வேண்டும். இதனை இஸ்லாமிய பரிபாஷையில் "சிந்தனைச் செயல்" என்று அழைக்கிறோம். அன்பு சகோதரர்களே! சிந்தனைச் செயலிலிருந்து ஒரு உதாரணம் சொல்ல விரும்புகின்றீர்களா?

எல்லா மாணவர்களும் ஒரே குரலில் "ஆம்" என்றார்கள். இப்ராஹிம், உமர் மாமா நபிமார்களின் வாழ்வோடு தொடர்புடைய ஒரு உதாரணத்தை எங்களுக்கு சொல்ல முடியுமா? வாசிகசாலையில் பணி புரிகின்றவர்கள், உமர் மாமாவுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆழமாகவும், சுவாரஷியமாகவும் சென்று கொண்டிருப்பதைப் பார்த்து அவர்களுக்கு தேநீர் மற்றும் பிஸ்கெட் வழங்கினார்கள். உமர் மாமா, வாசிகசாலை பணியாளருக்கு நன்றி தெரிவித்தவராக ஆரம்பமாக, தேநீரை இந்த திறமையான மாணவர்களுக்கு வழங்குங்கள் எதிர்காலத்தில் இவர்கள் மிகப்பெரும் அறிஞர்களாக மாறுவார்கள் என்று சொல்லிவிட்டு தனது பேச்சை ஆரம்பித்தார். நன்று, ஏன் முடியாது இப்ராஹிம்! ஆரம்பமாக சூடான தேநீரையும் பிஸ்கட்டையும் சாப்பிடுங்கள். நான் சொல்லப் போகின்ற உதாரணம் நபி இப்ராஹீம் அவர்களோடு தொடர்புபட்டது.

முஸ்தபா தனது நண்பன் இப்ராஹீமை பார்த்து அமைதியாக சொன்னார் இப்ராஹீம் இந்த நிகழ்வு உனது பெயரோடு தொடர்புபட்டது.

# அப்பிள் பழத்தினூடாகப் பார்த்தல்





உமர் மாமா அன்பான குரலால் பின்வரும் அம்சங்களை கூற ஆரம்பித்தார்.

கண்ணியத்துக்குரிய இளைஞர்களே! இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் உங்களைப் போன்ற ஒரு இளைஞராக இருந்தார். அவருடைய காலத்தில் அல்லாஹ்வை ஈமான் கொண்டவர்கள் இருக்கவில்லை. மனிதர்கள் சிலை வணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சிலை வணக்கத்தை பகுத்தறிவுக்கு பொருந்தாத ஓர் அம்சமாக நோக்கினார்கள். எனவே தன்னைப் படைத்த ரப்பை ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார். ஒருநாள் இரவு வானத்திலே நட்சத்திரத்தை கண்டு அது குறித்து சிந்திக்க ஆரம்பித்தார். வானத்தில் அழகாக காட்சியளிக்கும் இந்த நட்சத்திரம் எனது ரப்பாக இருக்க முடியுமா? என்று தனக்குள் கேட்டார். நட்சத்திரம் மறைந்த போது, மறைந்து போகின்றவை எனது இறைவனாக இருக்க முடியாது என்றார். பின்னர் வானத்தில் சந்திரன் உதித்திருப்பதை கண்டார். இது எனது இறைவனாக இருக்க முடியுமா? என சிந்திக்கலானார். காலை நேரம் சந்திரன் அஸ்தமனமாய் இருப்பதைக் கண்டபோது இதுவும் எனது இறைவனாக இருக்க முடியாது என்று கூறியவராக அல்லாஹ்வை நோக்கி இருகரம் ஏந்தி பிரார்த்தித்தார்கள். எனது இறைவனே! நீ என்னை நேரான பாதையில் செலுத்தாவிட்டால் அந்தப் பாதையை என்னால் அடைந்து கொள்ள முடியாது.

அலி ஜான் ஆர்வமாக பின்வருமாறு சொன்னார்: இறுதியில் என்ன நடைபெற்றது? எமது பாட்டன் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் பிரார்த்தனை செய்ததன் பிறகு அல்லாஹ்வின் நேரான வழியினை அடைந்து கொள்ள முடியுமாக இருந்ததா? உமர் மாமா ஆம் என்றார். ஆம் அலி ஜான். நீ வழமை போன்று அவசரப்படுகின்றாய். நான் இப்போது அதனை கூற முயன்றேன். காலையிலே சூரியன் உதித்த பொழுது சூரியன் குறித்தும் சிந்தித்தார். சூரியன் மிகப்பெரியது எனவே இது எனது ரப்பாக இருக்க முடியுமா என்று யோசித்தார். ஆனாலும் அதுவும் மறைவதனை கண்டார் பிரபஞ்சத்தைப் படைத்து பரிபாலிக்கின்ற ஏக இறைவன் மறையாதவன், அஸ்தமிக்காதவன், அழியாதவன், எப்போதும் நிலைத்து நிற்கும் ஆற்றல் படைத்தவன் என்று கூறியவராக வானங்களையும் பூமியையும் படைத்த அல்லாஹ்வை நோக்கி எனது முகத்தை திருப்பி விட்டேன் என்று பிரார்த்தித்தார்.

முஸ்தபா பின்வருமாறு கூறினார் எவ்வளவு அழகான ஒரு வழிமுறை, இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம் பிரபஞ்ச புத்தகத்தை வாசிப்பதன் ஊடாக தனது ரப்பை அடைந்து கொள்ள முயற்சித்தார். இந்த சிந்தனை பயணத்தின் ஊடாக உண்மையான இறைவனிடம் இருக்க வேண்டிய பண்புகளையும் எமக்கு போதித்தார். அலி ஜான் உலகத்திலே சிலர் அல்லாஹ் ஒருவன் இருக்கிறான் என்பதனை ஈமான் கொள்கின்றார்கள் இல்லை. இதை எப்படி பார்ப்பது? என்று கேட்டார். ஆம், சிறந்த ஒரு கேள்வி. இளைஞர்களே! இந்த உலகத்தில் நாம் சோதனைக்காக படைக்கப்பட்டிருக்கின்றோம். இறைவன் எமக்கு தெரிவுச் சுதந்திரத்தை தந்திருக்கிறான். விரும்பினால் அவனை ஈமான் கொள்ளலாம். விரும்பாவிட்டால் ஈமான் கொள்ளாமல் இருக்கலாம். சிலர் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாத்தை போன்று பிரபஞ்சத்தில் அல்லாஹ்வின் இருப்பை சுட்டிக் காட்டுகின்ற அத்தாட்சிகளை பார்த்து அல்லாஹ்வை ஈமான் கொள்கின்றனர். இன்னும் சிலர் வித்தியாசமான காரணங்களை முன்வைத்து அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்வதில்லை. அல்லாஹுத்தஆலா மனிதனுக்கு பகுத்தறிவை வழங்கியதோடு உலகத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தையும் வழங்கி இருக்கின்றான். இதனோடு சேர்த்து அல்லாஹ் உலகத்தை அதிகமான அத்தாட்சிகளாலும், எண்ணிலடங்கா அருள்களாலும் நிரப்பி இருக்கின்றான். எனவே இவற்றைப் பார்த்து ஆய்வு செய்து அல்லாஹ்வை




ஈமான் கொள்வது குறித்த சுதந்திரத்தை அவனுக்கே வழங்கியுள்ளான். ஒரு மனிதன், பிரபஞ்சத்தில் காணப்படும் அத்தாட்சிகளை தூய்மையான உள்ளத்தோடு நோக்கும் பொழுதும், பகுத்தறிவைப் பயன்படுத்தி ஆய்வு செய்யும் போதும் இந்த உலகம் தானாக தோன்றியது என்று முன்வைக்கும் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ள மாட்டான். ஏன் ஒரு சிறிய ஊசி கூட படைப்பாளனின்றி இருக்க முடியாது. அந்த ஊசியைக் கூட திறனாக செய்யக்கூடிய ஒருவர் இருக்கும் போது இந்தப் பிரமாண்டமான பிரபஞ்சத்தை படைத்து பரிபாலிக்கின்ற ஒரு இறைவன் இருக்க வேண்டும் என்பதனை ஏன் ஏற்றுக் கொள்வதில்லை?

இளைஞர்களே! நாம் “அல்லாஹ் ஒருவன் இருக்கிறான்” என்று வார்த்தைகளால் மாத்திரம் சொல்லுவதில்லை. ஏனெனில் அல்லாஹ்வின் இருப்பை முழுப் பிரபஞ்சமும் ஈமான் கொண்டிருக்கிறது. நாம் அல்லாஹ் ஒருவன் இருக்கிறான் என்ற யதார்த்தத்தை ஆதாரங்களோடு முன்வைக்கின்றோம். அதற்குத் தேவையான அத்தாட்சிகளையும் முன்வைக்கின்றோம். ஏனெனில் யதார்த்தத்தில் ஏலவே இருக்கின்ற ஒரு விடயத்தை இருக்கின்றது என்று நிறுவுவது மிகவும் இலகுவானது. முஸ்தபா எனக்கு இந்த விடயம் சரியாக விளங்கவில்லை

என்று சொன்னார். உமர் மாமா பக்கத்தில் இருந்த புத்தக இராக்கையிலிருந்து அகராதியை எடுத்து உமரிடம் நீட்டினார்.

உமர் மாமா: முஸ்தபா! "அல்லாஹ்" என்ற வசனத்தை இந்த அகராதியில் தேடிக் கண்டுபிடிக்க முடியுமா? என்றார்.

முஸ்தபா அகராதியில் அல்லாஹ் என்ற வசனத்தை "அ" என்ற எழுத்தின் உதவியுடன் உடனே கண்டுபிடித்தார்.

முஸ்தபா: உமர் மாமா! நான் உடனே கண்டுபிடித்து விட்டேன். அது இரண்டாவது பக்கத்தில் இருக்கிறது.

உமர் மாமா: "அல்லாஹ்" என்ற வசனத்தை உன்னால் மிக இலகுவாகவும் அவசரமாகவும் கண்டுபிடிக்க முடிந்தது. ஏனெனில் அந்த வசனம் அகராதியில் காணப்படுகின்றது. இப்போது "அல்லாஹ்" என்ற வசனம் அகராதியில் இல்லை என்று உன்னால் நிறுவ முடியுமா? என்று கேட்டார்.

அதற்கு முஸ்தபா இது மிகவும் கஷ்டமான ஒரு விடயம். ஏனெனில் அகராதியில் இந்த வசனம் இல்லை என்று நிறுவுவதற்கு அனைத்து பக்கங்களையும் புரட்டிப் பார்க்க வேண்டும் என்றார்.

ஆம் இளைஞர்களே! எனவே ஏற்கனவே யதார்த்தத்தில் இருக்கின்ற ஒரு விடயத்தின் இருப்பை நிறுவுவது மிகவும் இலகுவானது. இருக்கின்ற ஒரு விடயத்தை இல்லை என்று நிறுவுவது மிகவும் கஷ்டமாகும். என்று விளங்கிக் கொண்டீர்கள். நாங்கள் முஸ்லிம்கள், அல்லாஹ்வின் இருப்பை மிக இலகுவாக நிறுவ முடியும். ஆனால் அல்லாஹ் ஒருவன் இல்லை என்று கூறுகின்றவர்கள் அதனை நிறுவுவது மிகவும் கஷ்டமாகும். உமர் மாமா, மாணவர்களை வாசிகசாலைக்கு வெளியே அழைத்துச் சென்று சூரியனைச் சுட்டிக்காட்டி பின் வருமாறு சொன்னார்.



இளைஞர்களே! உங்களில் ஒருவர் தனது கண்ணை மூடிக்கொண்டு சூரியன் இப்போது மறைந்து விட்டது என்று சொன்னால் யதார்த்தத்தில் சூரியன் மறைந்து விடுமா? மாணவர்கள், இல்லை இல்லை என்றனர். கண்ணை மூடிக்கொண்டவர் மாத்திரம் சூரியனைக் காண மாட்டார். ஆனால் சூரியன் இருந்த இடத்தில் அப்படியே இருக்கும். உமர் மாமா அலி ஜானை பார்த்து அல்லாஹ்வின் அத்தாட்சிகளை பார்க்காமல் கண்களை மூடிக்கொண்டு அல்லாஹ் ஒருவன் இல்லை என்று மறுக்கின்றவர்களின் நிலையை இப்போது விளங்கிக் கொண்டாயா?

## ஈமானுக்கு படித்தரங்கள் உண்டா?


அன்று புதன்கிழமை, வழமை போன்று யூசுப் ஆசிரியருடைய பாடமாக இருந்தது. யூசுப் ஆசிரியர் மாணவர்களின் சுக துக்கத்தை விசாரித்ததன் பின் நுஸைபாவைப் பார்த்து கடந்த வகுப்பில் கேட்ட கேள்வி குறித்து வினவினார். நுசைபா! கடந்த வகுப்பில் ஒரு கேள்வி கேட்டீர்கள் மணி ஒலித்ததனால் அந்த கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் போனது. திரும்பவும் அந்த கேள்வியை ஞாபகமூட்ட முடியுமா?

நுசைபா: சேர்! நான் ஈமானின் படித்தரங்களையும் அதன் வகைகளையும் பற்றி கேட்டேன்?

ரம்மியமான காலைப் பொழுதின் பாடசாலை முற்றத்தின் மரத்தடியில் நாங்கள் பாடத்தை தொடர்வோம் என்று யூசுப் ஆசிரியர் அனைத்து மாணவர்களையும் முற்றத்திற்கு அழைத்துச் சென்றார். அவை கோடை காலத்தின் கடைசி நாட்களாகும். மாணவர்கள் உற்சாகத்தோடு மரத்தடியில் உட்கார்ந்தார்கள். ஆசிரியர் பேச ஆரம்பிக்க முன்னர் மாணவர்களுக்கு செக்கச் செவேர் என்ற சுவையான அப்பிள் பழம் வழங்கினார். முதலாவதாக அப்பிள் பழத்தை சாப்பிடுவோம். அதற்குப் பின்னர் ஈமானின் வகைகள் மற்றும் படித்தரங்களைப் பற்றி பேசுவோம் என்றார் யூசுப் ஆசிரியர். யூசுப் ஆசிரியர், வகுப்பின் மாணவத் தலைவர் சயீதை அழைத்து மாணவர்களுக்கு அப்பிளை பகிர்ந்தளிக்குமாறு வேண்டினார். சயீத் அப்பிள் பழத்தை நண்பர்களுக்கு வழங்கி வைத்தார். ஆசிரியர் மாணவர்களை பார்த்து “பிஸ்மில்லாஹ் என்று சொல்லி சாப்பிடுங்கள்” என்றார்.


# அப்பிள் பழத்தினூடாகப் பார்த்தல்

மாணவர்கள் தங்களது ஆசிரியருக்கு நன்றி தெரிவித்தவர்களாக அப்பிள் பழத்தை சாப்பிட ஆரம்பித்தார்கள். அலி ஜான் ஆசிரியரைப் பார்த்து “அப்பிள் பழம் உண்மையிலேயே மிகவும் சுவையாக இருக்கிறது” என்றார். அப்பிள் பழத்தை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் மாணவர்களை பார்த்து யூசுப் ஆசிரியர்: “அல்லாஹ் இந்தப் பழத்தை எங்களுக்கு அருளாகத் தந்தான் அதற்கு நாங்கள் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அனைவரும் சாப்பிடுகின்ற பழத்தின் வித்தை எரிய வேண்டாம்.” என்று கேட்டுக் கொண்டார். மாணவர்கள் பழத்தை சாப்பிட்டு முடித்ததன் பின் ஆசிரியர் பாடத்தை ஆரம்பித்தார். ஆசிரியர் தனது கையில் நான்கு ஐந்து விதைகளை எடுத்துக் கொண்டதோடு மாணவர்களையும் பழத்தின் விதைகளை அவதானிக்குமாறு வேண்டினார். மாணவர்களே இப்போது நாங்கள் ஈமானின் படித்தரங்கள் மற்றும் அதன் வகைகள் குறித்து கலந்துரையாடப் போகின்றோம். அப்பிள் பழத்தின் விதைகள் இந்த தலைப்பை விளங்கிக் கொள்வதற்கு எமக்கு உதவியாக இருக்கும். இந்த தலைப்பை பின்வருமாறு கையாள்வோம். எமது கையில் இருக்கும் அப்பிள் பழத்தின் ஏதாவது ஒரு விதையை விதைத்தால் முதலில் அந்த விதை நிலத்திற்குள் தளிர்விட ஆரம்பிக்கும். அதற்குப் பிறகு நிலத்துக்கு மேல் மெது மெதுவாக வளர ஆரம்பிக்கும். பின்னர் அதன் தண்டுகள் மெது மெதுவாக வலுவடைந்து நிழல் கொடுக்கும் மிகப்பெரும் ஒரு மரமாக தோற்றமெடுக்கும்.



எனவே இந்த அப்பிள் மரம் வளர்ச்சி அடையும் போது பல படித்தரங்களைத் தாண்டி மெது மெதுவாக வளர்ச்சி அடைந்து வலுவடைகின்றது.

அன்பு நண்பர்களே! ஈமானும் இந்த அப்பிள் மரத்தை போன்றது தான். ஒரு மரம் எப்படி பல கட்டங்களைத் தாண்டி படிப்படியாக வளர்ச்சி அடைகின்றதோ ஈமானும் பல கட்டங்களை தாண்டி படிப்படியாக வளர்ச்சி அடைகின்றது. எனவே ஒரு மனிதன் தனது ஈமானை வளர்ச்சி அடையச்



செய்து பலப்படுத்த முயற்சிக்க வேண்டும். ஆசிரியர், நுசைபா என்ற மாணவியிடம் பின்வரும் கேள்வியை கேட்டார். ஒரு அப்பிள் மரக் கன்றை பிடுங்கி எடுப்பது இலகுவானதா அல்லது வேர்கள் ஆழப் பறந்து பலமடைந்திருக்கும் ஒரு கனமான மரத்தை பிடுங்கி எடுப்பது கஷ்டமானதா? “விருட்சமா வளர்ச்சி அடைந்திருக்கும் மரத்தை பிடுங்கி எடுப்பதுதான் கஷ்டமானது சேர்” என்று நுசைபா பதில் அளித்தாள். அதற்கு ஆசிரியர் சரியாகச் சொன்னீர்கள் என்றார்.

ஈமான் பொதுவாக பலவீனமான ஈமான், பலமான ஈமான் என்று இரண்டு வகைப்படும். இந்த இரண்டு வகையான ஈமானையும் ஒரு உதாரணத்தைக் கொண்டு உங்களுக்கு நான் தெளிவுபடுத்துகின்றேன். அருமை நண்பர்களே! சந்தைக்கு விதவிதமான பெருமளவு வியாபாரப் பொருட்கள் வந்தால் அந்தப் பொருட்கள் அந்த சந்தையிலே இருக்கின்ற குறிப்பிட்ட செல்வந்தனுக்கு சொந்தமானது என இரண்டு வழிகளில் விளங்கிக் கொள்ள முடியும்.

முதல் வழி, இவ்வளவு பெருமளவு வியாபாரப் பொருட்களை குறிப்பிட்ட அந்த செல்வந்தனைத் தவிர வேறு யாராலும் வாங்க முடியாது. எனவே இவை அந்த செல்வந்தனுக்கு

சொந்தமானது என்று மேலோட்டமாக சிந்திப்பது. எந்த ஒரு ஆதாரமும், அத்தாட்சியுமின்றி மேலோட்டமாக சிந்திப்பதன் ஊடாக இந்த முடிவை எடுக்கலாம். ஆனால் ஆசிரியரே! இந்தப் பார்வை மேலோட்டமான ஒரு பார்வை அல்லவா என்றார் யாஸிர் எனும் மாணவர். அதற்கு ஆசிரியர் நீங்கள் சொல்லுவது சரிதான். இது மேலோட்டமாக பார்வையிட்டு வெளிப்படையான ஒரு பொது தீர்ப்பை வழங்குவதாகும். ஏனெனில் இப்படி சிந்திக்கின்ற ஒருவரிடத்திலே இல்லை இல்லை இந்த வியாபார பொருட்கள் மற்றுமொரு செல்வந்தருக்குரியது என்று அல்லது இந்தப் பொருட்களின் ஒரு பகுதி மற்றொருவருக்கு சொந்தமானது என்று சொன்னால் உடனே அவரது சிந்தனையிலிருந்து பின் வாங்குவார். ஏனெனில் அவரிடத்திலே அதனை நிரூபிப்பதற்குரிய எந்த ஒரு ஆதாரமும் இல்லை.

அப்படியாக இருந்தால் இரண்டாம் வழி என்ன என்று யாஸிர் கேட்டார். இரண்டாவது வழிமுறை, ஆழமாக சிந்தித்தல் மற்றும் ஆய்வு முறையும் ஆகும். இந்த முறையை பயன்படுத்துவோர் பொருட்களில் வியாபாரியின் சின்னம் பொறிக்கப்பட்டிருப்பதை பார்ப்பார் உடனே இந்த வியாபாரப் பொருட்கள் சின்னத்தின் சொந்தக்காரரர் கூறியது என்று அறிந்து கொள்வார். இந்த வழிமுறையை பயன்படுத்துகின்றவர் அந்த வியாபார பொருட்கள் யாருக்குரியது என்பதனை மிக உறுதியாக அறிந்து கொள்வார். அவரது அறிவில் சந்தேகம் இருக்க மாட்டாது. யாராவது அவரோடு அந்தப் பொருட்கள் மற்றொருவருக்கு உரியது என வாதிட்டால் உடனடியாக அந்த சின்னத்தை சுட்டிக் காட்டி வியாபாரி, பொருட்களின் உண்மையான சொந்தக்காரரர் குறிப்பிட்ட நபர்தான் என்று சந்தேகம் இன்றி நிறுவுவார்.

அருமை நண்பர்களே! ஈமானும் இரண்டு படித்தரங்களைக் கொண்டது. முதலாவது படித்தரம் “அல்லாஹுத்தஆலா ஒருவன் இருக்கிறான்” என்றும் அவன் ஏகன், இணைதுணை அற்றவன்’’ என்றும் எந்த வித ஆய்விலும் ஈடுபடாமல், தனது பெற்றோர்கள், குடும்பம் மற்றும் அயலவர்களைப் பார்த்து அல்லது கேட்டு ஈமான் கொள்வதாகும். நாம் இதனை பரம்பரையாகப் பெற்ற ஈமான் என்று சொல்கின்றோம். இது பலவீனமான ஈமான் ஆகும். ஏனெனில் இவ்வகையான ஈமானை உடைய ஒருவர் அல்லாஹ்வின் இருப்பையும்

அவன் ஒருவன் என்பதனையும் ஏற்றுக்கொண்ட போதிலும் ஆதாரங்களைக் கொண்டு அதனை பலப்படுத்தாததனால் இலகுவாக சந்தேகங்களுக்கு உட்பட வாய்ப்பு உள்ளது.

இப்ராஹிம் தனது கையை உயர்த்தியவனாக இவ்வகையான ஈமானை உடையவர் தனது ஈமானை பலப்படுத்த முடியுமா என்று கேட்டான். அதற்கு ஆசிரியர் மிகவும் அழகான ஒரு கேள்வி நண்பர்களே! இந்த ஈமானை உடையவர் அல்லாஹ் அனைத்தையும் படைத்து பரிபாலிக்கின்றவன் என உறுதிப்படுத்துவது மிகவும் கஷ்டமாக இருக்கும் எனவே தான் மிக இலகுவாக சந்தேகத்துக்குள் விழுந்து விடுவர்.


ஆம் இளைஞர்களே! நாம் பரம்பரை பரம்பரையாக பெற்றுக்கொண்ட ஈமான் குறித்து அறிந்து கொண்டோம். இப்போது நாம் ஈமானின் படித்தரங்களை நோக்குவோம்.

வகுப்புத் தலைவன் ஸயீத் ஆசிரியரே! நீங்கள் சொன்னவற்றை அடிப்படையாக வைத்து பார்க்கும் பொழுது பலமான ஈமானை அடைய வேண்டுமாக இருந்தால் சிந்தனையும், ஆய்வும் அவசியம் அப்படித்தானே? என்று கேட்டார்.

ஆசிரியர்: ஆம் நிச்சயமாக!

சாரா, பின்வருமாறு சொன்னால், அப்படியாக இருந்தால் ஆய்வு மற்றும் சிந்தனை மூலம் அல்லாஹுத்தஆலா உடைய இருப்பையும் ஏகத்துவத்தையும் உறுதிப்படுத்தும் ஆதாரங்களை எம்மால் அடைந்து கொள்ள முடியும் அப்படித்தானே?

ஆம் மிகவும் அழகாகச் சொன்னீர் என்று சொன்ன ஆசிரியர் பின்வருமாறு தனது பேச்சை தொடர்ந்தார். பலமான ஈமானின் சிறப்பம்சங்கள் வெளிப்பட ஆரம்பித்துவிட்டது. ஆம் அருமை நண்பர்களே! பலமான ஈமானின் மிக அடிப்படையான அம்சம் சிந்தனையும், ஆய்வுமாகும். சிந்திப்பதன்



ஊடாகவும் ஆய்வு செய்வதன் ஊடாகவும் அல்லாஹ்வின் இருப்பையும், ஏகத்துவத்தையும், மிகச்சரியாக அறிந்து கொள்ள முடியும்.

அந்த படித்தரத்தை அடையும் ஒவ்வொருவரும் அல்லாஹ் ஒருவனே இந்த பிரபஞ்சத்தை படைத்து பரிபாலிக்கின்றவன் என்பதனை மிக உறுதியாக அறிந்து கொள்வார். ஏனெனில் அதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆதாரங்கள் அவனிடம் இருக்கின்றன. அந்த ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு முழுப் பிரபஞ்சத்தையும் படைத்து திட்டமிடுகின்றவன் அல்லாஹ் ஒருவனே என்று நிறுவ முடியும். எனவே அவன் எந்த ஒரு சந்தேகமும் இன்றி அல்லாஹ்வை ஈமான் கொள்கிறான். பிரபஞ்சத்தில் எந்த ஒரு அம்சத்தை பார்த்தாலும் அல்லாஹ்வின் இருப்பை சுட்டிக் காட்டுகின்ற ஆதாரங்களைக் கண்டு கொள்வான். இந்த படித்தரத்தை அடைகின்ற பொழுது ஆட்டம் காணாத பலமான ஈமானுக்கு சொந்தக்காரனாக அவன் மாறுகின்றான். எனவே இவ் ஈமான் எமது உள்ளத்தில் வேரூன்றுகின்ற போது அதனை அவனது உள்ளத்திலிருந்து கழற்றி எடுப்பது மிகவும் கஷ்டமானதாகும்.

வகுப்பறையில் மிகவும் அமைதியாக இருக்கும் பாத்திமா என்ற மாணவி உள்ளத்தில் ஈமான் எப்படி ஆழமாக பதிகின்றது என்பது குறித்து இன்னும் சில உதாரணங்களைக் கொண்டு விரிவாக விளக்க முடியுமா ஆசிரியரே எனக் கேட்டாள். அப்போது அலி ஜான் ஆம் ஆசிரியரே பாத்திமாவின் கேள்வியை நானும் கேட்க விரும்புகின்றேன். ஏனெனில் ஈமான் எமது உள்ளங்களில் மிக ஆழமாகப் பதிந்து சந்தேகத்துக்கு இடமில்லாத ஈமானாக மாற வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன்.


அருமையான ஒரு கருத்து, இந்த விடயத்தில் அடுத்தவர்களுக்கு உதவி செய்வது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். அருமை நண்பர்களே! இந்த விடயத்தை பின்வருமாறு சிந்தியுங்கள், அதாவது ஈமான் எமது உள்ளங்களின் ஆன்மீக உணவு என்று வைத்துக் கொள்ளுங்கள். இப்போது அந்த மேசையில் இருக்கின்ற அப்பிள் பழத்தை அவதானியுங்கள். பாத்திமா! அந்த அப்பிள் பழத்தை கையில் எடுங்கள் இப்போது யாராவது ஒருவர் அந்த மாணவியின் கையில் இருக்கின்ற அப்பிள் பழத்தை தனது பலத்தை பயன்படுத்தி எடுக்க முடியுமா? இன்று ஆசிரியர் கேட்டார்.

பாத்திமா: ஆம் ஆசிரியரே பலத்தை பயன்படுத்தி இதனை எடுக்க முடியும்.

ஆசிரியர்: ஆம் எடுக்க முடியும். இப்போது அந்த அப்பிள் பழத்தை நீங்கள் சாப்பிட்டு விட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இப்போது அந்த பழம் சமிபாடடைந்து உங்களது ரத்தத்தோடு கலந்து விட்டது. இப்போது யாராவது அதனை மீள எடுக்க முடியுமா?

பாத்திமா: முடியாது ஆசிரியரே! அந்தப் பழம் சமிபாடடைந்து எனது ரத்தத்தோடு கலந்து விட்டதன் பிறகு எந்த சக்தியால் அதனை எடுக்க முடியும்!?


ஆசிரியர்: இப்படித்தான் பலமான ஈமானும் ஒரு மனிதனுடைய உள்ளத்தில் ஆழமாக நன்கு பதிந்ததன் பிறகு அதனை யாராலும் ஆட்டி அசைக்க முடியாது. ஆல மரத்தை போன்று மிக உறுதியாக இருக்கும். எனவே ஆதாரங்களை அடிப்படையாக வைத்து தனது ஈமானை பலப்படுத்தி



ஈமானியத்துடன் வாழ்கின்ற ஒருவர் இப்படித்தான் இருப்பார். அலி ஜான், ஆர்வத்தோடு ஆசிரியரே! இந்த வகையான ஈமானை யாராலும் அசைக்க முடியாது. எமது உள்ளங்கள்

அல்லாஹ்வின் கரங்களில் இருக்கிறது என்றார். இதனை செவிமடுத்த சயீத், கனமான தொணியில், சில மனிதர்கள் ஈமான் விடயத்தில் ஏன் மிகவும் பலவீனமானவர்களாக இருக்கின்றனர் என்று நான் இப்போது அறிந்து கொண்டேன். எங்களது ஈமான் பலவீனமாக இருக்கின்ற பொழுது அது ஆபத்தான ஒரு நிலையில் இருக்கும். எனவே ஈமானை பலப்படுத்திக் கொள்ள நாம் முயற்சி செய்ய வேண்டும். என்று சொன்ன போது, ஆசிரியர் தனது தலையால் ஆம் என்று சைக்கை செய்தார்.

அருமை மாணவர்களே! பலமான ஈமானை உடைய ஒரு மனிதர் பிரபஞ்சத்தில் தான் காணும் அனைத்து அம்சத்திலும் அல்லாஹ்வின் இருப்பையும் அவனது ஏகத்துவத்தையும் நிறுவுகின்ற ஓர் அத்தாட்சியை காண்பான். உதாரணமாக நாங்கள் படிக்கும் இந்தப் பாடசாலைக் கட்டிடத்தை அவதானியுங்கள். இந்தப் பாடசாலை கட்டப்பட்டு பல நூற்றாண்டுகள் கடந்து விட்டன. இந்த பாடசாலை கட்டிய பொறியியலாளரையோ அல்லது தச்சனையோ நாம் காணவில்லை. ஆனாலும் இந்தப் பாடசாலையை கட்டுவதற்கு நிச்சயமாக ஒரு பொறியியலாளரின் தரப்பால் திட்டமிட்டு ஒரு தச்சன் இதனை கட்டி இருக்கிறார் என்பதில் சந்தேகம் இருக்கிறதா? மாணவர்கள் அனைவரும் சந்தேகம் இருக்க முடியாது, ஏனெனில் இந்த அழகான கட்டிடம் தானாக எப்படி உருவாக முடியும் என்றனர்.



ஆம் அருமை நண்பர்களே சரியாக சொன்னீர்கள், ஏனெனில் கட்டிடம் கட்டப்படுவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கின்ற இந்த கற்கள் தானாக ஒன்று சேர்ந்து, அவைகளாகவே தன்னைத்தானே கட்டிக் கொண்டிருக்க முடியாது. ஏனெனில் இந்த இடத்தில் மனிதர்கள் வாழப் போகின்றார்கள் என்று அறிந்த ஒரு மனிதர்தான் இதனை கட்டியிருக்க வேண்டும் என்பதனை அனைத்து மனிதர்களும் அறிவார்கள். எனவே முதலாவதாக, கட்டிடத்தின்

தோற்றம் எப்படி அமைய வேண்டும். அதன் கூரை எவ்வளவு உயரத்தில் இருக்க வேண்டும்.

என்ற விடயங்களை பொறியியலாளர் திட்டமிட்டு இதனை கட்டியிருக்க வேண்டும். நாம் இந்த கட்டிடத்தை கட்டிய பொறியியலாளரை எம் கண்களால் காணாவிட்டாலும் இந்த கட்டிடத்தின் அழகிய தோற்றம், கட்டிடத்தின் ஒழுங்கு என்பவற்றை பார்த்து இந்த கட்டிடத்தை கட்டிய பொறியியலாளர் எப்படிப் பட்டவர் என்றும் அவரின் திறமை குறித்தும் அறிந்து கொள்ள முடியும்.

## அப்பிள் பழத்தைப் பார்க்க வேண்டுமா அல்லது அப்பிள் பழத்தினூடாகப் பார்க்க வேண்டுமா?

பாடம் மிகவும் உற்சாகமாக சென்றுக் கொண்டிருந்தது, சயீத் மீண்டும் ஒருமுறை ஆசிரியரே! எமது ஈமானை பலப்படுத்தக் கூடிய இன்னும் ஒரு உதாரணத்தை கூற முடியுமா? என்றார். அதற்கு ஆசிரியர் கட்டாயமாக என்று சொல்லிவிட்டு பின்வருமாறு தொடர்ந்தார். உதாரணமாக நாம் சாப்பிடுகின்ற அப்பிள் பழத்தை நோக்குவோம். பலமான ஈமானை உடையவர் அப்பிள் பழம் குறித்து ஆழமாக சிந்திப்பார். பின்னர் மனிதர்களுடைய ரசனை உணர்வுகளை பூரணப்படுத்தக்கூடிய சுவை, மணம், நிறம் இருப்பதைப் பார்ப்பார். நாங்கள் அப்பிள் பழத்தை சாப்பிட்டும் பொழுது அதனை அவதானிக்கவில்லையா? பெரியதோர் அப்பிள், அழகான தோற்றம், சுவையான பழம், அதேபோன்று சிறந்த வாசனை உடைய ஒரு பழமாக அது இருந்தது. பின்னர் மனிதன் இந்த அப்பிள் பழத்தில் காணப்படும் அத்தனை விஷேட அம்சங்களினதும் மூலம் எதுவாக இருக்க முடியும் என்று ஆராய்வான். பின்னர் இந்த அனைத்து சிறப்பம்சங்களும் மனிதனை அறிந்த அவனை உதாரணமாக எமது உடல் நலத்திற்கு எந்த வகையான ஊட்டச்சத்து அவசியம் என்று அறிந்த ஒருவனே அந்த அப்பிள்பழத்தை எமக்கு தந்துள்ளான். பின்னர் இந்த அப்பிள் பழம் வளர்வதற்கு காரணமாக இருந்த

# அப்பிள் பழத்தினூடாகப் பார்த்தல்



காற்று, நீர், மண் போன்றவற்றை நோக்குவான். அதிலே பொதிந்துள்ள இவ்வளவு சிறப்பம்சங்களை கொண்ட ஒரு அப்பிள்பழத்தை இந்தக் காரணிகளால் உருவாக்க முடியுமா? என்று யோசிப்பான். இந்த காரணிகளுக்கு எத்தகைய ஒரு ஆற்றல் இருக்கிறது? பின்னர் இந்தக் கேள்விக்கான விடையை தேடுவான். இறுதியாக இவ்வளவு ஊட்டச்சத்துக்களைக் கொண்ட சிறப்பான இந்த அப்பிள்பழத்தை நீர், மண், காற்று போன்றவற்றால் படைக்க முடியாது என்ற முடிவுக்கு வருவான்.

யூசுப் ஆசிரியர் ஒரு சில நிமிடம் அமைதியாக இருந்து மாணவர்களின் கவனத்தை தன் பக்கம் ஈர்த்தவராக மீண்டும் தொடர்ந்தார். அன்பு நண்பர்களே! இங்கு ஒரு விடயத்தை எந்தக் கோணத்தில் பார்க்கின்றோம் என்பதும் மிக முக்கியமானதாகும். அப்பிள்பழத்தை பார்ப்பதா அல்லது அப்பிள்பழத்தினூடாக பார்ப்பதா இவை இரண்டும் வித்தியாசமான கண்ணோட்டங்கள் ஆகும். இரண்டு வகையான பார்வை இருக்கின்றது. அப்பிள் பழத்தை மேலோட்டமாக பார்த்தால் அப்பிள் பழத்திலே காணப்படும் அம்சங்களை அறிந்து கொள்வோம் அதற்கு அப்பால் சென்று அதனைப் படைத்தவனை பற்றி புரிந்து கொள்ள மாட்டோம். அந்த அப்பிள் பழத்தில் இருக்கும் பிரயோசனமான ஊட்டச்சத்துக்கள் குறித்து பேசுவோம் ஆனால் பயனுள்ள அந்த ஊட்டச்சத்துக்களை இந்த அப்பிள்பழத்தில் ஏற்படுத்தியவர் யார் என்ற சிந்தனை தோன்றாது. எனவே அப்பிள் பழத்தை அல்லாஹுத்தஆலா படைத்திருக்கின்ற நோக்கத்தை பரிபூரணமாக அறிந்து கொள்ள முடியாமல் போகும்.

அலி ஜான், புது விடயங்களை கற்றுக்கொண்ட சந்தோஷத்தில் பின்வருமாறு சொன்னார், இந்த விடயத்தோடு சம்பந்தப்பட்ட ஒரு அம்சத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள முடியுமா? எங்களது பாடத்துக்கும் அது வழு சேர்க்கும் என்று நான் நினைக்கின்றேன். யூசுப் ஆசிரியர் தலையை அசைத்து அனுமதி வழங்கியதும் அலி ஜான் பின்வருமாறு கூறினார் எனது தாயார் என்னை விட ஒரு வயது குறைந்த எனது சகோதரிக்கு வார இறுதியில் கேக் சமைத்தார். அச் சமயம் பாட்டனாரும் எமது வீட்டுக்கு வந்திருந்தார். கேக் சொக்கலேட்,

க்ரீம் போன்றவைகளால் தயாரிக்கப்பட்டிருந்ததனால் மிகவும் ருசியாக இருந்தது.

அப்போது முஸ்தபா, அலி ஜானைப் பார்த்து நீ கேக் பற்றி அழகாக வர்ணிக்கின்ற பொழுது எமது வாய் ஊறுகிறது என்றார். மன்னிக்கவும் நண்பர்களே! நீங்கள் சொல்வது சரிதான் ஆனாலும் இந்த விடயத்தை இப்படித்தான் வர்ணிக்க வேண்டும்.

எனது தாய் கடுமையான வேலைப்பளுக்களுக்கு மத்தியில் இதனை செய்திருந்தார். நாம் கேக்கை சாப்பிட ஆரம்பித்த பொழுது எனது பாட்டன், என்னையும் எனது சகோதரியையும் பார்த்து சற்று தாமதிக்குமாறு வேண்டிக் கொண்டார். நாமோ, பாட்டனாரே அவசரமாக சாப்பிட அனுமதி தாருங்கள் என்றோம்.

பாட்டன், சகோதரியைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.

பாட்டன்: அருமை மகளே! இந்த சுவையான கேக்கை உமக்கு செய்து தந்தவர் உம்மை நேசிக்காமல் இருக்க முடியுமா?

எனது சகோதரி தாயை பார்த்தவளாக பின்வருமாறு கூறினாள்.

சகோதரி: பாட்டனாரே! அது எப்படி முடியும்!? எனது தாய் என்னை மிகவும் நேசிக்கின்றார்.

பாட்டன்: சரியாகச் சொன்னீர்கள், உங்களது தாய் உங்களை மிகவும் நேசித்ததினால்தான் உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப சுவையான கேக்கை உங்களுக்கு செய்திருக்கிறார் அப்படித்தானே?

நாம் ஆம் என்றோம்.

ஆம் அருமை பேரக்குழந்தைகளே! இன்னும் சற்று நேரம் பொறுமையாக இருங்கள். இப்போது நான் சொல்லப் போகின்ற விடயத்திற்கு நன்றாக செவிசாயுங்கள். ஏனெனில் இதனை வாழ்நாள் முழுக்க மறக்க மாட்டீர்கள்.

இப்போது இதனை இப்படி சிந்திப்போம்: அதாவது



நீங்கள் இந்த கேக் எவ்வளவு சுவையாக இருக்கிறது! என்று சொன்னால்தான் உங்களது தாயை அதிகம் ஞாபகப் படுத்துவீர்களா? அல்லது இந்தக் கேக்கை எங்களது தாய் எவ்வளவு சுவையாக செய்திருக்கிறார் என்று சொல்வதினாலா?

நாம் இரண்டாவது கூற்றை ஆதரித்தோம்.

பாட்டன்: ஆம் எனது புத்திசாலிக் குழந்தைகளே! இரண்டாவது பார்வை முதல் பார்வையை விட மிகவும் வித்தியாசமானது. உங்களது அருமைத் தாய் உங்கள் மீது கொண்ட அன்பு, பாசம், கருணை காரணமாகவே தனது வேலைபளுக்களுக்கு மத்தியிலும் உங்களுக்காக இந்த கேக்கை தயாரித்துள்ளார் என்பதை இரண்டாவது பார்வையின் மூலமே அறிந்து கொள்ள முடிகிறது. “கேக் எவ்வளவு ருசியானது அல்லது கேக் எவ்வளவு ருசியாக இருக்கிறது” என்று சொன்னால் கேக்கை செய்தவரைப் பற்றி நீங்கள் சிந்திக்க மாட்டீர்கள். மாறாக, “நான் விரும்புவது போன்று இந்த கேக் எவ்வளவு ருசியாக செய்யப்பட்டிருக்கின்றது” என்று சொன்னால் இந்த கேக்கை செய்த உங்கள் தாயை ஒரு போதும் மறக்க மாட்டீர்கள். ஆம் இப்போது பிஸ்மில்லா சொல்லி கேக்கை சமைத்த உங்கள் தாய்க்கும் நன்றியை கூறிக் கொண்டு கேக்கை சாப்பிட்டுவோம். அதற்குப் பிறகு நீங்கள் மிகவும் விரும்பக்கூடிய உங்களுக்காக நான் கொண்டு வந்த பரிசுப் பொருட்களை தருவேன். மற்றும் ஒரு சந்தர்ப்பத்தில் பிரபஞ்சம் பற்றி சிந்திக்கின்ற பொழுது இந்தப் பார்வையை எப்படி பயன்படுத்த முடியும் என்பதனை விளங்கப்படுத்துகின்றேன் இன்ஷா அல்லாஹ். ஆசிரியரே! நீங்கள் முன்வைத்த அப்பிள் பழ உதாரணத்தின் மூலம் பாட்டன், எமக்கு கேக்கை

பார்த்தல் மற்றும் கேக்கினூடாக பார்த்தல் என்ற இரண்டு பார்வைக்கும் மத்தியில் இருக்கும் வேறுபாட்டை தெளிவுபடுத்த முயற்சித்திருக்கின்றார் என்பதனை மிகவும் நன்றாக புரிந்து கொண்டேன். என்றார்.

யூசுப் ஆசிரியர் புன்னகைத்தவராக பின்வருமாறு சொன்னார்.

அலி ஜான்! உங்களது பாட்டனார் உங்களை மிகவும் நேசிக்கிறார் என்பது எனக்குத் தெரியும். உங்களது பாட்டனார் இன்னுமொரு விடயத்தையும் உங்களுக்கு தெளிவுபடுத்த விரும்பியிருக்கிறார்.

அலி ஜான்: எந்த விடயம் ஆசிரியரே!

யூசுப் ஆசிரியர்: பரிசுப் பொருட்களைப் பார்த்தல் மற்றும் பரிசுப் பொருட்கள் ஊடாக பார்த்தல் என்ற விடயம்.

அலி ஜான்: ஆம் ஆசிரியரே! சரியாக சொன்னீர் இந்த விடயம் எனது சிந்தனைக்கு தோன்றவில்லை.

பாடத்தை மிக கவனமாக செவிமடுத்துக் கொண்டிருந்த சயீத், ஆசிரியரே! உண்மையில் இது வித்தியாசமான ஒரு பார்வை. ஒரு மனிதனை தனது படைப்பாளனை நோக்கி அழைத்துச் செல்லும் ஒரு பார்வை. மிகவும் நன்றி. பாடவேளை முடிவடைய சிறிது நேரமே இருந்தது. ஆசிரியர் மாணவர்களை பார்த்து நண்பர்களே! நாளை உங்கள் அனைவருக்கும் ஒரு சந்தோஷமான செய்தி இருக்கிறது என்றார். உடனே மாணவர்கள் ஆர்வத்துடன் அந்த செய்தி என்ன ஆசிரியரே!? என்று கேட்டனர். அதற்கு யூசுப் ஆசிரியர் நாளை வரை ஆர்வத்துடன் எதிர்பார்த்திருங்கள். நாளை காலை பாடசாலைக்கு வருகை தந்ததும் உங்களுடன் அந்த மகிழ்ச்சியான செய்தியை பகிர்ந்து கொள்வேன் என்றார் ஆசிரியர்.

மாணவர்கள், யூசுப் ஆசிரியர் நாளை அவர்களோடு பகிர்ந்து கொள்ள இருக்கின்ற செய்தி என்னவாக இருக்கும் என்ற சிந்தனையோடு வீடுகளுக்கு சென்றார்கள். வகுப்பு ஆசிரியராக இருந்த யூசுப் ஆசிரியர் தமக்கு கூற இருக்கும் அந்த மகிழ்ச்சியான செய்தி என்ன என்பதனை அறிந்து

கொள்ள மாணவர்கள் உண்மையிலேயே மிகவும் ஆர்வமாக இருந்தார்கள். ஆனாலும் மாணவர்களால் எதனையும் செய்ய முடியாமல் இருந்தது. மாணவர்களில் ஒரு பகுதியினர், வீட்டுக்குச் சென்று சாப்பிட்ட பின்னர் பாடசாலைக்கு முன்னே இருக்கும் வாசிகசாலையில் சந்திப்போம் என்று பேசிக் கொண்டார்கள். பாடசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிய பாத்திமா, தன் தாய்க்கு சலாம் கூறி விட்டு சீருடையை களைந்து வீட்டில் அணியும் ஆடையை அணிந்து கொண்டாள். பின்னர் தனது தாயின் கரங்களால் சமைக்கப்பட்டிருந்த உணவை பிஸ்மில்லாஹ் என்று சாப்பிட ஆரம்பித்தாள். உடனே பாடசாலையில் கற்ற அப்பிள் பழத்தைப் பார்த்தல் மற்றும் அப்பிள் பழத்தின் ஊடாக பார்த்தல் என்ற உதாரணம் அவளது சிந்தனைக்கு வந்தது.

அருமைத் தாயே! உணவை மிக ருசியாக சமைத்து இருக்கிறாய் மிகவும் நன்றி.

தாய்: அல்லாஹ் உனக்கு தேக ஆரோக்கியத்தை தருவானாக. எப்படி இருக்கிறாய்? இன்றைய நாள் எப்படி கழிந்தது? என்ற கேள்விகளோடு தாய் தனது மகள் பாத்திமாவுடன் பேச ஆரம்பித்தாள். மகளே இன்று ஆசிரியரிடம் கேள்விகள் கேட்டாயா? என்று கேட்ட தாய், அருமை மகளே! நீங்கள் கேள்வி கேட்காவிட்டால் பதில்கள் கிடைக்க மாட்டாது. எனவே பாடத்தில் கேள்வி கேட்பது மிக முக்கியமானது என்று எமது முன்னோர்கள் கூறி இருக்கிறார்கள்.

பாத்திமா: ஆம் அருமை தாயே! நான் கேள்வி கேட்டேன் என்று கூறிவிட்டு யூசுப் ஆசிரியரின் பாடத்தில் கற்றுக்கொண்ட விடயங்களை தாய்க்கு மிக அழகாகவும், உற்சாகமாகவும் சுருக்கமாகவும் முன்வைத்தாள்.

தாயே எமது ஆசிரியர் நாளை எங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான ஒரு செய்தி கூறுவேன் என்றார். அந்தச் செய்தி என்னவாக இருக்கும் என்று நானும் எனது நண்பர்களும் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். எங்களுடைய வகுப்புக்கு மாத்திரம் அந்த செய்தியை சொல்லுவாராம்...

தாய்: ஒரு விடயத்தை ஆர்வத்தோடு எதிர்பார்த்திருப்பது

மிகவும் நல்லது. ஆனால் பொறுமையாக இருப்பது அதைவிட சிறப்பான ஒரு அம்சமாகும். சற்று பொறுமையாக இருங்கள். நாளை அந்த செய்தி என்னவென்று அறிந்து கொள்ளும் போது நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள்.

பாத்திமா: தாயே நான் நண்பர்களோடு நான்கு மணிக்கு பாடசாலைக்கு முன்னால் இருக்கும் வாசிகசாலையில் ஒன்று கூட வருவேன் என்று அவர்களுக்கு வாக்குறுதி அளித்தேன். நீங்கள் அனுமதி தருவீர்களானால் சென்று வருகிறேன்.


தாய்: அனுமதி தருகின்றன். நேர காலத்தோடு சென்று திரும்பி வரவேண்டும்.

## பனித்துளி, அருமையான பூனை

பாத்திமா வாசிகசாலைக்கு குறிப்பாக பனித்துளி பூனையை பார்ப்பதற்காக சென்றாள். மாணவர்கள் அனைவரும் மாலை 4 மணி அளவில் வாசிகசாலையில் சந்தித்தார்கள். அஸ்மா, நசீபா, ரையான், சாரா அனைவரும் வாக்களித்தது போன்று சரியான நேரத்துக்கு வந்திருந்தார்கள். வாசிகசாலை அமைதியாக இருந்தது. வாசிகசாலையின் வாயிலில் பனித்துளி அமர்ந்திருந்தது. பனித்துளி இன்று வெள்ளை வெளேரென்று காட்சியளித்துக் கொண்டிருந்தது. அதன் மீது இருக்கும் முடியில் சூரியஒளி பட்டு பிரகாசித்துக் கொண்டிருந்தது. மாணவர்கள் அங்கே சமூகமளித்த போது வாசிக சாலையில் யூசுப் ஆசிரியர் இருப்பதைக் கண்டார்கள். ஆசிரியர் உமர் மாமாவுடன் ஆழமான ஒரு கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். மாணவர்கள் அவர்களுக்கு ஸலாம் சொன்னார்கள். பாத்திமா அமைதியான ஒரு மாணவி ஆனால் சரியான நேரத்தில் சரியான கேள்வி கேட்பதில் கெட்டிக்காரியாக இருந்தாள். அவள், வாசிக சாலை அமைதியாக இருப்பதனையும், ஆசிரியர் வாசிக சாலையில் சமூகம் தந்திருப்பதையும் கண்டு இந்த அருமையான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நீண்ட நாட்களாக சிந்தனையில் இருக்கும் ஒரு கேள்வியை கேட்க விரும்பினாள்.

உடனே உமர் மாமாவை பார்த்து, உமர் மாமா ஒரு கேள்வி கேட்க முடியுமா என்றாள்.

அதற்கு உமர் மாமா, ஆம் தாராளமாக கேட்க முடியும் மகளே! என்றார்.



பாத்திமா: உங்கள் பூனைக்கு பனித்துளி என்ற பெயரை ஏன் வைத்தீர்கள்?

உமர் மாமா: ஆம் நீ சொல்வதும் சரிதான், ஏன் வேறு ஏதாவது பெயரை வைக்காமல் பனித்துளி என்று வைத்தீர். இந்தக் கேள்வியின் பதிலை யூசுப் ஆசிரியரும் அறிவார். எனவே பதிலை யூசுப் ஆசிரியர் சொல்லட்டுமா அல்லது நான் சொல்லவா? யூசுப் ஆசிரியர் மரியாதையாக உமர் மாமாவைப் பார்த்து தயவு செய்து நீங்களே இதற்குரிய பதிலை சொல்லுங்கள் என்றார்.

உமர் மாமா: பாத்திமா மகளே! அது குளிர் காலமாக இருந்தது. பனி கொட்டும் மிகவும் குளிரான ஒரு மாலை பொழுதில் இந்த வாசிக சாலையில் யூசுப் ஆசிரியர் போன்ற எனது நண்பர்களோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். திடீரென்று அளவுக்கதிகாக பனி கொட்ட ஆரம்பித்தது. பனி கொட்டும் காட்சி மிகவும் அழகாகவும் கவர்ச்சியாகவும்

இருந்ததனால் நானும் நண்பர்களும் கொட்டும் பனியை கண்டு களிக்க வெளியே சென்றோம். பனி கொட்டும் போது பறந்து பறந்து ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொள்ளாமல் வெவ்வேறு இடங்களில் விழுந்து கொண்டிருந்தது. அப்போது எமக்கு மத்தியில் ஒரு கருத்துப் பரிமாறல் ஆரம்பித்தது. பனித்துளிகள் ஒவ்வொன்றும் தனித்துவமானவை என்றும் வானிலிருந்து பூமியில் விழும் இந்தப் பனித்துளிகள் ஒன்று மற்றொன்றை விட வித்தியாசமானது என்றும் பேசிக் கொண்டிருந்தோம். இந்த வேறுபாடுகள் எமது இறைவனின் ஏகத்துவத்தையும் அவனது விசாலமான அறிவையும் சுட்டிக் காட்டுகின்றது என்று கதைத்துக் கொண்டிருக்கின்ற பொழுது திடீரென்று ஒரு நிகழ்வு நடந்தது. மாணவர்கள் ஆர்வமாக என்ன நடந்தது என்று கேட்டார்கள்.





உமர் மாமா: திடீரென்று வாசிக சாலையின் கதவுக்குப் பக்கத்தில் வெள்ளை வெளேர் என்று அழகியதொரு

பூனைக்குட்டி தோன்றியது. அதனை பார்க்க மிகவும் பசியாக தென்பட்டமையா உடனே அதனை உள்ளே தூக்கி எடுத்தோம். குளிர்காலமாக இருந்ததால் அதனை நான் ஒரு துணியில் சுற்றி அதன் உடலை சூடாக்க ஆரம்பித்தோம். பசியைப் போக்குவதற்காக பால் கொடுத்தோம். பூனை வயிறு நிரம்பியதன் பிறகு குதூகலமாக விளையாட ஆரம்பித்தது. இந்த காட்சியைப் பார்த்த நாங்கள் பூனைக்குட்டியை நேசிக்க ஆரம்பித்தோம். இந்த பூனை குட்டிக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது, சிலர் அதற்கு முத்து என்று பெயர் வைக்கலாம் என்றார்கள், சிலர் பஞ்சு என்று பெயர் வைப்போம் என்றார்கள். யூசுப் ஆசிரியர் அதிகமாக பனி கொட்டும் பொழுது எம்மை நோக்கி வந்த இந்த விருந்தாளிக்கு பனித் துளி என்று பெயர் வைப்போம் என்றார். உடனே அனைவரும் இந்தப் பெயரை மிகவும் பொருத்தமானதாகக் கருதினோம். அதற்குப் பிறகு எப்போதும் இந்த பூனைக் குட்டியை பனித்துளி என்று அழைக்க ஆரம்பித்தோம். பூனைக்கும் இந்தப் பெயர் விருப்பம் போல் தெரிகிறது.

இப்படி கதைத்துக் கொண்டிருந்த பொழுது பூனை உமர் மாமாவின் மடியில் பாய்ந்து அமர்ந்தது. அந்த இடத்தில் இருந்த அனைவரும் இதனைப் பார்த்து சிரித்தார்கள். தேநீர் அருந்தும் போது அஸ்மா, நானும் ஒரு கேள்வி கேட்க முடியுமா ஆசிரியரே! என்று யூசுப் ஆசிரியரைப் பார்த்து பின்வரும் கேள்வியை கேட்டாள்.

ஆசிரியரே! ஒவ்வொரு பனித்துளியும் அல்லாஹ் ஏகத்துவத்தை சுட்டிக் காட்டுகிறது என்று சொன்னோம். அதேபோல் அல்லாஹ்வின் ஏகத்துவத்தையும், இருப்பையும் சுட்டிக்காட்டுகின்ற மற்றும் ஒரு உதாரணம் சொல்ல முடியுமா?

யூசுப் ஆசிரியர்: சிறந்த ஒரு கேள்வி கேட்டிருக்கிறாய். இங்கு அமர்ந்திருக்கும் ஒவ்வொருவரினதும் முகங்களை அவதானியுங்கள்.




இந்த சந்தர்ப்பத்தில் பூனையும் மிக நுணுக்கமாக அவதானிப்பது போன்று இருந்தது.

யூசுப் ஆசிரியர்: எங்களுக்கு மத்தியில் நூற்றுக்கு நூறு வீதம் ஒன்றுபோல் இருக்கும் முகங்கள் இருக்கிறதா?

மாணவர்கள்: இல்லை

யூசுப் ஆசிரியர்: இஸ்தான்புல் நகரில் இருக்கிறார்களா?

மாணவர்கள்: இல்லை

யூசுப் ஆசிரியர்: துருக்கியில் இருக்கிறார்களா?

மாணவர்கள்: இல்லை

யூசுப் ஆசிரியர்: ஆம் மாணவர்களே! அனைத்து மனிதர்களுடைய முகங்களும் வித்தியாசமானதாக, வேறுபட்டு இருப்பதன் மூலம் அல்லாஹ்வின் இருப்பையும், அவனது ஏகத்துவத்தையும் அறிந்து கொள்ள முடியும். ஒரு முகம் வெறுமனே ஒருவருக்கு மாத்திரம் வழங்கப்படும். அவருக்கு வழங்கப்பட்ட அந்த முகம் அவரது முன்னோர்களுக்கோ

அல்லது பின்னால் வந்தவர்களுக்கோ வழங்கப்பட மாட்டாது. ஒவ்வொருவருடைய முகச்சாயலும் அடுத்தவரின் முகச்சாயலில் இருந்து மிகவும் வித்தியாசமானதாகும். ஏனெனில் ஒவ்வொரு மனிதனினதும் சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டிருக்கும் DNA வித்தியாசமானது. அது அவனுக்காக மாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது. இதனை முழு மனிதர்களினதும் சிறப்பியல்புகளை அறிந்து, முகங்களில் காணப்படும் சாயல்களை பிரித்தறியக்கூடிய ஒருவனால் மாத்திரமே படைக்க முடியும். எனவே இந்த சக்தி வெறுமனே அல்லாஹ்வுக்கு மாத்திரம் உரியதாகும். முழு மனிதர்களையும் படைத்து அனைவரினதும் சிறப்பியல்புகளையும் அறிந்த ஒவ்வொருவருக்கும் ஒப்பற்ற தனித்தனி முகங்களை அருளாக வழங்குகின்றான். அனைத்து முகங்களும், ஏகனான அல்லாஹ்வின் விசாலமான அறிவின் வெளிப்பாடாக அமையாவிட்டால் ஒவ்வொருவரினதும் முகங்கள் அடுத்தவர்களோடு ஒன்றுபட்டு குழப்பமான ஒரு நிலை ஏற்படும். எனவே முதல் மனிதன் ஆதம் அலைஹிஸ்ஸலாம் தொடக்கம் அனைத்து மனிதனையும் வித்தியாசமான வேறுபட்ட முகங்களைக் கொண்டு படைத்தவன் அல்லாஹ் ஆவான்.



பாத்திமா: ஆசிரியர் அவர்களே! விரல் ரேகைகளையும் நீங்கள் தெளிவுபடுத்திய அம்சங்களுக்கு உதாரணமாக சொல்ல முடியுமா?

யூசுப் ஆசிரியர்: நிச்சயமாக பாத்திமா, இதற்கு அதிகமான உதாரணங்கள் சொல்ல முடியும். படைப்பாளன் அல்லாஹ்வின் அறிவு முடிவற்றது

என்பதனால் ஒரு மனிதனுக்கு வழங்கப்பட்டிருக்கும் விரல் ரேகையை மற்றொரு மனிதனுக்கு வழங்க மாட்டான். உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் ஈடு இணையற்ற சிறப்பம்சங்களை சுமந்தவனாக பிறக்கின்றான். ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் விரல் ரேகை வேறொரு மனிதனுக்கு ஒரு போதும் வழங்கப்படவில்லை. இதற்குப் பிறகும் யாருக்கும் வழங்கப்பட மாட்டாது. அதேபோன்று ஒரு குழந்தையின் கண்ணில் காணப்படும் ரேகையைப் போன்று மற்றொரு குழந்தையிடம் ஒரு போதும் காணப்பட மாட்டாது.

சாரா: ஆசிரியரே! சில வங்கிகளின் இரகசிய இலக்க ஒழுங்குகள் கண் ரேகையை அடிப்படையாக வைத்து இயங்குவதாக வாசித்துள்ளேன்.

யூசுப் ஆசிரியர்: சரியான சொன்னீர். அதிகமான இடங்களில் கண் ரேகையை அடிப்படையாக வைத்து தமது பாதுகாப்பை பலப்படுத்தி இருக்கிறார்கள். வங்கிகள், கையடக்க தொலைபேசிகள் மற்றும் கதவுகள் போன்றவற்ற உதாரணமாக கூறலாம். இப்போது மாணவர்களே! கண் ரேகையை பயன்படுத்தி இயங்கச் செய்கின்ற கையடக்க தொலைபேசிகள், வீடியோ கமராக்கள், வாயில்கள் போன்ற கருவிகளை உருவாக்கிய ஒரு பொறியியலாளர் இருக்க வேண்டும் என்று சொல்லும் அதே வேளை மனிதனின் மிக அழகான ஈடு இணையற்ற முகத்தையும் அபூர்வமான கண்ணையும் படைத்த ஒரு இறைவன் இருப்பதை ஏற்றுக் கொள்ள மறுப்பது அறிவுடைமை ஆகுமா? இன்னும் உலகில் பிறக்காத ஒரு குழந்தைக்கு உலகில் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் எட்டு பில்லியன் மனிதர்களின் சிறப்பியல்புகளை விட வித்தியாசமான ஒரு சிறப்பியல்பை முடிவற்ற விசாலமான அறிவை உடைய ஒரு படைப்பாளனால் மாத்திரமே வழங்க முடியும். இந்த நிலை அல்லாஹ்வின் ஏகத்துவத்தை சுட்டிக்காட்டுவது போன்றே அல்லாஹ் படைப்பாளன் என்ற வகையில் முழு படைப்பினங்களையும் பராமரிக்கின்றான் என்பதற்குமான ஆதாரமாகும்.


## பிரபஞ்சத்தை முழுப்பார்வையோடு பார்த்தல்

நஸீபா: ஆசிரியரே இறைவன் ஒவ்வொரு நொடிப்பொழுதும் பிரபஞ்சத்தை பரிபாலனம் செய்து கொண்டிருக்கின்றான் என்ற விடயம் குறித்து இன்னும் விளக்கமாக சொல்ல முடியுமா?

யூசுப் ஆசிரியர்: நஸீபா அவர்களே! இது உண்மையிலே மிக முக்கியமான ஒரு தலைப்பு. பிரபஞ்சத்தில் காணப்படும் அனைத்து அம்சங்களையும் ஒவ்வொரு நிமிடமும் கண்காணித்து பரிபாலனம் செய்கின்ற எமது ஒரு இறைவன் இருக்கின்றான். நாம் பிரபஞ்சத்தை ஒரு முழுமையான பார்வையோடு பார்க்கும் பொழுது இதனை அறிந்து கொள்ள முடியும். பிரபஞ்சத்தில் காணப்படும் சிறிய மற்றும் பெரிய அத்தனை விடயங்களும் ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றன. அவைகள் பொதுவான ஒரு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. சடப் பொருட்களும் இந்த நோக்கத்தை நிறைவேற்ற முயற்சி செய்து கொண்டிருப்பது சடப் பொருட்களையும் சடம் அல்லாத பொருட்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதனை சுட்டிக்காட்டுகிறது. இந்த படைப்புக்கள் அனைத்தையும் ஒரே நோக்கத்தில் ஒன்று சேர்த்து இந்த பணிகளை செய்விப்பவன் யார்? உதாரணமாக மேகங்கள் தாவரங்களுக்கு உதவி செய்வதற்காக முயற்சிக்கின்றன. சூரியன் உயிர் வாழ்வதற்கு தேவையான உதவிகளை செய்வதற்காக அனைத்து உயிரினங்களுக்கும் தன் உதவிக் கரத்தை நீட்டுகின்றன. இதனை நாங்கள் பிரபஞ்சத்தில் பார்க்கின்றோம். ஆனால் ஆச்சரியமான ஒரு நிலைமை இருக்கிறது. அதுதான் இந்தப் படைப்புகள் ஒன்றுடனொன்று அறிமுகமற்றவையாகும். எனவே இதன் ஊடாக நாம் விளங்கிக் கொள்வது என்னவென்றால் படைப்புக்களை ஒவ்வொரு நொடிப்பொழுதும் அவதானிக்கும் அவன், அவைகளின் தேவைகளை நிறைவேற்றியும் கொடுக்கின்றான். அவன் தான் அல்லாஹ். அந்த அல்லாஹ் படைப்புக்களுக்கு பணிகளை வழங்கி அவை ஒவ்வொன்றினதும் தேவைகளை நிறைவு செய்ய வழி வகுக்கின்றான். இந்த விடயம் குறித்து உமர் மாமாவும் ஒரு உதாரணத்தை முன்வைக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.


உமர் மாமா பனித்துளி பூனையின் உடலை தடவியவராக பின்வருமாறு சொன்னார்: உண்மையில் மிகவும் அழகாக தெளிவுபடுத்தினீர்கள் நானும் அதிகம் பயன் பெற்றேன். ஒரு உயிர், உயிர் வாழ்வதற்கு ஒக்சிஜன் மிகவும் முக்கியமானது அப்படித்தானே!?

நுஸைபா: ஒக்சிஜன் இல்லாவிட்டால் சுவாசிக்க முடியாது, சுவாசிக்க முடியாது போனால் இறந்து விடுவோம்.




உமர் மாமா: ஒக்ஸிஜனை நாம் பிறந்தது முதல் உயிர் வாழும் வரை எந்தவித தேடலுமின்றி மிகவும் இலகுவாக அடைந்து கொள்கின்றோம் அல்லவா!? மாணவர்கள், ஆம்! உமர் மாமா என்றார்கள். அருமை மாணவர்களே வெறுமனே நாங்கள் மாத்திரமல்ல முழு உயிரினங்களும் ஒக்சிஜனை இலகுவாக பெற்றுக் கொள்கின்றன. அருகில் பனித்துளி பூனை, ‘‘நானும் இங்கு இருக்கின்றேன். என்னையும் மறந்து விடாதீர்கள்.’’ என்று சொல்லுவது போன்று மியாவ் என்றது.


உமர் மாமா புன்னகை பூத்தவராக பின்வருமாறு சொன்னார்: அருமை குழந்தைககளே! இந்த விடயத்தை ஒரு உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். வானில் இருக்கும் சூரியன் ஒன்றாகும். ஆனால் பிரதிபலித்தல் என்ற தனது சிறப்பியல்பு ஊடாக பிரகாசிக்கும் தன்மை கொண்ட அனைத்து வகையான கண்ணாடி, நீர் துளிகள், கடலின் மேற்பரப்பு என்பவற்றில் தனது ஒளியை தெறிப்படையச்



செய்து பிரதிபலிக்கின்றது. அதேபோன்று சூரியன் அனைத்து வகையான பிரகாசிக்கும் தன்மை கொண்ட பொருட்களிலும் ஊடுருவி அவற்றை தனது ஒளியால் வெப்பமாக்குகின்றது. ஒரு பொருளில் அதன் ஒளி நுழைவதானது மற்றுமொரு பொருளில் நுழைவதற்கு தடையாக இருப்பதில்லை. சூரிய ஒளி நுழைந்த அனைத்து பொருட்களிலும் அதன் தோற்றம் ஒளி வடிவில் இருக்கும். அதே நேரம் எண்ணிலடங்காத இடங்களில் இந்த பணியை மிக இலகுவாக நிறைவேற்றும். தனது இந்தப் பணியை நிறைவேற்றும் பொழுது உதவிக்காக மற்றொரு சூரியன் தேவைப்படுவதில்லை. எனவே இப்போது நீங்கள் அறிந்து கொண்டது போன்று இறைவனின் ஒரு படைப்பு கூட, ஒரே நேரத்தில் எண்ணிலடங்கா இடங்களில் தனது பணியை

நிறைவேற்ற முடிகிறது. இதே போன்றுதான் சங்கையான அல்லாஹ் ஒரு பணியை ஓரிடத்தில் நிறைவேற்றுவதானது ஏனைய இடங்களில் அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு தடையாக இருக்க முடியாது. ஏகனான எமது இறைவன், அனைத்து இடங்களிலும் ஒரே பணியை எவருடையதும் எவ்வித உதவியும் இன்றி நிறைவேற்றுகின்றான். ஒரே நேரத்தில் உலகத்தில் ஒரு மூலையில் இருக்கின்ற ஒரு மரத்திற்குரிய போசனையையும் அதே நேரத்தில் கடல் ஆழத்தில் இருக்கும் மீனையும் போசிக்கின்றான். கூடவே விண்மீன்களையும் ஒரு ஒழுங்கில் ஓடச் செய்கின்றான். மிகச்சிறிய அணுக்கள் கூட அவனது கட்டுப்பாட்டிலே உள்ளது.

ரைய்யான்: உமர் மாமா உங்களுக்கு மிகவும் நன்றி. எனக்கு நீண்ட நாட்களாக தீர்க்க முடியாமல் இருந்த ஒரு



பிரச்சினையை தீர்த்து வைத்தீர்கள். காலை பாடவேளை ஆரம்பிக்க முன்னரே யூசுப் ஆசிரியர் அவர்கள் வகுப்புக்கு வந்திருந்தார்.

அலி ஜான்: ஆசிரியரே காலையாகும் வரை மிகவும் பொறுமையாக இருந்தோம். தயவு செய்து அந்த மகிழ்ச்சியான செய்தியை எம்மோடு பகிர்ந்து கொள்ள முடியுமா?

ரையய்யான்: ஆசிரியரே! வெறுமனே எமது வகுப்புக்கு மட்டும் சொல்ல இருக்கும் செய்தி என்ன? தயவுசெய்து சொல்லுங்கள்.

முஸ்தபா: ஆசிரியரே! எனது வீட்டில் இருக்கின்றவர்கள் கூட இந்த செய்தி ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கிறார்கள். வயதான எனது வாப்பம்மாவுக்கு சொன்னேன். அவர் கூட ஆர்வத்துடன் எதிர்பார்த்திருக்கிறார். வகுப்பில் அமைதி நிலவியதன் பின் யூசுப் ஆசிரியர் பின்வருமாறு சொன்னார் மாணவர்களே இன்றைய நாள் உங்கள் அனைவருக்கும் சிறப்பானதாக அமையட்டும். இந்தக் கிழமை வார இறுதியில் இஸ்தான்புல் இஸ்லாம் மற்றும் விஞ்ஞான பல்கலைக்கழகத்தில் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிகழ்ச்சியில் நீங்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன். கலந்து கொள்வீர்களா? இந்த செய்தியை கேட்ட மாணவர்கள் உடனே குதூ கலமடைந்தார்கள். உற்சாகமாக எழுந்து நின்ற வகுப்பு தலைவர் சைத் “ஆம் ஆசிரியரே! நாம் ஆர்வத்துடன் கலந்து கொள்வோம். அப்படித்தானே நண்பர்களே!” என்றவுடன் வகுப்பு தோழர்கள் அனைவரும் ஆம், ஆம் நாங்கள் அனைவரும் உற்சாகத்தோடு கலந்து கொள்வோம் என்றனர்.

யூசுப் ஆசிரியர்: அமைதியாக இருங்கள் மாணவர்களே! அடுத்தவர்களுக்கு தொந்தரவு கொடுக்காமல் இருப்போம்.

யாவுஸ்: இந்த நிகழ்ச்சி எந்த தலைப்பில் அமையும் ஆசிரியரே!

யூசுப் ஆசிரியர்: சிரித்தவராக சரியான ஒரு கேள்வி கேட்க வேண்டிய இடத்தில் கேட்டிருக்கின்றீர். இந்த நிகழ்ச்சியின் தலைப்பு: “விஞ்ஞானம் அல்லாஹ்வை தெளிவுபடுத்துகின்றது”

என்பதாகும். இந்த நிகழ்ச்சியில் அனைத்து மாணவர்களும் கலந்து கொள்ள வேண்டும் என ஆசைப்படுகிறேன். ஆம் மாணவர்களே! எமது ஈமானை பலப்படுத்திக் கொள்வதற்கு அரியதோர் சந்தர்ப்பம். ஈமான் குறித்து பல புதிய விடயங்களை அறிந்து கொள்ள முடியுமான ஒரு நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சியில், பல துறைசார் அறிஞர்கள், கல்வியலாளர்களால் பாடசாலை மாணவர்களுக்கு பல தலைப்புகளில் விரிவுரைகள் நடாத்தப்படும். எமது வாழ்விலிருந்து உதாரணங்களை முன்வைத்து எமது இறைவனை எமக்கு தெளிவுபடுத்துவார்கள். மாணவர்கள் மிகவும் சந்தோஷம் அடைந்தார்கள். எப்படி சந்தோஷமடையாமல் இருக்க முடியும்!? ஏனெனில் அவர்களுக்கு மிகவும் விருப்பமான ஆசிரியரோடு வார இறுதி நாட்களை கழிக்க இருக்கின்றார்கள். வகுப்பில் பல்கலைக்கழகமொன்றுக்கு சென்றவர்களின் தொகையும் மிகவும் குறைவாக இருந்தது. எனவே அனைவரும் ஒரே குரலில் “ஆம்” என பதிலளித்து ஆசிரியரின் அழைப்பை ஏற்றுக்கொண்டார்கள். சனிக்கிழமை அனைத்து மாணவர்களும் உஷ்குதார் என்ற இடத்தில் கப்பலில் பயணிக்க இருந்தார்கள்.

## பல்கலைக்கழகத்தை நோக்கிய பயணம்

அன்று நிகழ்ச்சி நடைபெறும் நாள், காலநிலை மிகவும் சிறப்பாக இருந்தது. பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை, முதலாவதாக அல்லாஹ்விடம் இரண்டாவதாக ஆசிரியரிடம் அமானிதமாக ஒப்படைத்தார்கள். மாணவர்கள், பாடசாலை சீருடை இல்லாமல் தத்தமது விருப்பத்துக்கு ஏற்ப ஆடைகளை அணிந்து வந்திருந்தார்கள். யூசுப் ஆசிரியர் வெள்ளை நிற மேலாடையோடு கோட் சூட் அணிந்திருந்தார். வகுப்புத் தலைவர் இறுதியாக ஒரு முறை மாணவர்களின் பெயர் பட்டியலை பரிசோதித்துவிட்டு “ஆசிரியரே! நாங்கள் அனைவரும் வந்து விட்டோம், நாம் தயார், பயணத்தை ஆரம்பிக்கலாம்” என்றார்.

கடவுச்சீட்டை வாங்குவதற்காக கடவுச்சீட்டுகள் விற்கும் இடத்துக்குச் சென்றார்கள். கடவுச்சீட்டுகளை வாங்கியதன் பிறகு கப்பலின் மேல் தட்டில் ஏறி அமர்ந்து கொண்டார்கள்.

கடலை, வான்பரப்பை பார்க்க ஆரம்பித்தார்கள். கடல் மிக அமைதியாக இருந்தது சூரிய ஒளி மேற்பரப்பில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அந்த சூரிய ஒளியின் பிரகாசம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. மறுபக்கத்தில் இதமான தென்றல் காற்று வீசிக் கொண்டிருந்தது. அனைவரதும் முடிகள் இந்த காற்றில் அலை மோதுவது போன்று பறந்து கொண்டிருந்தது. பறவைகள் மாணவர்களுக்கு சலாம் சொல்வது போன்று அவர்களுக்கு மிக அருகாமையில் வந்து சென்று கொண்டிருந்தது.

அந்த இடத்தில் ஒரு சிமித் (பனிஸ்) வியாபாரி “சிமித், சிமித்” என்று சத்தம் போட்டவராக சிமித் விற்பனை செய்து கொண்டிருந்தார். மாணவர்கள் சிமித் (பனிஸ்) வாங்கி அந்தப் பறவைகளுக்கு ஆகாயத்தில் வீசிக்கொண்டிருந்தார்கள். பறவைகளோ ஆகாயத்தில் வீசப்படும் அந்த சிமித் துண்டுகளை மிகத் திறமையாக பிடித்துக் கொண்டு கப்பலை விட்டு தூரமாகி சாப்பிடுவதற்காக ஒரு இடத்திலே அமர்ந்தன. மாணவர்களும், கப்பலில் பிரயாணிக்கும் ஏனைய பிரயாணிகளும் பறவைகளின் அந்தக் காட்சியை பார்த்து ஆச்சரியம் அடைந்தார்கள். மாணவர்கள் சிமித்தை பறவைகளுக்கு கொடுத்ததற்கு பிறகு யூசுப் ஆசிரியர், மாணவர்களைப் பார்த்து பின்வருமாறு கேட்டார். நண்பர்களே! இந்தப் பறவைகளுக்கு ஆகாயத்தில் எப்படி பறக்க முடிகிறது என்று சிந்தித்தீர்களா? என்றார்.

அலி ஜான்: அப்படி சிந்திக்கவே இல்லை. ஆனால் இந்த சிந்தனை அடிக்கடி என்னுள் ஏற்படாமலும் இல்லை.

யூசுப் ஆசிரியர்: மிக்க நன்று. ஒரு விடயத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கான ஆர்வம் மிகவும் முக்கியமானது, ஏனெனில் ஆர்வம் ஒரு ஆசிரியரை போன்றது. மாணவச் செல்வங்களே! ஒரு விடயத்தை அறிந்து கொள்வதற்கான ஆர்வம் ஒரு மனிதனை கேள்வி கேட்கத் தூண்டுகின்றது. ஆராய்ச்சிக்கு வழிவகுக்கிறது. ஒரு விடயத்தை அறிந்து கொள்வதற்கு ஆர்வம் கொண்டு கேள்விகள் கேட்கின்ற பொழுது படைப்புக்கள், அவற்றின் படைப்பாளனான எமது இறைவனின் செயற்பாடுகள் குறித்து ஆச்சரியங்கள் அதிகரிக்கின்றன. ஓரளவு அறிந்த ஒருவர் குறித்து மேலதிகமாக


அறிந்து கொள்வதற்காக கேள்விகள் கேட்கின்றோம் அல்லவா? அவரைப் பற்றி எவ்வளவு அதிகமாக அறிந்து கொள்வோமோ அந்த அளவு அவரை நேசிக்க ஆரம்பிப்போம். அதேபோன்றுதான் படைப்பாளனைப் பற்றி நாம் அதிகம் அறிந்து கொள்வதற்காக கேள்வி கேட்க வேண்டும். அல்லாஹ்வின் படைப்புகள் குறித்து சிந்திப்பதோடு ஆய்வில் ஈடுபட வேண்டும்.

உதாரணமாக உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். மனிதன் எப்போது முதன் முதலாக விமானத்தை கண்டுபிடித்து பறந்தான்?

நஸீபா விமானங்கள் குறித்து புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வமாக இருந்தாள். அவள் பின் வருமாறு சொன்னாள் “ஆசிரியரே விமானத்தை முதன் முதலாக ரைட் சகோதரர்கள் கண்டுபிடித்தார்கள். எனது ஞாபகத்திற்கு எட்டிய அளவுக்கு 1900ம் ஆண்டின் ஆரம்பப் பகுதிகளில் விசிறி விமானத்தில் பறக்க முயற்சித்தார்கள்.

யூசுப் ஆசிரியர்: பாராட்டுக்கள் நஸீபா! மனிதன் கிட்டத்தட்ட நூறு வருடங்களுக்கு முன்னர் அதாவது 1903ஆம் ஆண்டு விமானத்தில் பறக்கும் முயற்சியை வெற்றிகரமாக செய்து முடித்தான். ரைட் சகோதரர்களின் விமானத்தில் பறக்கும் முயற்சி 12 வினாடிகளுக்குள் முடிவடைந்தது. ஆனால் பறவைகள், ஈக்கள் தேனீக்கள் போன்றவை பல நூற்றாண்டுகளாக பறந்து கொண்டிருக்கின்றன. பறவைகள் எப்படி பறக்கின்றன என்று தொடர்ந்தும் நான் யோசிப்பதுண்டு. பறவைகள் பறக்கும் போது அவைகள் கீழே விழுந்து விடாமல் ஆகாயத்தில் பறக்கச் செய்பவன் யார்? பல வருடங்களுக்குப் பின் மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்ட விமானம் குறித்து பறவைகள் எப்படி அறியப் போகின்றன. கீழே விழுந்து விடாமல் அவைகளால் எப்படி பறக்க முடிகிறது. எந்தவித முன் பயிற்சியும் இன்றி எப்படி இந்த ஆற்றலை அவைகள் பெற்றன.

அலி ஜான்: தமாஷாக ஆசிரியரே! என்னை மன்னிக்கவும், சிலர் அறிவுடைமையாக நடந்து கொள்ளாதவர்களுக்கு “பறவை மூளையை உடையவன்” என்று சொல்கிறார்களே!?




யூசுப் ஆசிரியர்: ஆம் சிலர் அப்படி சொல்கிறார்கள். ஆனால் நாம் தாழ்வாகப் பார்க்கும் அந்த மிருகங்கள், பறவைகள் உலகில் வாழும் மிகவும் அறிவாற்றல் உடைய படைப்பு என்று அறியப்படும் மனிதர்களை விட பல்லாயிரம் வருடங்களுக்கு முன் ஆகாயத்தில் பறப்பதை எப்படி கற்றுக்கொண்டது!? அப்படியாக இருந்தால், நாமும் அறிவின்மையாக நடந்து கொள்கின்றவர்களுக்கு “மனித மூளையை உடையவன்” என்று சொல்ல வேண்டி ஏற்படும் அல்லவா!? உதாரணமாக நாடு விட்டு நாடு கடக்கும் பறவைகள் எமது நாட்டுக்கும் வருகின்றன. சில போது எமது பாடசாலையின் கூரையில் வந்து அமர்கின்றன. இந்தப் பறவைகள் ஆப்பிரிக்கா கண்டத்தில் இருந்து பல்லாயிரக்கணக்கான கிலோமீட்டர்களை கடந்து எப்படி பயணம் செய்கின்றன. எந்தவித வழிகாட்டலோ திசைகாட்டிகளோ இன்றி எப்படி மிகச்சரியாக தாம் சென்றடைய வேண்டிய இடத்தை அடைகின்றன. அப்படியாக இருந்தால், திசைகாட்டி கருவிகளை முதலில் கண்டு பிடித்தவர்கள் யாராக இருக்க முடியும் மனிதர்களா? அல்லது பறவைகளா?

யூசுப் ஆசிரியர் தொடர்ந்தும் பின்வருமாறு சொன்னார்: அருமை நண்பர்களே! எமது இறைவன் பறவைகளுக்கு பறக்கும் ஆற்றலையும் மீன்களுக்கு நீந்தும் ஆற்றலையும்

இயல்பாகவே வழங்கியிருக்கின்றான். மனிதர்களாகிய எமக்கு பிரபஞ்சத்தையும், பிரபஞ்சத்தில் காணப்படும் படைப்பினங்கள் குறித்தும் சிந்திக்கும் ஆற்றலை தந்திருக்கின்றான். எனவேதான் பறவைககளுக்கோ ஏனைய படைப்புகளுக்கோ வழங்கப்படாத பகுத்தறிவு என்ற ஒரு உன்னதமான அருளை எமக்குத் வழங்கியிருக்கின்றான். இப்போது படகு மெது மெதுவாக கரையை நெருங்கிக் கொண்டிருந்தது. அனைவரும் வாயிலை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது அந்தப் பறவைகளும் மாணவர்களுக்கு ஏதோ ஒரு செய்தியை சொல்ல வருகின்றன போன்று இறக்கைகளை அடித்து பறந்து கொண்டு இருந்தன.

## சட்டம், சட்டத்தை இயற்றியவனின் இருப்புக்கான ஆதாரமாகும்

படகில் இருந்து இறங்கியதும் அனைவரும் ஒரு குழுவாக ஒன்று சேர்ந்தனர். அனைவரும் தத்தமக்கு அருகில் இருந்த நண்பர்கள் இருக்கிறார்களா என்று பார்த்தார்கள். இறுதியாக வரும் இடத்தில் அனைவருடைய வருகையையும் உறுதி செய்தார்கள். படகுக்கு அருகாமையில் ஒரு வெள்ளை நிற வாகனம் தென்பட்டது.

யூசுப் ஆசிரியர்: மாணவர்களே! அந்த வெள்ளை வாகனம் வரை ஓட்டப் பந்தயம் செய்ய விரும்புகின்றீர்களா? மாணவர்கள் உற்சாகமாக ஆம் ஆம் என்றார்கள். ‘‘அந்த வெள்ளை நிற வாகனத்தை முதலில் தொடும் மாணவ மாணவிகளுக்கு சொக்லேட் பரிசாக வழங்கப்படும்’’ என்றார். ஓட்டப் பந்தயம் ஆரம்பித்தது. மாணவர்கள் கிட்டத்தட்ட 250 மீட்டர் தூரம் ஓடினார்கள். ஆச்சரியமான ஒரு நிலை காணப்பட்டது. இப்படியான பந்தயங்களில் வழமையாக ஆர்வத்தோடு ஈடுபடும் அலி ஜான் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ளவில்லை. இது அனைவரருக்கும் ஆச்சரியமான ஒரு விடயமாக இருந்தது. அவர், பையில் இருந்து ஓடு பாதனியை எடுத்து அணிந்து கொண்டு ஓடத் துவங்கினார்.

மாணவர்கள் மூச்சுத் திணற ஓடிக்கொண்டிருந்தார்கள். ஓட்டப் பந்தயம் சிறப்பாக தொடர்ந்து கொண்டிருந்தது.

மாணவர்களில் ஸயீத், மாணவிகளில் சாரா முன்னே ஓடிக் கொண்டிருந்தார்கள். அலி ஜான் ஓடு பாதனியின் உதவியுடன் அவர்களை நெருங்கினான். ஆனால் கடைசி 50 மீட்டர் தூ ரத்தில் இருக்கும் போது இப்ராஹிம் மற்றும் ரையான் மிக வேகமாக ஓடி வாகனத்தை தொட்டார்கள். அலி ஜான் மற்றும் ஸயீத் இருவரும் ஏக காலத்தில் வாகனத்தை தொட்டார்கள். ஸயீத் இந்த நிலையைப் பார்த்து ஆச்சரியமடைந்தார். யூசுப் ஆசிரியர் மாணவர்களுக்கு பின்னால் இருந்து “மாணவர்களே! மாஷா அல்லாஹ் காற்றைப்போல் ஓடிச்சென்றீர்கள் ஆனால் அலி ஜான் நீங்கள் எமது சட்டங்களை பின்பற்றாததால் உங்களை இந்த போட்டியில் கலந்து கொண்ட ஒருவராக கருத மாட்டோம்” என்றார்.

மாணவர்கள்: உண்மையைச் சொன்னீர்கள் ஆசிரியரே!. சட்டங்கள் அனைவராலும் பின்பற்றப்பட வேண்டும்.

யூசுப் ஆசிரியர் இரண்டு சொக்லேட்களை எடுத்து ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்ற ரையான் மற்றும் இப்ராஹிமுக்கு வழங்கினார். அவர்கள் ஓரளவு களைப்பாக இருந்தார்கள். ஆனால் ஓட்டப் பந்தயம் மாணவர்களின் ஆர்வத்தை அதிகரித்தது. யூசுப் ஆசிரியரிடமிருந்து பரிசைப் பெற்ற இப்ராஹிம் மூச்சு விட்டவராக ஆசிரியரே! சொக்கலேட் மிகவும் சுவையானது ஆனால் உங்களது கையால் அதனைப் பெற்றுக் கொள்வது அதன் சுவையை இன்னும் அதிகரிக்கிறது.




யூசுப் ஆசிரியர்: நீங்கள் இரண்டு பேரும் சரியாகச் சொன்னீர்கள். நாம் கற்றுக் கொள்கின்ற விடயங்களை அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்துவது மிகவும்

முக்கியமான ஒரு அம்சமாகும். எமது பயணம் நீண்டது. இந்த அம்சத்தை வாகனத்தில் கலந்துரையாடுவோம். அனைவரும் வாகனத்தில் ஏறியதனை உறுதி செய்யப்பட்டதன் பிறகு வாகனத்தின் கதவுகள் மூடப்பட்டன. பல்கலைக்கழகத்தை நோக்கிய பயணம் ஆரம்பமானது. யூசுப் ஆசிரியர் வாகன ஓட்டுனரின் அனுமதியுடன் வாகனத்தில் இருந்த மைக்கை எடுத்து பின்வருமாறு கூற ஆரம்பித்தார். நண்பர்களே! எமது பயணம் சிறப்பாக அமையட்டும். எமது பயணம் கிட்டத்தட்ட 40 நிமிடங்களை உள்ளடக்கியது. பாதையில் வாகன நெருக்கடி இல்லாவிட்டால் இன்ஷாஅல்லாஹ் நிகழ்ச்சிற்கு சரியான நேரத்தில் சென்றடைய முடியும்.

அலி ஜான், வாகனத்தின் பின் வரிசையில் இருந்து, ஆசிரியரே சொக்லேட் பரிசு சம்பந்தமாக பேசுவோம் என்று சொன்னீர்கள் மறந்து விட்டீர்களா? என்றார்.

யூசுப் ஆசிரியர்: ஆம், இது சம்பந்தமாக உரையாடலை தற்போது ஆரம்பிப்போம். நாம் அனைவரும் எமது பாடசாலையைக் கட்டிய சுல்தான் அப்துல் ஹமீது ஹான் அவர்களை சந்தித்தோம் என்று வைத்துக் கொள்வோம். சுல்தான் அவர்கள், எம் அனைவரினதும் பெயர்கள் எழுதப்பட்ட பேனையை எமக்கு பரிசாகத் தந்தால் நாம் மகிழ்ச்சியடைய மாட்டோமா?

அலி ஜான்: எம்மில் யார்தான் சந்தோஷம் அடைய மாட்டோம்!? நிச்சயமாக சந்தோஷம் அடைவோம்.

யூசுப் ஆசிரியர்: ஒரு பேனை கிடைத்தது என்று சந்தோஷம் அடைவீர்களா? அல்லது சுல்தானுடைய கரங்களால் ஒரு பரிசு கிடைத்தது என்று சந்தோஷம் அடைவீர்களா?

ரையான்: நிச்சயமாக சுல்தானின் கரங்களால் ஒரு பரிசு கிடைத்தது என்பதற்காக சந்தோஷம் அடைவோம் ஆசிரியரே!

யூசுப் ஆசிரியர்: சரியாகச் சொன்னீர். ஒரு பேனை கிடைத்த சந்தோஷத்தை விட சுல்தானின் கரங்களால் பரிசு கிடைத்தமை பல மடங்கு சந்தோஷத்தை தருகின்றது. சுல்தான் உங்களுக்கு பரிசு தருவது, அவர் உங்களை நேசிக்கின்றார்

அதே போன்று அவர் உங்களை கண்ணியப்படுத்துகிறார் என்பதனை சுட்டிக்காட்டுகின்றது.

மாணவர்களே! இப்படித்தான் இறைவனிடம் இருந்து வரும் அருள்கள். உதாரணமாக, ஒரு தோடம் பழத்தை சாப்பிட்டால் அந்த தோடம்பழத்தின் வெளிப்படையான ஒரு சுவை இருக்கிறது. ஆனால் அந்த தோடம்பழம் அல்லாஹ்விடமிருந்து எமக்கு கிடைத்த ஒரு அருள் என்ற சிந்தனையோடு எமது இறைவனை நினைவு கொண்டு சாப்பிடுகின்ற பொழுது அந்த சுவை பன்மடங்காகுகின்றது. எம்மை மதிக்கும் எமக்கு அருள்பாலிக்கும், அன்பாளனான இறைவன் எமது தேவைகளை பூர்த்தி செய்கின்றான் என்ற சிந்தனை அவனை நெருங்கச் செய்கின்றன.

பயணம் சுவையான உரையாடல்களோடு உற்சாகமாக சென்று கொண்டிருந்தது. பாதையோரத்தில் வாகனத்துக்கு தேவையான எரிபொருள்களை கொள்வனவு செய்து கொண்டனர். பாதைகளில் சில போது வாகன நெருக்கடி காணப்பட்டது. சில போது எந்தவித நெருக்கடியும் காணப்படவில்லை. முன்னாள் மிக வேகமாக சென்று கொண்டிருந்த ஒரு வாகனம் பாதையில் செல்லும் ஏனைய வாகனங்களையும் ஆபத்துக்கு உள்ளாக்கும் விதமாக சட்டவிரோதமான முறையில் ஓடிக்கொண்டிருந்தது. அந்த வாகனம் சற்று நேரம் சென்ற பின் கவலைக்கிடமான முறையில் விபத்துக்கு உள்ளாகியது. வானங்கள் முன்னேற முடியாமல் அப்படியே ஸ்தம்பித்து விட்டன. ஓட்டுநர்களும் வாகனங்களிலிருந்து இறங்கினார்கள். ஒருவருக்கொருவர் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையை சீர் செய்ய வேண்டிய தேவையை உணர்ந்த யூசுப் ஆசிரியர், இந்நிலமையினை சமாளிப்பதற்கு முயற்சித்தார். தர்க்கங்களை விட்டுவிட்டு பாதை ஒழுங்குகளை பேணி நடந்து கொள்ளுமாறு வேண்டிக்கொண்டார். அத்தோடு பொலிஸ ாரிடம் தொலைபேசியில் முறையிட்டார். பாதையில் பேணப்பட வேண்டிய பாதை ஒழுங்குகள் மிகவும் முக்கியமானவையாகும். ஏனெனில் (அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்) பாதையில் சென்று கொண்டிருக்கும் வாகனங்கள், நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனத்தோடு மோத வாய்ப்புள்ளது. வாகன ஓட்டுநர்கள் ஓரளவு அமைதி அடைந்து, யூசுப் ஆசிரியரின் வார்த்தைக்கு

மதிப்பளித்து அவர் சொன்னதை செய்ய ஆரம்பித்தார்கள். விபத்துக்குள்ளான வாகனத்துக்குள் இருந்த ஒரு குழந்தை அச்சத்தால் வீறிட்டுக் கொண்டிருந்தது. யூசுப் ஆசிரியர் அந்த வாகனத்தில் இருக்கின்றவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறினார். மாணவர்கள் வாகனத்துக்குள்ளிருந்து கொண்டு இந்த நிகழ்வை நோட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ரையான் வாகனத்தின் ஜன்னலை திறந்து: ஆசிரியரே நான் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றதற்காக எனக்கு வழங்கப்பட்ட சொக்லேட்டை சாப்பிடவில்லை. நீங்கள் அனுமதி வழங்கினால் அதனை அந்த சிறிய குழந்தைக்கு கொடுக்க விரும்புகின்றேன் என்றார். யூசுப் ஆசிரியர்: ஆம் ரையான் சிறந்த ஒரு யோசனை. நான் அந்த குழந்தையின் பெற்றோர் இடத்திலே அனுமதி கேட்டுப் பார்க்கின்றேன்.

பெற்றோர்களின் அனுமதியோடு குழந்தைக்கு சொகலேட் வழங்கப்பட்டது. அப்போது குழந்தையின் முகம் முழுவதும் மகிழ்ச்சி பரவியது.

விபத்துக்குள்ளான வாகனத்தின் ஓட்டுநர் உண்மையிலேயே தவறிழைத்தார். பின்னர் தான் இழைத்த தவறை அறிந்து ஏற்றுக் கொண்டார். அந்த வாகனம் மீண்டும் தனது பயணத்தை மெதுமெதுவாக ஆரம்பித்து முன்னேறிச் சென்று கொண்டிருந்து. அடிக்கடி வாகன நெரிசல் ஏற்பட்ட போதும் எந்தவித பிரச்சனையும் இன்றி வாகனம் சென்று கொண்டிருந்தது. யூசுப் ஆசிரியர்: அருமை நண்பர்களே பார்த்தீர்களா அவசரப்படுவது, பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வது எவ்வளவு ஆபத்தானது. அல்லாஹ் பாதுகாக்க வேண்டும் இந்த விபத்து இதனை விட பெரிய ஒரு விபத்தாகவும் மாற வாய்ப்பிருந்தது.

வாகன ஓட்டுநர்: ஆசிரியரே நீங்கள் சென்று அவர்களுக்கு மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்தியது சிறந்த ஒரு செயலாக இருந்தது. இல்லாவிட்டால் அவர்களுக்கு மத்தியிலான தர்க்கம் அதிகரித்து மிகப்பெரும் கைகலப்புக்கு வழியமைக்க வாய்ப்பு இருந்தது. சகோதரரே! நாம் முஸ்லிம்கள். இது எமது கடமையாகும். நாம் சமூகத்தின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து பொறுப்பற்றவர்களாக இருக்க முடியாது.

ஏதாவது ஒரு இடத்தில் ஏதாவது ஒரு பிரச்சினையை கண்டால் அந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு தேவையான முயற்சியில் முடியுமானளவு ஈடுபடுவது எமது கடமையாகும். ஒன்றுமே செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் அந்த பிரச்சினையை தீர்ப்பதற்காக துஆவில் ஈடுபடுவது அவசியமாகும். சில சந்தர்ப்பங்களில் பற்றி எரியும் தீயை ஒரு கோப்பை நீரால் அணைக்க முடியும். ஆனால் ஒரு கோப்பை நீரால் அந்த தீயை அணைக்க முடியுமாக இருக்கும் போது எதற்காக நாம் அனைவரும் ஒன்று சேர வேண்டும் என்று பொறுப்பற்றிருந்தால் அந்த தீ ஏனைய இடங்களுக்கும் பரவ வாய்ப்பு உண்டு.

வாகன நெருக்கடிகள் குறைவடைந்து பாதையில் வாகனம் இலகுவாக சென்று கொண்டிருந்தது.

பாத்திமா அமைதியான குரலில் ஆசிரியரைப் பார்த்து: எனது தாய் சில இனிப்புப் பண்டங்களை தயாரித்து வழங்கினார். இவற்றை உங்களோடும், நண்பர்களோடும் பகிர்ந்து கொள்ள முடியுமா? என பவ்வியமாகக் கேட்டுக் கொண்டாள்

யூசுப் ஆசிரியர்: ஆம் பாத்திமா தாராளமாக பகிர்ந்து கொள்ளலாம். எமது முன்னோர்கள்: "இனிப்பு பண்டங்கள் சாப்பிடுவோம் இனிப்பாக கதைப்போம்" என்று சொல்லி இருக்கிறார்கள் அல்லவா? நடந்து முடிந்த நிகழ்வுக்கும் பொருத்தமாக இருக்கும். பாத்திமா, இனிப்பு பண்டங்கள் வைக்கப்பட்டிருந்த இரண்டு மிகப்பெரிய பையை எடுத்தாள். அதில் ஒன்றை ஆண் மாணவர்களுக்கு கொடுத்தாள். மற்றையதை நண்பிகளோடு பகிர்ந்துக் கொண்டாள். மாணவர்களுக்குச் சென்ற இனிப்பு பண்டத்தை அலி ஜான் அந்த பையை கையில் எடுத்தவராக: அல்லாஹ்! ஆசிரியரே இந்தப் பையில் இனிப்புப் பண்ட புதையலே இருக்கிறது என்ற வார்த்தையால் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான். கடலை, பூ மற்றும் இன்னும் பல இனிப்புக்களால், பல நிறங்களில் இனிப்பு பண்டங்கள் இருந்ததனால் உண்மையிலேயே புதையல் போன்று தென்பட்டது. மாணவர்கள் அனைவரும் ஒரே குரலில் பாத்திமாவிற்கும் அவளது தாய்க்கும் நன்றியை தெரிவித்தவர்களாக இனிப்புப் பண்டங்களை ஆர்வத்தோடு சாப்பிட ஆரம்பித்தார்கள். யூசுப் ஆசிரியரும் பாத்திமா மற்றும்

அவளுடைய தாய்க்கும் நன்றியை தெரிவித்தார். பின்னர் ஒலிபெருக்கியை கையில் எடுத்து பேச ஆரம்பித்தார்.

மாணவர்களே! பார்த்தீர்களா சிறிது நேரத்திற்கு முன்னர் ஒரு விபத்தை கண்டோம். ஆனால் வாகனத்தைச் செலுத்தும் ஒவ்வொரு ஓட்டுநரும் அறிவு படைத்த பெரிய மனிதர்கள். சித்த சுயாதீனமான பகுத்தறிவான மனிதர்களுக்கு ஒரு சில காலம் பயிற்சி வழங்கப்பட்டதன் பிறகுதான் இந்த வாகனத்தை ஓட்டுவதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. 18 வயதுக்கு மேற்படாதவர்களும் வாகனத்தை ஓட்டுவதற்கு நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்திபெறாதவர்களுக்கும் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. பாதை ஒழுங்குகள் வரையறுக்கப்பட்டு, பாதைகளில் விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளதோடு, பாதை குறியீடுகளும் இடப்பட்டுள்ளன. பாதை ஒழுங்குகளை கட்டுப்படுத்துவதற்கும், சரியாக நடைமுறைப்படுத்துவதற்கும் பொலிஸ் அதிகாரிகளும் கடமையில் ஈடுபட்டுள்ளனர். பொலிஸ் அதிகாரிகளால் பல இடங்களில் இரகசிய கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இப்படியான விபத்துக்கள் நடைபெறாமல் இருப்பதற்குத் தேவையான அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்ட போதிலும் விபத்துக்கள் நடைபெறுகின்றன. சற்று முன்னர் நாங்களும் அதனைக் கண்டோம்.

அஹ்மத் பின்வருமாறு சொன்னார்: ஆசிரியரே எமது நாட்டில் அத்தனை இடங்களிலும் ஒரே வீதி ஒழுங்குகளா பின்பற்றப்படுகிறது?

யூசுப் ஆசிரியர்: ஆம் அஹ்மத், எமது நாட்டிலும் ஓர் எழுந்தமான வீதி ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒரே விதமான வீதி ஒழுங்குகள் எமது நாட்டில் ஒரு அரசாங்கம் இருக்கிறது என்பதனை சுட்டிக்காட்டுவது போலவே ஒரே ஒரு அரசாங்கம் இருக்கிறது என்பதனையும் உறுதிப்படுத்துகிறது. ஏனெனில் ஒரு இடத்தில் காணப்படும் ஒழுங்குவிதிகள், அந்த இடத்தில் ஒழுங்குவிதிகளை வகுக்கக் கூடியவர்களும் இருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரமாகும். எந்த ஒரு சட்டம்மும் அல்லது விதியும் தானாக உருவாக முடியாது. ஒரு சட்டம் அனைத்து இடங்களிலும் ஒரே விதமாக ஒழுங்கு விதிப்படி

நடைமுறைப்படுத்தப்படுகிறது என்றால், அந்த சட்டங்கள் ஏதாவது ஒரு இடத்திலிருந்து வெளியாகிறது என்பதனை சுட்டிக்காட்டும்.

இப்போது பின்வருமாறு சிந்திப்போம்! விண்ணில் நீந்தித் திரியும் விண்மீன்கள், கோள்கள், நட்சத்திரங்கள் மற்றும் செயற்கைக் கோள்கள் அனைத்தும் ஒரு சட்டம் மற்றும் விதியை அடிப்படையாகக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. விண்ணுலகம் கட்டுப்பட்டிருக்கும் இந்த சட்டங்களையும், விதிகளையும் உருவாக்கியவன் யார்? விண்ணுலகில் காணப்படும் விதிகளை கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகளுக்கு வெகுமதிகள் வழங்கி கௌரவிக்கும் மனிதன் அந்தச் சட்டங்களை அல்லது விதிகளை உருவாக்கியவன் யார் என்று ஏன் சிந்திக்காமல் இருக்கின்றான்?

விண்ணுலகில் இருக்கும் விண்மீன்கள், நட்சத்திரங்கள் ஒன்றோடொன்று முட்டி மோதாமல் ஓர் ஒழுங்கில் இயங்குகின்றன. அவைகளின் திசைகளை தீர்மானிப்பது யார்? அல்லது அவற்றை நடத்தும் ஒரு ஓட்டுநரா இருக்கின்றார்?

ஹஸன்: ஆசிரியரே விண்மீன்களிற்கோ அல்லது நட்சத்திரங்களிற்கோ ஓட்டுநர் கிடையாதே!

யூசுப் ஆசிரியர்: மிகச் சரியாகச் சொன்னீர் ஹஸன். அப்படியாக இருந்தால் விண்ணுலகில் காணப்படும் நட்சத்திரங்களும் கோள்களும் யாருடைய சக்தியை மற்றும் அறிவைப் பின்னணியாகக் கொண்டு ஒழுங்காக செயல்படுகின்றன? அவை ஒவ்வொன்றினதும் வேகங்கள் மற்றும் அளவுகள் வேறுபட்டவை. அவற்றின் சுற்றுப்பாதைகள் மற்றும் சுழற்சித் திசைகள் வேறுபட்டவை. இப்படி இருக்கும்போது உயிரோ, பகுத்தறிவோ, ஓட்டுநரோ காணப்படாத இம்மிகப்பெரும் வளிமண்டலம் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதி விபத்துக்குள்ளாகாமல் தத்தமது பணியை வெற்றிகரமாக எப்படி நிறைவேற்றுகின்றன? இந்த நிலை ஆச்சரியத்திற்குரிய ஒரு விடயம் அல்லவா?

ஸயீத்: ஆசிரியரே! செயற்கை நுண்ணறிவு மூலம் ஓட்டுநர் அற்ற வாகனங்கள், மனிதனின் தலையீடின்றி செயற்படும் விமானங்கள் ஏன் புகையிரதங்கள் கூட இருக்கின்றனவே!

யூசுப் ஆசிரியர்: உண்மையை சொல்கின்றாய் ஸயீத், வித்தியாசமான ஒரு பார்வை. மனித தலையீடின்றி செயற்படும் விமானங்களின் நிகழ்ச்சியை தயாரிக்கும் ஒரு பொறியியலாளர் இருக்கிறாரா?

ஸயீத்: எப்படி இல்லாமல் இருக்க முடியும் ஆசிரியரே!


யூசுப் ஆசிரியர்: நூற்றுக்கணக்கான குறியீட்டு முறைகளை - கோடின்களை (code) எழுதக்கூடிய மென்பொறியியலாளர்கள் இல்லையா?

ஸயீத்: இருக்கின்றனர்.

யூசுப் ஆசிரியர்: அந்த வாகனங்கள் உருவாக்கப்பட்ட நோக்கத்திற்கேற்ப நிர்வாகிக்க முடியுமான நிருவாகிகள் இல்லையா?

ஸயீத்: இருக்கின்றது ஆசிரியரே

யூசுப் ஆசிரியர்: அன்பு மாணவர்களே! இவ்வகையான உயர் தொழில்நுட்ப கருவிகள் உலகில் வெறுமனே எட்டு நாடுகளிலேயே காணப்படுகின்றன. அதாவது இது மனிதர்களால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டதொரு தொழில்நுட்பமாகும். ஆனால் வளிமண்டலத்தில் காணப்படும் உயிரற்ற விண்மீன்கள் அப்படியா? அவைகள் இந்த விடயத்தில் புலமையோ, அறிவோ இன்றி வெற்றிகரமாக தமது



பணியை நிறைவேற்றுகின்றன. உணர்வுகள் இல்லாவிட்டாலும் பொறுப்புடன் செயல்படுகின்றன.

இதனைக் கேட்ட வளிமண்டல ஆய்வுத்துறையில் ஆர்வமுள்ள முஸ்தபா ஆம் ஆசிரியரே வளிமண்டல ஆய்வு குறித்த ஈடுபாடு மிக முக்கியமானது. இந்த விடயத்தோடு சம்பந்தமான என்னை சிந்திக்கத் தூண்டும் ஒரு விடயத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள முடியுமா? என்றார்.

யூசுப் ஆசிரியர்: ஆம் தாராளமாக பகிர்ந்து கொள்ளலாம். அனைவரும் செவிமடுக்க ஒலிபெருக்கியில் உனது கருத்தை சொல்ல முடியும். என்று கூறியவராக ஒலிபெருக்கியை முஸ்தபாவிடம் கொடுத்தார். சற்று முன் எமது வாகனத்துக்கு எரிபொருள் வாங்கினோம். இந்த எரிபொருளின் உதவியுடன் ஒருசில தூரம் செல்ல முடியும். எரிபொருள் தீர்ந்து போகும் சந்தர்ப்பங்களில் ஓட்டுநர் மீண்டும் அந்த எரிபொருளை வாங்கி வாகனத்திற்கு நிரப்ப வேண்டிய தேவை ஏற்படும். என்னுள் தாக்கம் செலுத்திய இரண்டு மிக முக்கியமான அம்சம் இருக்கின்றது. முதலாவது, நீங்கள் கூறிய விண்மீன்கள் அவைகளின் எரிபொருள்கள் தீர்ந்து விடாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இரண்டாவதாக அந்த ஒரு விண்மீன் மற்றொரு விண்மீனிற்கு எந்த ஒரு தீங்கும் இழைக்காமல் தமக்கு வகுக்கப்பட்ட பாதையில் எப்படி சென்று கொண்டிருக்கின்றன.? ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது!

யூசுப் ஆசிரியர், முஸ்தபாவினுடைய இந்த கருத்தை ஆதரிக்கும் முகமாக தலையை அசைத்தார்.

## இஸ்லாம் மற்றும் விஞ்ஞான பல்கலைக்கழகம்

இப்போது அனைவரும் பல்கலைக்கழகத்தை வந்தடைந்தார்கள். அதன் அழகான பிரதான வாயிலால் பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்ததும் மாணவர்கள் பல்கலைக்கழக சூழலை நுணுக்கமாக அவதானிக்க ஆரம்பித்தார்கள். பல்கலைக்கழகத்துக்குள் பெரும் பெரும் கட்டிடங்கள் காணப்பட்டன. கண்ணாடிகளால் அவைகள்


அலங்கரிக்கப்பட்டிருந்தன. விசாலமான பெரிய பச்சைப்பசேல் என்று காட்சியளிக்கும் இடங்கள். வெவ்வேறு பீடங்களுக்கு செல்லும் சின்னச் சின்ன பாதைகள். குறிப்பாக தம்மை விட மூத்த வயதையுடைய கலாசாலை மாணவ மாணவிகள். இது ஆரம்ப பாடசாலையையோ அல்லது உயர்தர பாடசாலைகளையோ ஒத்திருக்கவில்லை.

திசை காட்டும் அறிவிப்புப் பலகைகளின் உதவியோடு மாநாடு நடைபெறும் மண்டபத்தை நோக்கிச் சென்றார்கள். மாநாட்டு மண்டபமும் வாசிக சாலையும் ஒரு சேர காணப்பட்டது. வகுப்பில் மிக அதிகம் புத்தகம் வாசிக்கும் மாணவர்களில் ஒருவரான சாரா வாசிகசாலையை கண்டபோதும் மிகவும் உற்சாகமடைந்தாள். கலாசாலையில் காணப்பட்ட கட்டிடங்களில் மிக உன்னதமாக காட்சியளித்த ஒரு கட்டிடமாக வாசிகசாலைக் கட்டிடம் காணப்பட்டது. அதிகமான ஜன்னல்கள், இரண்டு மாடிகளை கொண்ட பார்ப்போரைக் கவரும் அழகான ஒரு கட்டிடமாக அது காட்சியளித்தது. அந்தக் கட்டிடத்தை கண்டுகளிக்க ஆர்வமூட்டும் அழகான ஒரு கட்டிடக்கலையினால் அது கட்டப்பட்டிருந்தது.

சாரா, வாசிகசாலையின் நுழைவாயிலை ஆச்சரியத்தோடு ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஒரு விடயத்தை கண்டாள். வாசிகசாலையின் நுழைவாயிலில் வஹியின் முதல் வசனமான “படைத்த உமது ரப்பின் பெயரைக் கொண்டு வாசிப்பீராக” என்று எழுதப்பட்டிருந்தது. உடனே சாரா யூசுப் ஆசிரியரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்க முடியுமா? என்று கேட்டாள்.

யூசுப் ஆசிரியர்: ஆம் நிச்சயமாக கேட்க முடியும் என்று அன்பான தோரணையில் சொன்னார். வாசிக சாலையின் நுழைவாயிலில் எழுதப்பட்டிருக்கும் இந்த வசனத்தை எப்படி விளங்கிக் கொள்ள வேண்டும்?

யூசுப் ஆசிரியர்: சாரா, உங்களது அவதானத்துக்கு பாராட்டுக்கள். இந்த கேள்விற்குறிய பதிலை, நாம் கலந்துகொள்ள இருக்கும் நிகழ்ச்சியில் தருவார்கள் என்று நினைக்கின்றேன். இப்போது நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு மிகவும் குறுகிய நேரமே மீதமிருக்கின்றது. வாருங்கள்




நிகழ்ச்சிக்கு செல்வோம். நிகழ்ச்சி 10 மணி அளவில் ஆரம்பிக்க இருக்கின்றது. மாநாட்டு மண்டபம் மெதுவாக நிரம்ப ஆரம்பித்தது. மண்டபம் மிகவும் அழகாக இருந்தது. அதன் மேடை மற்றும் இருப்பிடங்கள் மிக வசதியாக காணப்பட்டது. மேடையில் அரங்கேறுகின்ற நிகழ்ச்சிகளை அனைவரும் எவ்வித தடங்களுமின்றி கண்டுகளிக்க முடியுமானதாக இருந்தன. மாணவர்களில் சிலர் தங்களுக்கு மத்தியில் ‘‘அழகான ஒரு மண்டபம்’’ என்றும், இன்னும் சிலர் ‘‘மிகவும் கவர்ச்சி மிக்க ஒரு மண்டபம்’’ என்றும் தங்களது ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார்கள்.

அலி ஜான்: ஆசிரியரே இந்த இடம் மிகவும் அழகானது. இங்கு வந்ததற்கு மகிழ்ச்சியடைகின்றோம்.

யூசுப் ஆசிரியர்: சற்று பொறுமையாக இருங்கள். இன்னும் நிகழ்ச்சி ஆரம்பிக்கவில்லை. நிகழ்ச்சியின் முடிவில் நிகழ்ச்சி குறித்து உங்களது கருத்துக்களைக் கேட்பேன்.


ஏனைய சில பாடசாலைகளில் இருந்தும் வருகை தந்திருந்த மாணவர்கள் மண்டபத்துக்குள் நுழைந்தார்கள். யூசுப் ஆசிரியர் அவர்களோடு வந்திருந்த ஒரு சிலரோடு கை குழுக்கி உரையாடினார். யூசுப் ஆசிரியரும் மாணவர்களும்

அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் அமர்ந்து கொண்டார்கள். இன்னும் சற்று நேரத்தில் நிகழ்ச்சி ஆரம்பிக்க இருந்தது. மண்டபம் மற்றும் ஒலிபெருக்கி போன்றவற்றை ஒழுங்கு செய்யும் நடவடிக்கைகள் நடந்தேறிக் கொண்டிருந்தன. நிகழ்ச்சியின் அறிவிப்பாளர் மேடைக்கு வருகை தந்ததும் அனைவரும் உற்சாகமடைந்தார்கள்.

அறிவிப்பாளர் ”பிஸ்மில்லாஹ்” என்று சொல்லி பேச்சை ஆரம்பித்து நிகழ்ச்சி நிரலை முன்வைத்தார். நிகழ்ச்சி அல்குர்ஆன் பாராயணத்தோடு ஆரம்பித்தது. குர்ஆன் பாராயணம் செய்தவர் அல்-குர்ஆனை அழகாக ஓதும் போட்டியில் முதலிடம் பெற்ற ஒருவர் ஆவார். இஸ்ரா சூராவிலிருந்து சில வசனங்கள் ஓதப்பட்டன. அந்த வசனங்கள் மாநாட்டின் தலைப்போடு மிகவும் பொருத்தமாக இருந்தது. அந்த வசனங்களின் மொழிபெயர்ப்பு பெரிய எழுத்துக்களில் திரையில் ஓடிக்கொண்டிருந்தன. திரையில் பின்வரும் வசனத்தின் மொழிபெயர்ப்பு எழுதப்பட்டிருந்தது: “ஏழு வானமும் பூமியும் மற்றும் அவை இரண்டுக்கும் இடைப்பட்ட அனைத்து அம்சங்களும் அல்லாஹ்வை துதி செய்கின்றன. அவனை புகழ்ந்து தஸ்பீஹ் செய்யாத எந்த ஒரு அம்சமும் கிடையாது. ஆனால் அவற்றை நீங்கள் விளங்கிக் கொள்ள மாட்டீர்கள்” இந்த வசனம் அனைவரினதும் கவனத்தை ஈர்த்தன. இந்த வசனம் முழு பிரபஞ்சமும் அல்லாஹ்வை புகழ்ந்து கொண்டும் தஸ்பீஹ் செய்து கொண்டும் இருக்கின்றன. என்ற கருத்தை முன்வைக்கின்றது.


## இஸ்லாத்திற்கும் அறிவியலுக்கும் இடையே ஒருமைப்பாடு உள்ளது

தேசிய கீதம் இயற்றப்பட்ட பின்னர் மாநாடு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. மாநாட்டின் ஆரம்ப உரை பல்கலைக்கழக முதல்வரால் நடத்தப்பட்டது. அவர் தனது உரையை “மாநாட்டுக்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன்” என்று அனைவரையும் வரவேற்றுக் கொண்டு பின்வரும் கருத்துக்களை முன் வைத்தார்.




அருமை இளைஞர்களே! எனது இளமை பருவம் சுகுரோவா என்ற இடத்தில் கழிந்தது. சுகுரோவா என்ற பிரதேசத்தில் எது அதிகம் விளைகிறது? சொல்லுங்கள் பார்க்கலாம் என்றார். உடனே அனைவரும் ஒரே குரலில் “பருத்தி” என்று பதிலளித்தார்கள். அதற்கு முதல்வர்: ஆம் சரியாகச் சொன்னீர்கள். சுகுரோவாவில் பருத்தி அதிகம் பயிரிடப்படுகின்றது. நாங்கள் முக்கியமாக பருத்தி விவசாயத்தில் ஈடுபட்ட குடும்பம். நான் உங்களுடன் பருத்தி செடியைப் பற்றி பேச விரும்புகிறேன். நான் குழந்தையாக இருக்கும்போது கருப்பு நிற மண்ணிலிருந்து மென்மையான, மிருதுவான, வெள்ளை வெளேர் என்ற நிறத்தில் ஆடைகளின் மூலப்பொருளான பருத்தி எப்படி உருவாக்கின்றது?

இந்த நிலை என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. மண்ணுக்கு அடியில் பருத்தியை தூய வெள்ளை நிறமாக மாற்றும் காரணி எதுவாக இருக்கும்? மண்ணிற்கடியில் நிற தீர்த்த தொழிற்சாலை இருக்கின்றதா? மிருதுவான பருத்தி இலைகள் எப்படி கனமான, கரடுமுரடான மண்ணிலிருந்து



வெளியேறுகிறது? உங்களுக்குத் தெரியும் புடவைகள் பருத்தியில் இருந்து செய்யப்படுகின்றன. பருத்தி விளையும் அந்த மண், புடவை என்றால் என்ன? ஆடை என்றால் என்ன என்று அறிந்து வைத்திருக்கின்றதா? அதேபோன்று பருத்தி விதைகளிலிருந்து சமையல் எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. இந்த எண்ணெயைத்தான் எமது தாய்மார்கள் சமையலறையில் உணவு சமைப்பதற்காக பயன்படுத்துகிறார்கள். எமது ஆரோக்கியத்துக்கு உகந்த சமையல் எண்ணெயை தயாரிப்பதற்கு மண் எங்கிருந்து கற்றுக் கொண்டது? ஆரோக்கியம் என்றால் என்ன என்று மண்ணுக்குத் தெரியுமா? இப்படியான பல கேள்விகள் எனது சிந்தனையில் தோன்றின. பருத்தி உருவாகுவதற்கு மண், நீர் மற்றும் சூரிய ஒளி அனைத்தும் ஒன்று சேர வேண்டும். அன்று சிறு பிள்ளையாக இருந்ததனால் “இவைகள் அனைத்தும் தங்களுக்குள் கலந்துரையாடிக் கொண்டா ஒன்று சேருகிறார்கள்? தங்களுக்கு மத்தியில் காணப்படும் பொது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எப்படி உடன்பாட்டிற்கு வருகின்றன என்று யோசித்தேன். அதன் பிறகு: “ஆனால் இவற்றுக்கு பகுத்தறிவே இல்லை எப்படி இதனை நடைமுறைப் படுத்த முடியும்!? பருத்தியால் நெய்யப்பட்ட ஆடைகள் மனிதர்களுக்கு தேவை என்பதனை இவைகள் எப்படி அறிந்து கொள்ளும்!?. கிழங்கை பொறிப்பதற்கு எண்ணை தேவை என்று இவற்றிற்கு எப்படி தெரியப்போகிறது!?”. என்று மனதுக்குள் கேட்டுக் கொண்டேன்.

ஆம் அருமை இளைஞர்களே! மனிதனின் அனைத்து தேவைகளையும் அவன் நினைக்காத புறத்தில் இருந்து அவனுக்கு அனுப்பப்படுகின்றன. இதனை சிந்தனை செய்தி

பார்க்கும் போது மனிதனுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இரண்டு வழிகள் காணப்படுகின்றன. ஒன்று மண், நீர், காற்று மற்றும் சூரியன் போன்ற உயிரற்ற சடப் பொருட்களுக்கு எங்களைப் பற்றி தெரியும். அவை எம்மை நேசிக்கின்றன. எனவே எமது தேவைகளை உணர்ந்து அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான உதவிகளை செய்கின்றன. அல்லது இரண்டாவது வழி மனிதனைப் பற்றி அறிவுள்ள, அவனை நேசிக்கும், அவன் மீது அன்பு செலுத்தும், அனைத்து அம்சங்களிலும் அதிகாரம் செலுத்தும் ஒருவன் இருக்கிறான். அவன்தான் மனிதனின் தேவைகளை மறக்காமல், எந்தவித குறையுமின்றி சரியான நேரத்தில் மனிதனின் தேவைகளை நிறைவு செய்கிறான். ஆம் இம் மாநாட்டின் இறுதியில் இந்தக் கேள்விக்கான பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதல்வர் அமைதியாக இருந்துவிட்டு இளைஞர்களை பார்த்து மிக அமைதியான தோரணையில் சிந்திக்க வைக்கும் பின்வரும் வார்த்தைகளை முன்வைத்தார். அருமை இளைஞர்களே! எமது இனிய மார்க்கமான இஸ்லாத்திற்கும் அறிவியலுக்கும் இடையே ஒருமைப்பாடு உள்ளது. ஏனெனில் விஞ்ஞானத்தின் ஆய்வுக்கு உட்பட்ட பகுதியான பிரபஞ்சமும் அதில் காணப்படும் அனைத்து படைப்புக்களும் அல்லாஹ்வின் படைப்புகளாகும். இஸ்லாம் என்பது அல்லாஹ்வினால் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வழியினூடாக மனிதர்களுக்கு அனுப்பப்பட்ட ஒரு மார்க்கமாகும். எனவேதான் இஸ்லாத்திற்கும் விஞ்ஞானத்துக்கும் இடையில் ஒருமைப்பாடு உள்ளது என்று சொல்கிறோம்.

இஸ்லாத்தின் இரண்டு முக்கிய மூலாதாரங்களான திருக்குர்ஆனும் ஹதீஸ்களும் அறிவு தேடுவதனை ஊக்குவித்து அறிஞர்களை வெகுவாகப் பாராட்டுகின்றது. இஸ்லாம் ஆராய்ச்சிக்கும் ஆய்வுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. இஸ்லாம் அறிவியலின் மதம், இஸ்லாமிய நாகரீகம் ஒரு அறிவியல் நாகரீகமாகும். மருத்துவவியல், வானவியல், புவியியல் போன்ற அத்தனை அறிவியல் துறைகளும் இறைவனால் படைக்கப்பட்ட பிரபஞ்சம்



மற்றும் அதில் காணப்படும் பொருட்கள் மற்றும் செயல்கள் குறித்து ஆராய்ச்சி செய்கின்றன. அனைத்துக் கலைகளும், அல்லாஹ்வினால் பிரபஞ்சத்தில் நிறுவப்பட்டிருக்கும் விதிகளை ஆய்வு செய்வதற்காக தோற்றுவிக்கப்பட்டது. அனைத்து கலைகளும் தனக்கே உரிய மொழியில் அல்லாஹ் ஒருவன் இருக்கிறான் என்றும் அவனைப் பற்றிய தகவல்களையும் எமக்குத் தருகிறது. அவற்றிற்கே உரிய இந்த வேறுபட்ட மொழிகளை மாநாடு முழுவதும் பல்வேறு பேச்சாளர்களின் மூலம் அறிந்து கொள்ள இருக்கின்றோம். எனவே அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட பிரபஞ்சத்தை ஆய்வு செய்கின்ற பொழுது பிரபஞ்சத்தின் சொந்தக்காரனை மறந்து விடக்கூடாது.


கண்ணுக்கு புலப்படும் பிரபஞ்ச அத்தாட்சிகளைப் பார்த்து சிந்திப்பதனூடாக கண்ணுக்கு புலப்படாத எமது இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். அனைவரையும் மீண்டும் ஒரு முறை வரவேற்றுக் கொண்டவனாக, உங்களது வாழ்வில் வெற்றியடைய பிராத்தித்துக் கொண்டு, இது போன்ற தலைப்புகளில் தொடர்ந்தும் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு திட்டமிட்டிருக்கின்றோம் என்ற மகிழ்ச்சியான

செய்தியை உங்களோடு பகிர்ந்து கொண்டவனாக உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல்கலைக்கழக முதல்வர் கைதட்டல்களுடன் தனது இருக்கையில் அமர்ந்தார். நிகழ்ச்சித் தொகுப்பாளர்: “இப்போது எமது முதல் பேச்சாளரான பொறியியல் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் துறை பேராசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் ஷுரைஹ் அவர்களை மேடைக்கு அழைக்கின்றேன்” என்று கூறியவராக மேடையை விட்டு ஒதுங்கினார்.

## பகுத்தறிவு, ஆதாரங்களின் அடிப்படையில் செயற்படுகின்றன







அருமை இளைஞர்களே வாருங்கள் உங்களோடு வாழ்க்கையில் அன்றாடம் நடைபெறும் ஒரு அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறேன். நாம் ஒரு மலையின் அருகில் இருக்கின்றோம் என வைத்துக் கொள்வோம். திடீரென்று அந்த மலையின் பின்புறத்தில் இருந்து புகை மண்டலங்கள் எழுந்தன. இந்த காட்சியை கண்டவுடன் அங்கு தீ பற்றுகின்றது என்ற முடிவுக்கு வருகின்றோம். அந்தத் தீயை நாம் நேரடியாக எமது கண்களால் காணாவிட்டாலும் அந்த இடத்திலே மேலெழும் புகைமண்டலம் எமக்கு அந்த மலையின் பின்புறத்தில் தீ இருக்கிறது என்பதனை சுட்டிக்காட்டுகின்றது. பிறகு அந்த மலைக்கு மேல் ஏறிச் சென்று நாம் எமது கண்களால் அந்த தீயைக் கண்டால் எமது நம்பிக்கை அதிகரிக்கும். இறுதியாக, அந்த தீயின் அருகில் சென்று அதன் சூட்டை உணர்ந்ததன் பின்னர் அந்த இடத்தில் தீ இருக்கிறது என்பது குறித்து அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்படும்.

அதே போன்றுதான், ஒரு அழகான கட்டிடத்தை காணும் போது அதனை திட்டமிட்டு, கட்டிய பொறியியலாளர் ஒருவர் இருக்கிறார் என்று ஏற்றுக் கொள்கின்றோம். பொறியியலாளரை

நாம் எமது கண்களால் காணவிட்டாலும் கூட அந்தக் கட்டிடத்தின் பொறியியலாளரின் இருப்பை சுட்டிக்காட்டுகின்றது. ஒரு பாடலை செவிமடுக்கும் பொழுது அந்தப் பாடலை இயற்றும் ஒருவர் இருக்கிறார் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும். இவைகள் அனைத்தும் எமது பகுத்தறிவால் ஏற்றுக்கொள்ளப்படும் யதார்த்தங்களாகும். பகுத்தறிவு எந்த ஒரு விடயத்தையும் ஆதாரமின்றி ஏற்றுக் கொள்ளாது.

## ஒரு விடயத்தை செய்தவர் கண்களுக்கு தென்படாமல் இருப்பது அந்த விடயம் தானாக உருவாகியது என்பதனைக் குறிக்காது

அருமை இளைஞர்களே! அழகான ஒரு கட்டிடத்தை காணும் போது எமது சிந்தனையில் முதலாவது இந்த கட்டிடத்தை கட்டியவர் யார் என்ற கேள்வி தோன்றும் அல்லவா?

உதாரணமாக இஸ்தாம்பூலில் அமைந்திருக்கும் சுலைமானிய மஸ்ஜித் மற்றும் ‘‘தொல்மாபஹ்சை’’ மாளிகை போன்ற அற்புதமான கட்டிடக்கலைகளைக் கொண்ட கட்டிடங்களை காணும் பொழுது அவற்றை கட்டிய பொறியியலாளர் யாராக இருக்கும் என்று அறிந்து கொள்ள ஆசைப்படுகிறோம். ஏனெனில் இவ்வளவு அற்புதமான, அழகான ஒரு கட்டிடம் தானாக தோன்றியிருக்க முடியாது என்று எமது பகுத்தறிவு எமக்குச் சொல்கிறது.

அருமை இளைஞர்களே! நான் உங்கள் அனைவரிடமும் கேட்கின்றேன் இந்த மாநாட்டு மண்டபம் தானாக உருவாக முடியுமா? மண்டபத்தில் இருந்த அனைவரும் ‘‘முடியாது’’ என்று ஓரே குரலில் சத்தமாகச் சொன்னார்கள், அலி ஜான் உடைய சத்தம் அனைவருக்கும் கேட்டது. யாராவது ஒருவர் வந்து ‘‘இந்த மாநாட்டு மண்டபம் தானாக உருவாகியது என்று வாதிட்டால் அவருடைய அறிவு குறித்து நீங்கள் சந்தேகம் அடைய மாட்டீர்களா? என்று கேட்கப்பட்ட போது அனைவரும் ஒரே குரலில் ‘‘ஆம்’’ என்று சொன்னார்கள்.


ஆசிரியர் ஷுரைஹ், முன் வரிசையில் அமர்ந்திருந்த ஹசனை மேடைக்கு அழைத்தார். அவனுடைய பெயரை கேட்டார் ஹசன் என்று சொன்னதும் ஹசனைப் பார்த்து

அன்புக்குரிய ஹசனே மண்டபம் தானாக உருவாகியது என்று ஒருவர் வாதிட்டால் அவருக்கு என்ன பதிலை சொல்வீர் என்று கேட்டார்.

ஹசன்: இந்த அற்புதமான, அழகிய கட்டிடம் நிச்சயமாக ஒரு பொறியியலாளரால் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று சொல்லுவேன். இப்படியான ஒரு அற்புதமான கட்டிடம் தானாக உருவாக முடியாது. இந்த கட்டிடத்தை கட்டிய பொறியியலாளரை நான் அறிவேனாக இருந்தால் அவருடன் ஒரு சந்திப்பை ஏற்படுத்துவேன் என்று பதில் சொன்னார். ஷுரைஹ் ஆசிரியர், ஹசனுக்கு நன்றி தெரிவித்தவராக மேடையில் இருந்து அவரை செல்லுமாறு வேண்டிக் கொண்டு தனது உறையை பின்வருமாறு தொடர்ந்தார்.

அருமை நண்பர்களே நான் கட்டிடக்கலை துறையிலும் துறைபோகக் கற்றுள்ளேன் என்று கூறியவராக புன் முறுவல் பூத்தார். ஹசன் ஒரு சந்திப்பை ஏற்படுத்த விரும்பிய பொறியியலாளர் நான்தான். நாங்கள் ஒரு கட்டிடத்தை கட்டி எழுப்புவதற்கு முன்னர் அதன் வரைபடத்தை வரைந்ததன் பின் ஒவ்வொன்றையும் மிக நுணுக்கமாக திட்டமிடுவோம். நாம் இந்த மண்டபத்தை கட்டும் போது நாம் வாழும் உலகத்தின் கட்டிட ஒழுங்கை பார்த்து ஆச்சரியமடைந்தோம். அதன் ஒலி, ஒளி ஒழுங்கு, காற்றோட்டம் மற்றும் அதன் உறுதி இவை அனைத்தையும் நாம் திட்டமிடும் கட்டிடத்தில் நடைமுறைப்படுத்த முயற்சித்தோம். இந்த கட்டிடம் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக, முதலாவதாக இந்த மண்டபம் எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் என்பதனை சிந்தித்தோம். பின்னர் பரப்பளவு எப்படி அமைய வேண்டும் என்று தீர்மானித்தோம். அதேபோல் கோடை காலத்தில் குளிராகவும், குளிர் காலத்தில் சூடாகவும் இருப்பதற்குத் தேவையான ஒழுங்கில் காற்றோட்ட அமைப்பை திட்டமிட்டோம். மண்டபத்தில் இருக்கும் அனைவரும் எந்தவித தடையும் இன்றி மேடையில் நடைபெறும் நிகழ்ச்சியை கண்டுகளிக்கும் விதமாக கதிரை வடிவமைப்புக்குத் தேவையான திட்டத்தைத் தீட்டினோம். பின்னர் மண்டபத்தின் உட்பகுதியை அழகான கலைகளால் அலங்காரப்படுத்தினர். குறிப்பாக புவி நடுக்கம் அல்லது தீ பற்றிக்கொள்ளுதல் போன்ற ஆபத்துக்களின் போது கட்டிடத்திற்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்படா வண்ணம் கட்டிடத்தை திட்டமிட்டோம். மிக துல்லியமான பொறியியல் திட்டமிடலின் பின்னர்தான் இந்தக் கட்டிடத்தை கட்டி முடிப்பதில் வெற்றி கண்டோம்.

அப்பிள் பழத்தினூடாகப் பார்த்தல்



# நாம் வாழும் இந்த உலகம் அற்புதமான ஒரு அரண்மனையைப் போன்றது

இப்போது நாம் அனைவரும் ஒன்றாக சிந்திப்போம். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த பிரபஞ்சமும் அற்புதமான ஒரு கட்டிடத்தை போன்றது அல்லவா? ஒரு கட்டிடம் என்பதனை விட அற்புதமான ஒரு அரண்மனை போன்றது. எனவே இந்த அரண்மனையின் கூரையாக இருக்கும் நீல வானம் பகல் காலங்களில் சூரியனாலும் இராக்காலங்களில் சந்திரன் மற்றும் நட்சத்திரங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதால் பிரகாசித்து ஜொலித்துக் கொண்டிருக்கின்றது. அதன் நிலப்பரப்பைப் பொறுத்தவரை ஒரு முனையில் இருந்து மாற்றொரு முனை எப்போதும் தன்னை புதுமைப்படுத்திக் கொண்டிருக்கும் மரங்கள், எல்லா இடங்களையும் அலங்கரிக்கும் பூக்கள், அனைத்து இடங்களையும் குதூகலமாக வைத்துக் கொண்டிருக்கும் உயிரினங்களால் நிரம்பிக் காணப்படுகின்றது.

சூரியன் இந்த அரண்மனையின் ஒளிவிளக்கு போன்றது. அருமை நண்பர்களே! உங்களது வீடுகளில் அல்லது பாடசாலைகளில் எந்த இடத்திலும் கட்டி வைக்கப்படாமல் ஆனால் என் நேரமும் ஆகாயத்தில் சுழன்று கொண்டிருக்கும் நிலையில் உள்ள விளக்குகள் இருக்கின்றனவா?

மாணவர்கள்: இல்லை என்று சத்தமிட்டார்கள். விளக்குகளை ஓரிடத்தில் கட்டி வைக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

ஷுரைஹ் ஆசிரியர்: சூரியன் பிரம்மாண்டமான ஒரு விளக்காக இருந்த போதும் அது என் நேரமும் சுற்றிக் கொண்டிருக்கின்றது. உலகளவு மிகப் பெரிய, ஒரு மில்லியன் முந்நூறாயிரம் விண் மண்டலங்களை உள்ளடக்க முடியுமான அளவு விசாலமானதாக இருந்த போதும் தொடர்ந்து அது வளிமண்டலத்தில் சுற்றிக் கொண்டே இருக்கின்றது. வானத்தின் தூண் இல்லை என்பது போலவே எந்த ஒரு இடத்திலும் கட்டப்பட்டும் இல்லை. ஏனைய விண் மண்டலங்களைச் சூழவும் அவைகள் சுற்றித் திரிந்துக் கொண்டிருக்கின்றன. எமக்குத் தேவையான ஒளியையும், சூட்டையும் அவை எமக்கு தந்து கொண்டிருக்கின்ற அதே சமயம் எம்மிடத்திலே எந்தவித பிரதி உபகாரமும் கேட்டதும் இல்லை.

காற்று, எமது பூமியில் காணப்படும் உயிரினங்கள் குளிர் பெறுவதற்கும் தூய்மையான காற்றை சுவாசிப்பதற்கும் தேவையான குளிரூட்டி போன்று இருக்கிறது அல்லவா? அதே நேரம் காற்று, மழைமேகங்களை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு நகர்த்தும் பணியையும் செய்கின்றது. அதேபோன்றுதான் காற்று, பூக்களின் மகரந்த சேர்க்கைக்குக்கும் துணையாக இருக்கின்றது.

மலைகளைக் பொறுத்தவரையில் அவைகள் தனியொரு அழகு. அவைகள் தனக்குள்ளே உயிரினங்களுக்கு தேவையான கனிய பொருட்களையும் ஆரோக்கியமான நீர் வழங்கலையும் பெற்றிருக்கின்றன. அதே நேரம் பூமி திடமாக இருப்பதற்கு தேவையான தூண்களாகவும் அவை காணப்படுகின்றன. அருமை நண்பர்களே எனது உரையை பின்வரும் அம்சத்தோடு நிறைவு செய்ய விரும்புகின்றேன். சாதாரணமான ஒரு வீடு அல்லது சாதாரணமான ஒரு கட்டிடம் கூட திடீரென்று தானாக உருவாக முடியாது என்றிருக்கும் போது அற்புதமான ஒரு அரண்மனை போன்று காட்சி அளிக்கும் இப்பூமி எப்படி தானாக உருவாகி இருக்க முடியும். அவ்வாறு தானாக தோன்றியிருந்தால் இவ்வளவு கவர்ச்சியையும், ஒழுங்கையும் தன்னகத்தே கொண்டிருக்க முடியுமா!?. இப்பூமியில் நிரம்பி காணப்படும் அருட்கொடைகள், மலைகள் அனைத்தையும் அவதானிக்கும் பொழுது எம்மை நேசிக்கும் எம்மீது அன்பு செலுத்தும் ஒருவனால் தான் இவ்வுலகம் படைக்கப்பட்டிருக்க முடியும்.

இந்த பிரபஞ்சம் தன்னகத்தே கொண்டிருக்கும்: திட்டமிடல் ஒழுங்கு, காலநிலை மாற்றங்கள், கலை அம்சங்கள், அற்புதமான காட்சிகள் இவை அனைத்தின் மூலமும் இறைவனை எமக்கு அறிமுகப்படுத்துகின்றது.

இதுவரை பொறுமையோடு செவிமடுத்தற்காக நன்றி தெரிவித்துக் கொண்டு உங்கள் அனைவருக்கும் வெற்றி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்கின்றேன். மாணவர்கள் தங்களுக்கு மத்தியில் இந்த உரையை மதிப்பீடு செய்து கொண்டார்கள். ஒருவர் “இந்த நிகழ்ச்சிக்கு வந்தது நன்றாக அமைந்துவிட்டது” என்று தமது சந்தோசத்தை வெளிப்படுத்தினார்கள்.

## படைப்புகளின் ரகசிய மொழி

நிகழ்ச்சி தொகுப்பாளர் மீண்டும் மேடைக்குச் சென்று: ‘‘இப்போது எமது அடுத்த பேச்சாளரை “படைப்புகளின் ரகசிய மொழி“ என்ற தலைப்பிலே உரையாற்றுவதற்காக மேடைக்கு அழைக்கின்றேன்’’ என்று கூறிவிட்டு மேடையே விட்டு ஒதுங்கினார்.

தகவல் தொடர்பாடல் துறை பேராசிரியர் மேடைக்குச் சென்று பின்வருமாறு உரையாற்ற ஆரம்பித்தார்: அருமை மாணவர்களே! ‘‘தொடர்பாடல்’’ என்ற வார்த்தையை செவி மடுக்காதவர் உங்களில் எவரும் இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஏனெனில் தொடர்பாடல் என்பது எம் அனைவரின் வாழ்விலும் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. மனிதர்களாகிய நாம் எமது உணர்வுகள், தகவல்கள் மற்றும் கருத்துக்களை வாய்மொழி மூலமாகவோ அல்லது வேறு வழிகளில் தொடர்பாடலை ஏற்படுத்தி அடுத்த தரப்புக்கு எத்தி வைக்கின்றோம். வாய்மொழி மூல தொடர்பாடல் என்பது பேசுவதன் மூலம், எமது நாவினால் மற்றும் வார்த்தைகளால் செய்யப்படுகின்ற தொடர்பாடலாகும். எமது தகவல்களை அடுத்தவர்களோடு பரிமாறிக் கொள்ளும் மற்றொரு வழிமுறைதான் உடல் மொழி மற்றும் நமது நிலை போன்றவையாகும். உதாரணமாக, நாம் ஒருவரோடு அறிமுகமானதன் பிறகு புன்முறுவல் பூத்தால் அது அவருடன் அறிமுகமான சந்தோஷத்தை எடுத்துக் காட்டுகிறது.

அருமை நண்பர்களே! ஒரு மனிதனின் முகம், உடல் மொழி மற்றும் அந்த சந்தர்ப்பத்தில் அவருடைய நடவடிக்கைகளை அவதானிக்கும் போது குறிப்பிட்ட நபர் மகிழ்ச்சியாக இருக்கின்றாரா அல்லது மகிழ்ச்சி அற்றவராக இருக்கின்றாரா?, சந்தோஷமாக இருக்கின்றாரா அல்லது கோவமாக இருக்கின்றாரா? உற்சாகமாக இருக்கின்றாரா அல்லது உற்சாகமற்று இருக்கின்றாரா என்பவற்றை அறிந்து கொள்ள முடியும். அவர் நாவினால் அதனை சொல்லாவிட்டாலும் உடல் மொழி அதனை வெளிப்படுத்தும்.

அதேபோன்று வைத்தியர் அணியும் ஆடை, அவரது கழுத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும் ஸ்டெடஸ்கோப், ஒரு சட்டத்தரணி நீதிமன்றத்தில் அணியும் கருப்பு ஆடை, மற்றும் ஒரு இராணுவ அதிகாரியின் சீருடை, மற்றும் கழுத்தில் மாட்டப்பட்டிருக்கும்

ஆயுதம் இவை அனைத்தும் என்ன பணியில் ஈடுபடுகின்றனர் என்று வார்தைகளால் சொல்லாவிட்டாலும் அவர்களுடைய உடலில் இருக்கும் அடையாளங்கள் அவர்களின் பணியை சொல்லிக் கொண்டிருக்கும்.

அருமை நண்பர்களே! சில சந்தர்ப்பத்தில் ஒருவர் தாகித்திருப்பதனைக் காண்கிறோம். அவர், தான் தாகத்தோடு இருக்கிறேன் என்று வார்த்தைகளால் சொல்லாவிட்டாலும் அவருடைய நிலை பல விடயங்களை வெளிப்படுத்தும். சில போது நான் தாகித்துள்ளேன் என்று வார்த்தைகளால் சொல்லாமல் அமைதியாக இருந்து தாகத்தோடு இருக்கிறேன் என்பதனை உடல் மொழியின் ஊடாக வெளிப்படுத்தும் பொழுது பல நன்மைகளை அடைந்து கொள்வார். எமது முன்னோர்கள்: ”பேச்சு வெள்ளியாக இருந்தால் அமைதி தங்கம்” என்று உடல் மொழியின் பெருமானத்தை தெளிவுபடுத்தியுள்ளனர்.






நாம் மிக அவதானமாக கவனித்துப் பார்த்தால், எமது அன்றாட வாழ்வில் வார்த்தைகள் மூலம் செய்யப்படும் தொடர்பாடலை விட உடல் மொழி மற்றும் குறியீடுகள் மூலம் செய்யப்படும் தொடர்பாடல்கள் மிகவும் அதிகம் என்பதனை காண முடியும். எமது கண்களுக்கு தென்படும் எச்சரிக்கை குறியீடுகள், பாதை குறியீடுகள், பாதை ஒலிகள் நிறங்கள் கூட ஒரு வகையில் எம்மோடு தொடர்ப்புகளை ஏற்படுத்தி எமக்கு பல செய்திகளை சொல்கிறன. கையடக்க தொலைபேசியின் சார்ஜ் கருவி “என்னைக் கொண்டு பட்டாணியை சார்ஜ் பண்ண முடியும்” என்ற செய்தியை எமக்கு தருகிறது. பாதையில்

செல்லும் டாக்ஸி ‘‘என்னோடு ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு பயணிக்க முடியும்’’ என்ற செய்தியை எமக்கு தருகிறது. சுவரில் காணப்படும் கடிகாரம் ஒரு நாளில் பல தடவைகள் வார்த்தைகள் இன்றி எம்மோடு தொடர்பாடலில் ஈடுபடுகின்றது.


## தன்நிலையில் இருந்து கொண்டு உங்களுக்கு செய்திகள் வழங்குகின்றேன். உங்களுக்குத் தெரியுமா?

கண்ணியத்திற்குரிய இளைஞர்களே! இதே போன்றுதான் அனைத்து படைப்புகளும் அவைகளின் தன்நிலையில் இருந்து கொண்டே பேசாமல் அல்லது கதைக்காமல் எம்மோடு தொடர்பாடலில் ஈடுபடும் சிறப்புத் தன்மைகளைக் கொண்டவை. இந்த சிறப்பு தன்மையை, அவைகளைப் படைத்த இறைவனான அல்லாஹ் அவற்றுக்கு கொடுத்துள்ளான். நாம் பேசும் அதே மொழியை அறிந்த ஒரு மனிதனோடு தொடர்பாடலில் ஈடுபடுவது எவ்வளவு இலகுவானது. அதே போன்றுதான் பிரஞ்சத்தில் காணப்படும் படைப்புக்கள் பேசும் மொழியை புரிந்து கொள்ள முடியுமாக இருந்தால் அந்தப் படைப்புக்கள் எமக்கு என்ன தகவலை சொல்ல வருகின்றது என்பதனை அறிந்து கொள்ள முடியுமாக இருக்கும்.

அனைத்து படைப்புக்களும் எமது இறைவன் எமக்கு சொல்ல விரும்புகின்ற செய்தியை எமக்கு நகர்த்துவதற்கான ஊடகமாக செயற்படுகின்றன. அவைகள் தமக்கே உரிய மொழியில் எம்மோடு கதைக்கின்றன. அவற்றையும் எம்மையும் படைத்த படைப்பாளனை தெளிவுபடுத்துகின்றன, அறிமுகப்படுத்துகின்றன. இதனை பரிபாஷையில் “தன்னிலை” என்று அழைக்கப்படும். படைப்புக்கள் தம்மிடம் காணப்படும் மற்றும் காணப்படாத சிறப்பம்சங்கள் மூலம் இறைவனை அறிமுகப்படுத்துகின்றன. உதாரணமாக அறிவை வேண்டி நிற்கும் ஒரு விடயத்தை எந்த ஒரு அறிவற்ற ஒருவரால் செய்யப்பட்டால் அது பற்றி சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் அறிவில்லாத ஒருவர் தனது அறிவீனம் காரணமாக குறித்த விடயத்தை தன்னால் செய்யப்பட்டவில்லை என்பது தெரியவரும்.

மிகப் பெரும் பலத்தை வேண்டி நிற்கும் ஒரு விடயம் பலவீனமான ஒருவரால் செய்யப்படுவதானது எமக்கு ஒரு

செய்தியை சொல்ல மாட்டாதா? பலவீனமான ஒருவரால் செய்யப்படும் பலமான அம்சம் இன்னொருவரால் செய்யப்பட்டு இருக்கின்றது என்பதே சுட்டிக்காட்டுகின்றது. கலை அம்சங்கள் நிறைந்த அற்புதமான ஒரு படைப்பு, கலை பற்றியோ அல்லது அழகியல் குறித்தோ எந்த பின்னணியுமற்ற ஒருவரால் வடிவமைக்கப்பட்டது என்று சொல்லப்பட்டால் அதனை எந்தளவு நம்ப முடியுமாக இருக்கும்?! எனவேதான் ஒவ்வொரு படைப்பும்: “ஏய் மனிதா! நாம் தன்னிலையில் இருந்து கொண்டு உனக்கு ஒரு செய்தியை சொல்கின்றோம் உமக்கு புரிகிறதா?” என்கின்றது.



அருமை நண்பர்களே! உதாரணமாக விஷத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் பூச்சி வகையைச் சேர்ந்த தேனீ எமக்கு இனிமையான ஆரோக்கியமான தேனை தருகின்றது. இதனூடாக எமக்கு ஒரு செய்தியையும் சொல்கிறது. அவை தன்னிலையில் இருந்து கொண்டு எமக்கு பின்வரும் செய்தியை சொல்கிறது: “என்னில் காணப்படும் அழகுகள் அனைத்தும் அல்லாஹ்வால் எமக்கு தரப்பட்டவையாகும். மண், நீர் மற்றும் சூரிய ஒளி போன்றவற்றைப் படைத்த அல்லாஹ்வே எம்மையும் படைத்துள்ளான். நானும் ஏனைய பூக்கள் போன்று அல்லாஹ்வின் இருப்பை, ஏகத்துவத்தை மற்றும் அவனது பண்புகளை எம்மில் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றோம். பூமி யாருக்கு சொந்தமோ பூமியிலிருநது வெளியாகும அனைத்தும் அவனுக்கே சொந்தமானவை. இவ்வுலகில் காணப்படும் என்னை போன்ற ஏனைய அனைத்து பூக்களும் ஒரே சூரியனிலிருந்து ஒளி பெறுகின்றன. ஒரே காற்றிலிருந்து சுவாசிக்கின்றன. அந்த சூரியனின் சொந்தக்காரனே எமதும் சொந்தக்காரனாவான்.”

அருமை இளைஞர்களே! இப்படியாக ஈமானின் ஒளியால் படைப்புக்களை பார்க்கின்ற ஒரு மனிதன், அனைத்து படைப்புகளும் தனக்கே உரிய மொழியில் எம்மோடு உரையாடுகின்றன என்றும் அறிந்து கொண்டு பிரபஞ்சத்தின் மொழியை புரிந்து கொள்வான்.

இறுதியாக பொறுமையோடு செவிமடுத்ததற்காக உங்கள் அனைவருக்கும் நன்றியை கூறி உங்கள் அனைவருக்கும் நிம்மதியான, சந்தோஷமான வாழ்வு கிட்டட்டும் என பிராத்தித்தவனாக விடை பெருகின்றேன்.

கரகோஷங்களுக்கு மத்தியில் பேச்சாளர் விடைபெற்றுச் சென்றார். மாணவர்கள் படைப்பினங்கள் மனிதர்களோடு வார்த்தைகளை பயன்படுத்தாமல் தொடர்பாடலில் ஈடுபடுகிறது என்ற விடயத்தை மிகச் சரியாக விளங்கிக் கொண்டிருந்தார்கள். அடுத்ததாக அழகியல் கலைத் துறைப் பேராசிரியரின் உரை நடை பெற இருந்து. அதற்கு முன் 30 நிமிடங்கள் இடைவேளை வழங்கப்பட்டது. மாணவர்கள் அடுத்த பேச்சாளர் என்ன செய்திகளை சொல்லப் போகிறார் என்று ஆர்வத்தோடு இருந்தார்கள். மாணவர்கள் அனைத்து பேச்சாளர்களின் உரைகளில் இருந்தும் முக்கியமான குறிப்புக்களை எடுப்பதோடு பேச்சாளர்கள் அனைவரையும் நுணுக்கமாக செவிமடுப்பதில் கவனம் செலுத்தினார்கள்.

# அறிவு வேண்டி நிற்கும் ஒரு விடயத்தை அறிவற்ற ஒருவரால் செய்ய முடியாது

மாணவர்கள் தமக்கு வழங்கப்பட்ட ஓய்வு வேளையில் புஅயா என்ற இடத்துக்குச் சென்றார்கள். மாணவர்களின் ஒரு பகுதியினர் யூசுப் ஆசிரியரிடமிருந்து அனுமதி பெற்று மண்டபத்தின் வலது மூலையில் இருக்கும் பானங்கள் விற்பனை செய்யும் இயந்திரத்தை நோக்கிச் சென்றனர். அவர்கள் தாகமாகவும் சிறிது பசியுடனும் இருந்தனர். விற்பனை இயந்திரம் தண்ணீர், குளிர்பானங்கள் மற்றும் பிஸ்கட் போன்ற பானங்கள் மற்றும் உணவுகளால் நிரப்பப்பட்டது. பணத்தை குறிப்பிட்ட அந்த இடத்திலே செழுத்தியதன் பின் நீங்கள் விரும்பும் உணவு அல்லது பானம் இருக்கும் இடத்தில் அமைந்திருக்கும் இலக்கத்தை டயல் செய்தால் அந்த உணவு அல்லது பானம் இயந்திரத்தின் கீழ்பாதியில் இருந்து உங்களுக்கு பெற்றுக்கொள்ளலாம். இதனை யூசுப் ஆசிரியர் அவர்களை தூரத்திலிருந்து அவதானித்துக் கொண்டிருந்தார்.

தனது அருகில் இருந்த மாணவர்களை பார்த்து பின்வருமாறு சொன்னார்கள்: “வாருங்கள் மாணவர்களே நாமும் அந்த இடத்துக்குச் செல்வோம்”.




அனைவருமாக சேர்ந்து அந்த இயந்திரத்தை நோக்கிச் சென்றார்கள். அவர்களது பாடசாலையில் இப்படி ஒரு இயந்திரம் காணப்படவில்லை. மாணவர்களின் ஒரு பகுதியினர் அந்த இயந்திரத்தை ஆச்சரியத்தோடு அவதானித்துக் கொண்டிருந்தனர்.

யூசுப் ஆசிரியர்: இந்த இயந்திரம் சற்று முன்னர் உரை நிகழ்த்திய பேச்சாளரினால் சொல்லப்பட்ட வார்த்தைகள் அற்ற தகவல் பரிமாற்றத்துக்கு உதாரணமாக சொல்ல முடியும் அல்லவா?

முஸ்தபா: ஆம் ஆசிரியரே ஏனெனில் இயந்திரம்: "நீங்கள் என்னிடமிருந்து நீர் கேட்டால் நீர், பிஸ்கட் கேட்டால் பிஸ்கட், சொக்கலைட் கேட்டால் சொக்கலைட் என்னால் தர முடியும்" என்று தன்னிலையில் இருந்து கொண்டு சொல்கின்றது.

யூசுப் ஆசிரியர்: சரியாகச் சொன்னீர். வேறு ஏதாவது சொல்லக்கூடிய யாராவது இருக்கிறீர்களா?

சாரா: ஆசிரியரே இந்த இயந்திரத்துக்கு அறிவோ அல்லது உணர்வோ இல்லை. எமக்கு நீர் மற்றும் உணவின்பால்

தேவை உள்ளது என்று இந்த இயந்திரத்துக்கு எப்படி தெரியப் போகின்றது. நிச்சயமாக மனிதனைப் பற்றி அறிந்த அவனது தேவைகளைப் புரிந்து கொண்ட ஒருவரே இயந்திரத்தை இந்த இடத்தில் வைத்திருக்கின்றார்.

வகுப்புத் தலைவர் ஸயீத்: ஆசிரியரே! இந்த இயந்திரத்துக்குள் இருக்கின்ற பொருட்களை இதற்குள் ஒருவர் வைக்காமல் விட்டிருந்தால் இந்த இயந்திரத்தால் தானாக எதுவும் செய்ய முடியாது.

யூசுப் ஆசிரியர்: மிகச் சரியான ஒரு விடயம். நீங்கள் அனைவரும் தன்னிலையிலிருந்து கொண்டு நிறைவேற்றப்படும் தொடர்பாடல் குறித்து மிக அழகாக விளங்கி இருக்கிறீர்கள். சற்று முன்னர் உரையாற்றிய பேச்சாளர்: ''அறிவு வேண்டி நிற்கும் ஒரு விடயம் அறிவற்ற ஒருவரால் செய்யப்படும் போது அது குறித்து சிந்திக்க வேண்டும்.'' என்றார் அல்லவா?!. இப்போது நாம் இயந்திரத்தின் மூலம் எமது தாகத்தை தீர்த்துக் கொள்கின்றோம். சடப் பொருளான இந்த இயந்திரத்தால் எமக்கு நீர் புகட்டி எமது தாகத்தை தீர்க்க முடியுமா? நாம் தாகித்திருக்கின்றோம் என்ற விடயம் இந்த இயந்திரத்துக்கு தெரியுமா? நிச்சயமாக தெரியாது. அப்படியானால் நாம் இதன் பின்னணியை ஆய்வு செய்ய கூடாதா? மண்ணின் நிலையும் இதே போன்றுதான். நாம் பசித்திருப்பதை அது எப்படி அறிந்து கொள்வது!? கோதுமை மூலம் எமது பசியைப் போக்கிக் கொண்டு மகிழ்ச்சியடையும் செய்தியை அது எப்படி அறிந்து கொள்ளப் போகிறது.

மாணவர்கள் அனைவரும் ஒரே குரலில்: ''நிச்சயமாக அறிய மாட்டாது ஏனெனில் அவற்றிற்கு அப்படி ஒரு திறமை இல்லை'' என்றனர்.

யூசுப் ஆசிரியர்: ஆம், அவைகள் வெறுமனே ஊடகங்களாகும். எமது இறைவன் அவனது அருட் பொக்கிஷத்திலிருந்து எமக்காக அனுப்பும் அருள்கள் எம்மை வந்தடைவதற்கான ஊடகங்களே அவை. அல்லாஹ் ஒவ்வொரு வருடமும் வசந்த காலத்தில் அவனது அருட் பொக்கிஷத்திலிருந்து அருள்களை அனுப்புகின்றான். குளிர்காலத்தில் வரண்டு போய் இலைகள் உதிர்ந்து எலும்புக்கூடு போன்று காட்சியளிக்கும் மரங்கள் பழங்களால் நிரம்பி வழிகின்றன. ஒவ்வொரு வருடமும் இப்படித்தான் நடைபெறுகின்றது. ஏனெனில் அல்லாஹ்வின்

அருள் பொக்கிஷம் ஒருபோதும் தீர்ந்து போகவோ முடிந்துவிடவோ மாட்டாது. ஆனால் இந்த இயந்திரங்களில் இருக்கும் பானங்கள் முடியவடையும் போது ஒருவர் அவற்றை மீண்டும் பானங்களைக் கொண்டு நிரப்பாத பட்சத்தில் அந்த இயந்திரங்கள் தானாக எமக்கு எதனையும் தர மாட்டாது.

ரையான்: ஆசிரியரே! பணம் எடுக்கும் பணி இயந்திரங்களின் நிலையும் இதுதானே!?

யூசுப் ஆசிரியர்: ஆம், அவற்றின் நிலையும் அதேபோல்தான். எந்த மாற்றமும் இல்லை. எந்த ஒரு இயந்திரமும் உங்களுக்கு பணதின் தேவை இருக்கிறது என்று அறிய மாட்டாது. ஏனெனில் அவற்றுக்கு உணர்வோ அல்லது அறிவோ இல்லை. எனவே பணத்தை செலுத்தும் ஒருவர் இல்லாவிட்டால் உங்களுக்கு இயந்திரம் தானாக பணம் தர மாட்டாது.

## ஓவியன் இல்லாமல் ஓர் ஓவியம் தோன்ற வாய்ப்பில்லை

இடைவேளை முடிவடைந்து விட்டது. மாணவர்கள் மீண்டும் மண்டபத்திற்குச் சென்று தத்தமது இடங்களில் அமர்ந்து கொண்டார்கள். தொகுப்பாளர் மீண்டும் மேடைக்கு வந்து அழகியல் என்ற தலைப்பில் உரையாற்ற இருக்கும் பேச்சாளரை மேடைக்கு அழைத்து விட்டுச் சென்றார். கிட்டத்தட்ட 50 வயதை உடைய ஒருவர் என அனுமாணிக்க முடியுமான பேச்சாளர் பலத்த கரகோஷங்களுக்கு மத்தியில் மெதுமெதுவாக மேடைக்குச் சென்று தனது பேச்சை ஆரம்பித்தார். தனது உரையை நடமாடியவராக நிறைவேற்ற போகவதாகக் கூறினார். மேடையில் காணப்படும் மிகப்பெரும் திரையில் ஒரு காட்சி காட்சிப்படுத்தப்பட்டது.

திரையில் காட்சியளித்துக் கொண்டிருந்த படத்திலே ஓவியம் ஒன்று காணப்பட்டது. இந்த ஓவியத்திலே பூக்களின் மேல் சுற்றித் திரியும் வர்ணவர்ண அழகான மற்றும் வித்தியாசமான வண்ணாத்திப் பூச்சிகளின் படங்கள் காணாப்பட்டன. அழகியல் கலை ஆசிரியர்: ‘‘உங்களில் மேடைக்கு ஏற விரும்புகின்ற ஒரு மாணவரை மேடைக்கு அழைக்கின்றேன். அவரோடு சேர்ந்து இந்த ஓவியத்தை தெரியப்படுத்த யோசிக்கிறேன்.’’ என்றதும் வகுப்பில் ஓவியனாக அறிமுகமாய் இருக்கும் ரையான் தனது கையைத் தூக்கினான். ஆசிரியர் ரையானைப் பார்த்து

மேடைக்கு வாருங்கள் என்றதும் மேடைக்கு அருகாமையில் இருந்த ரையான் அவசர அவசரமாக மேடைக்குச் சென்றான். ரையான் சற்று குதூகலமடைந்தான் ஏனெனில் ஓவியம் வரைவது விளக்கப்படுத்துவது அவனைப் பொருத்தவரையில் இலகுவானது. ஆனால் அதனை பல்கலைக்கழக ஆசிரியர் ஒருவரோடு சேர்ந்து விளங்கப்படுத்துவது எப்படி அமையும் என யோசித்துக் கொண்டிருந்தான். இந்த சிந்தனைகளோடு வேகமாக மேடைக்குச் சென்று பேச்சாளரின் அருகில் நின்று கொண்டான். பேச்சாளர் ஆரம்பமாக அவரின் தன்னம்பிக்கையை பாராட்டிய பின்னர் அவரை ஆறுதல் படுத்தினார்.

ஆம் ரையான், நாம் இருவரும் சேர்ந்து இந்த ஓவியத்தை விளங்க முயற்சிப்போம். ஓவியம் எங்களுக்கு என்ன செய்தியைச் சொல்ல வருகிறது?

ரையான்: சரி, முயற்சிக்கின்றேன். வாசில் வரையப்பட்டிருக்கும் ஓவியத்தில் வண்ணாத்திப் பூச்சிகளை காண்கின்றேன். ஒவ்வொரு வண்ணாத்திப் பூச்சிகளும் மிக அழகாகவும், வித்தியாசமாகவும் கலையாகவும் உள்ளது. பின்புறத்தில் திறந்த வெளி தென்படுகின்றது. அங்கு வர்ணவர்ண பூக்கள் மற்றும் மரங்கள் காணப்படுகின்றன. வண்ணாத்திப் பூச்சிகள் பறக்கின்றன அதே நேரம் ஓவியத்தட்டும் காணப்படுகின்றது. அதற்கு மேல் பல வர்ணங்களும் வித்தியாசமான தூ ரிகைகளும் இருப்பதைக் காண்கின்றேன்.

உங்கள் விளக்கம் மிக அருமையானது ரையான்! இந்த ஓவியம் தானாக தோன்றியிருக்க வாய்ப்பு உண்டு என நினைக்கிறீரா?

ரையான்: முடியவே முடியாது! இந்த அழகான ஓவியத்தை மிகவும் திறமை வாய்ந்த ஒரு ஓவியரால் மாத்திரமே வரைய முடியும். அதே நேரம் ஓவியத்தின் கீழ்பகுதியில் தனது பெயரையும் எழுதி இருக்கிறார்.

சரியாகச் சொன்னீர், ஓவியர் தனது பெயரோடு சேர்த்து கையொப்பத்தத்தையும் இட்டிருக்கிறார். இந்த ஓவியத்தை நிச்சயமாக ஒரு ஓவியர்தான் வரைந்திருக்க வேண்டும். ஏனெனில் எந்த ஒரு ஓவியமும் ஓவியரின்றி தோன்ற வாய்ப்பு இல்லை. எந்த ஒரு சிலையும் தானாக தோன்ற முடியாது. இந்த அழகிய ஓவியம் திறமை வாய்ந்த ஓர் ஓவியரின்

உணர்வு மற்றும் அவரது ஆற்றலின் வெளிப்பாடாகும்.

அருமை ரையானே! உன்னிடத்தில் இன்னொரு கேள்வி கேட்க விரும்புகின்றேன். அதாவது ஓவியத்தில் இருக்கும் வர்ணங்கள் அங்குமிங்கும் பறந்து சென்று இந்த வித்தியாசமான, அழகான பட்டாம்பூச்சிகளின் தோற்றத்தை உருவாக்கி இருக்க முடியாதா?

ரைய்யான்: இல்லை, ஒரு போதும் முடியாது.

பேச்சாளர்: ஏன் முடியாது?

ரைய்யான்: ஏனெனில் அங்கும் இங்கும் பறக்கும் வர்ணங்களால் இவ்வளவு அழகான மற்றும் நேர்த்தியான ஓவியம் ஒன்று வரைய முடியாது. அதேநேரம் வர்ணங்களிடம் இந்த படத்தை வரையக்கூடிய ஆற்றலோ திறமையோ இல்லை.

பேச்சாளர்: பாராட்டுக்கள் ரையான்! மிக அழகாகச் சொன்னீர். ஓவியத்தை வரையும் போது பயன்படுத்தப்பட்டிருக்கும் சடப் பொருளான வர்ணங்கள் ஓவியத்தின் ஓவியராக இருக்க முடியாது. ஓவியத்தை வரையும் போது பயன்படுத்தப்பட்டிருக்கும் தூரிகைகளுக்கு ஓவியரிடம் காணப்படும் திறமைகள் காணப்படுவதில்லை. வாசில் காணப்படும் காகிதம் எந்த விதத்திலும் ஓவியராக இருக்க வாய்ப்பில்லை.

பேச்சாளர் பார்வையாளர்களை நோக்கியவராக பின்வருமாறு பேச்சைத் தொடர்ந்தார்: அருமை நண்பர்களே! ஆரம்பமாக ஒரு விடயத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். மண்டபத்தில் இருக்கின்ற அனைவரும் அந்த செய்தியை



ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தனர். விஷேடமாக ரையான்.

பேச்சாளர் தனது பேச்சை தொடர்ந்தார். சில போது நானும் பட்டாம்பூச்சிகளின் படங்களை வரைவேன். அப்படி வரையும் போது உதாரணமாக ஒரு பட்டாம்பூச்சியை எடுத்துக் கொள்வேன். ஓவியத்தை வரைய ஆரம்பிக்கும் போது பட்டாம்பூச்சியின் இறக்கையிலிருந்து ஆரம்பிப்பேன். ஆனால் அடுத்த இறக்கையை வரையும் போது மிகக் கவனமாகவும் நுணுக்கமாகவும் வரைய வேண்டிய தேவை இருக்கிறது.

ரையான்: (ஆர்வமாக) ஏனைய இறக்கையை வரையும் போது ஏன் மிக கவனமாகவும் நுணுக்கமாகவும் வரைய வேண்டும்?

பேச்சாளர்: ஏனெனில் பட்டாம்பூச்சியின் அடுத்த இறக்கையை வரையும் போது முதலாவதாக வரையப்பட்ட இறக்கையைப் பார்த்து வரைகின்றேன். இது கவனத்தையும் நுணுக்கத்தையும் வேண்டி நிற்கின்றது. ஏனெனில் இரண்டு இறக்கைகளும் ஒரே விதமாகவும், ஆச்சரியமான ஒழுங்கையும் அற்புதமான அளவையும் கொண்டிருக்கின்றன.

அழகியல் கலை ஆசிரியர் இவற்றை விளக்கிக் கொண்டிருந்த போது, ஓவியம் வரைவதில் ஓரளவு அனுபவம் பெற்றிருந்த ரையான், பேச்சாளரின் வார்த்தைகளுக்கு தலையசைத்து ஆமோதித்துக் கொண்டிருந்தான்.

## ஒரு செயல் அந்த செயலின் தோற்றத்திற்கு காரணமாக இருப்பவரின் வகையைச் சேர்ந்தது அல்ல

அழகியல் கலை பேச்சாளர் ரையானுக்கு நன்றி தெரிவித்தவராக அவருடைய இடத்துக்கு அவரை அனுப்பி வைத்தார்.

ஆம் அருமை நண்பர்களே! நாம் அனைவரும் ஓவியர் இன்றி ஓர் ஓவியம் உருப்பெற முடியாது என்றும் அதற்கு வாய்ப்பில்லை என்பதனையும் அறிந்து கொண்டோம். ஏனெனில் நாம் ஓர் ஓவியம் உருப்பெறுவதற்கு தேவையான படிமுறைகளை பார்க்கும் பொழுது ஒரு ஓவியத்தையும் அந்த செயலில் ஈடுபடுகின்ற ஓவியரையும் காண்கின்றோம்.

அதாவது ஒருவரின் நடவடிக்கையால் தோற்றம் பெற்ற ஒரு படைப்பாகும். ஓவியரைப் பொறுத்தவரை அவர் இந்த ஓவியத்தின் தோற்றத்திற்கு காரணமாக இருந்தவர். அதாவது ஓவியத்தை வரைபவர் மற்றும் அதற்கு வர்ணம் தீட்டுபவர் அபார திறமைகளையும், ஆற்றலையும் கொண்ட ஒருவராவார்.



ஓவியரின் இருப்பு ஓவியம் இன்றி சாத்தியமாகும். ஆனால் ஓவியத்தின் இருப்பு ஓவியர் இன்றி சாத்தியமற்றதாகும். ஒரு ஓவியருக்கு ஒளி பற்றிய அறிவு, காட்சிக் கண்ணோட்டம், முப்பரிமாண சிந்தனை, வண்ணங்களின் ஒத்திசைவு போன்ற பல அறிவைப் பெற்றிருப்பதோடு ஒரு படத்தை வரைய வேண்டும். ஓவியர் ஓவியத்தின் வகையைச் சார்ந்தவர் அல்ல என்பது மிக பிரதானமான அம்சமாகும். அதாவது ஒரு செயல் அந்த செயலின் தோற்றத்திற்கு காரணமாக இருப்பவரின் வகையைச் சேர்ந்தது அல்ல. ஒரு செயலைப் படைக்க முற்படும் ஒருவரிடத்தில் அபார ஆற்றல்கள் இருக்க வேண்டும். ஒரு ஓவியத்தை வரைய விரும்பும் ஒருவரிடத்தில் ஒளி பற்றிய அறிவு, காட்சி கண்ணோட்டம், முப்பரிமான சிந்தனை மற்றும் வர்ணங்களின் ஒத்திசைவு போன்ற பல தகவல்களும் அறிவுப் பின்புலமும் இருக்க வேண்டும். இந்த அறிவு வர்ணங்களிடமோ அல்லது ஓவியம் வரையப்படுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற தூரிகையிடமோ இல்லை.

அதேபோன்று ஒரு சிலையை எடுத்துக்கொண்டாலும் கூட அதே நிலைதான். சாதாரண ஒரு சிலை கூட தானாக உருவாக முடியாது. எந்த ஒரு சிலையும் தன்னைத் தானே படைத்துக் கொள்ளவும் முடியாது. நான் ஒரு அழகியல் கலை

துறை சார்ந்த பேராசிரியராவேன். இன்று வரை உயிருள்ள மற்றும் அறிவுள்ள ஒரு ஓவியர் இன்றி வர்ணங்களும் தூரிகைகளும் ஒன்று சேர்ந்தன் பின் தானாக ஒரு ஓவியம் தோற்றம் பெற்றதாக காணவில்லை. ஒரு சிலையும் அப்படியே தன்னைத்தானே படைத்துக்கொண்ட ஒரு சிலையையும் எங்கும் காணவில்லை.

பேச்சாளர் தனது வார்த்தைகளை பின்வருமாறு தொடர்ந்தார்: அப்படியாக இருந்தால் வாருங்கள் நாம் அனைவரும் ஒன்றாக உண்மையான ஒரு பட்டாம்பூச்சியை கற்பனை செய்வோம். ஆம், உண்மையான ஒரு பட்டாம்பூச்சி பறக்கும், சுவாச ஒழுங்குகளை கொண்டிருக்கும். அதன் இறக்கைகள் செயற்படும். அதற்கு ரத்த ஓட்டமும் இருக்கும். எப்போதும் அதன் இறக்கைகளை அடித்துப் பறப்பதற்கு தேவையான ரத்த ஒட்டத்தை வழங்க ஓர் ஒழுங்கு தேவைப்படுகின்றது. அவை தங்குதடையின்றி செயல்பட முடியுமாக இருப்பதற்கும் தமது வாழ்வை நடத்திக் கொண்டு செல்வதற்கும் குறிப்பாக வெளி உலகத்தோடு தொடர்பு கொண்டு தேவையான வாழ்வாராதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக இருக்கும் எத்தனையோ உடல் உறுப்புக்கள் தேவைப்படுகின்றன. பத்திரிகைக்கு மேல் வரையப்பட்டிருக்கும் இந்த பட்டாம்பூச்சியின் ஓவியமும் ஒரு ஓவியரால்தான் வரைய முடியும் அல்லவா? அப்படியாக இருந்தால் உயிருள்ள ஒரு பட்டாம்பூச்சி படைப்பாளன் ஒருவன் இன்றி உலகில் தானாக தோன்றமுடியும் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியுமா?

இந்த கேள்விக்கான பதிலை கலைத்துறைப் பேராசிரியர் ஒருவரால் உங்களுக்கு வழங்கப்படும் என நினைக்கிறேன். எனவே கவனமாக செவிசாய்த்தற்காக நன்றியை தெரிவித்துக் கொண்டு அவருக்கான இடத்தை வழங்கி விடை பெறுகின்றேன்.

நிகழ்ச்சி தொகுப்பாளர் மீண்டும் ஒரு முறை மேடைக்கு வந்து அழகியல் கலை துறை பேச்சாளரருக்கு நன்றியை தெரிவித்து கலைத்துறை பேராசிரியரை மேடைக்கு வருமாறு அழைத்து விட்டு சென்றார். கலைத்துறை பேராசிரியர் வயதான ஒருவராக இருந்த போதிலும் உற்சாகமாய் இருந்தார். அவர் மேடையில் ஏறி அனைவருக்கும் தனது சலாத்தை பலத்த குரலில் முன்வைத்தார். மேடையில் காணப்படும் திரையில் சில வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தது. அவை தலைகீழாக எழுதப்பட்டிருந்ததனால் வாசிப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது.

# ம்டுண்வே ர்யவிஓ ருஓ டகூ குற்தித்யவிஓ ன்யிசிச்பூம்ாடட்ப

ஆசிரியர்: இங்கு என்ன எழுதப்பட்டுள்ளது என நினைக்கிறீர்கள்? என்று மண்டபத்தில் காணப்படும் அனைவரையும் பார்த்துக் கேட்டார். அனைவரும் எழுத்துகளை பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர எவரும் பதில் சொல்ல முன்வரவில்லை. திடீரென்று மற்றொரு பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கின்ற ஒரு மாணவன் எழுந்து நின்று: “என்னால் வாசிக்க முடியும்” என்றார்.

ஆசிரியர்: வாசித்துக் காட்ட முடியுமா?

மாணவர்: பட்டாம்பூச்சியின் ஓவியத்திற்கு கூட ஒரு ஓவியர் வேண்டும்.

ஆம் அந்த மாணவர் உண்மையில் சரியாகத்தான் வாசித்தார். ஆசிரியர் அந்த மாணவரை பாராட்டிவிட்டு தனது பேச்சைத் தொடர்ந்தார். உங்கள் கவனத்தை ஈர்க்கவே இந்த வாக்கியங்களை தலை கீழாக எழுதினேன். உடனே சரியாக வாசித்தீர்கள் உங்களுக்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இளைஞர்களே! விஞ்ஞான ரீதியாக ‘பட்டாம்பூச்சிகள்’ இராக்கால பட்டாம்பூச்சிகள் மற்றும் பகல்கால பட்டாம்பூச்சிகள் என்று இரண்டு வகையாக பிரித்து பார்க்கப்படுகிறது. கிட்டத்தட்ட 150 வகையான பட்டாம்பூச்சி வகைகள் இருக்கின்றது என்ற செய்தி உங்களுக்கு தெரியுமா? உயிருள்ள, பறந்து திரியும் பல வர்ணங்களையுடைய ஒரு பட்டாம்பூச்சி தான் உயிர் வாழும் சூழலோடு பல்வேறு வகையில் தொடர்பு பட்டுள்ளன. உதாரணமாக பகற்கால பட்டாம்பூச்சி தனது பாதையையும் திசையையும் அறிந்து கொள்வதற்கு அதன் சூரிய ஒளியின்பால் தேவை உடையதாக இருக்கிறது.

அனைத்து வகையான பட்டாம்பூச்சிகளும் எந்தவித பிரச்சனையும் இன்றி பறந்து திரிவதற்காக புவியீர்ப்புச் சக்தி தேவைப்படுகிறது. பூக்கள் மற்றும் மகரந்தச் சேர்க்கை போன்ற செயற்பாடுகளோடு அவற்றுக்கு நெருங்கிய தொடர்பு இருக்கிறது. கிட்டத்தட்ட ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் உயிர் வாழ முடியுமான பட்டாம்பூச்சிகள் பறப்பதற்கு தேவையான பயிற்சியை எந்த ஒரு பாடசாலையிலும் பெற்றுக்

கொள்வதில்லை. பறக்கும் சட்டங்களைக் கற்றுக் கொள்ளாமல் எப்படி அற்புதமாக பறக்க முடிகின்றன. குறிப்பாக இராக்கால பட்டாம்பூச்சிகள் நுகர்வு மற்றும் செவிமடுத்தல் செயற்பாடுகள் மிகவும் நுணுக்கமானவையாகும். சில வகை பட்டாம்பூச்சிகள் இருக்கின்றன அவை 5 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் மற்றொரு பட்டாம்பூச்சியின் வாசத்தை நுகர முடியுமாக இருக்கும்.

ஆம் அருமை நண்பர்களே! பட்டாம்பூச்சியை படைக்கும் ஒருவரிடத்தில் மேலே சொன்ன சிறப்பம்சங்களும் இருக்க வேண்டும். ஆரம்பமாக பட்டாம்பூச்சியின் வாழ்வோடு தொடர்புடைய மற்றும் அது வாழும் சுற்றுச்சூழலுடன் தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் தெரிந்திருக்க வேண்டும். அப்படியாக இருந்தால்தான் ஒரு வண்ணாத்திப் பூச்சியை படைக்க முடியும் ஏனெனில் பட்டாம்பூச்சி அந்த ஒழுங்குக்குள்தான் வாழப் போகின்றது. பட்டாம்பூச்சிக்கு சூரியனோடு உள்ள தொடர்பு என்ன? அதேபோன்று புவியீர்புச் சக்தியோடு அதற்கு இருக்கும் தொடர்பு என்ன? போன்றவற்றை அறிந்திருக்க வேண்டும். எனவே இவற்றை அறிந்திருக்க முடியாத ஒருவர் பட்டாம்பூச்சியின் படைப்பாளனாக இருக்க முடியாது.

அருமை நண்பர்களே!பட்டாம்பூச்சிகள் மற்றும் ஈக்கள் போன்ற உயிரினங்கள் ஒன்று இரண்டு படைக்கப்படுவதில்லை மாறாக எண்ணிலடங்காத அளவு அதேநேரம் மிக வேகமாக படைக்கப்படுகின்றன. மிகப் பெரும் எண்ணிக்கையில் மிகவும் வேகமாக படைக்கப்படுகின்ற போதும் படைக்கப்பட்ட ஒவ்வொன்றிலும் ஒரேவிதமான சிறப்பம்சங்கள் மற்றும் அற்புதங்கள் காணப்படுகின்றன. எனவே இவை அனைத்தும் ஒரு படைப்பாளனின் அற்புதமான படைப்புக்கள் ஆகும்.

## ஒவ்வொன்றும் இன்னொன்றோடு தொடர்புடையவை!


பட்டாம்பூச்சியின் வாழ்வு, உணவு மற்றும் பறந்துதிரிதல் போன்ற செயற்பாடுகள் நடைபெறுவதற்கு ஏனைய அனைத்து அம்சங்களும் அதற்கு வசப்படுத்திக் கொடுக்கப்படிருக்க வேண்டும். அதாவது பட்டாம்பூச்சி யாருக்கு சொந்தமானதோ

சூரியனும் அவருக்கே சொந்தமானதாக இருக்க வேண்டும். ஏனெனில் பட்டாம்பூச்சி பார்பதற்கு சூரிய ஒளி தேவைப்படுகின்றது. எனவே சூரியனுக்கு சொந்தக்காரனாக இல்லாத ஒருவரால் பட்டாம்பூச்சிக்கு பார்வையை கொடுக்க முடியாது. பிரபஞ்சத்தில் ஒருமைப்பாடு காணப்படுகிறது. ஒவ்வொன்றும் இன்னொன்றோடு நெருங்கிய தொடரபுப்பட்டிருக்கின்றன. ஒரு உயிரினத்தின் பார்வை, பறத்தல் போன்ற அம்சங்களோடு சேர்த்து அது உயிர் வாழ்வதற்கான எண்ணிலடங்கா அம்சங்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. இந்த அம்சங்களை அறிந்திருக்காத ஒருவர் பட்டாம்பூச்சி ஒன்றை படைக்க முடியாது. ஒரு பட்டாம்பூச்சி உயிர் வாழ்வதற்கு என்னென்ன அம்சங்கள் தேவையோ அது சார்ந்த அத்தனை அம்சங்களையும் படைத்தால்தான் ஒரு பட்டாம்பூச்சியை படைக்க முடியும். எனவே பட்டாம்பூச்சியை யார் படைத்தானோ அவனே சூரிய குடும்பத்தையும் படைத்துள்ளான். ஏனெனில் பிரபஞ்சத்தில் ஒவ்வொன்றும் இன்னொன்றுடன் நெருங்கிய தொடர்புடையது.

## உயிர் அற்ற ஒன்று உயிர் கொடுக்க முடியாது

இந்தக் கருத்தை சற்று விரிவாக ஆராயலாம் என்று நினைக்கின்றேன். உதாரணமாக அழகான ஒரு பட்டாம்பூச்சியின் மேல் இருக்கும் முதன்மையான சிறப்பம்சம் உயிர் ஆகும். ஒரு படைப்பில் காணப்படும் மிகவும் உயரிய சிறப்பம்சம் உயிர் ஆகும். இப்படியான ஒரு சிறப்பம்சத்தை கொடுக்க முடியுமான ஒருவருக்கு அதனை விட மிக உன்னதமான சிறப்புகள் இருக்க வேண்டும் என்று நினைக்கின்றேன். இதன் காரணமாகவே உயிருள்ள ஒரு பொருளை படைப்பதற்கு முதலாவதாக படைப்பாளன் உயிர் உள்ள ஒருவனாக இருக்க வேண்டும். உயிரற்ற ஒன்று எப்படி உயிர் வழங்க முடியும்!? எனவேதான் உயிரற்ற நீர், மண், காற்று மற்றும் சூரியன் போன்ற சடப் பொருட்கள் ஒன்று சேர்ந்து பட்டாம்பூச்சியை படைக்க முடியும் என்பது சாத்தியமற்ற ஒரு விடயமாகும்.

அருமை இளைஞர்களே! பட்டாம்பூச்சிக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் பார்வைப் புலனைக் கொடுக்க கூடியவன் சூரியனின் சொந்தக்காரனாகவும் இருக்க வேண்டும். ஏனெனில்



பார்வைப் புலன் சூரியன் ஒளி இன்றி தனது கடமையை செய்ய மாட்டாது. பட்டாம்பூச்சிக்கு செவிப் புலனை வழங்கியவன் ஒலியையும் படைக்கக் கூடியவனாகவும் இருக்க வேண்டும். ஏனெனில் ஒலியின்றி செவிகளின் பயன் என்ன? எனவேதான் உயிரினங்களுக்கு பார்வைப் புலனை வழங்கிய அல்லாஹ் மிகவும் கூர்மையான பார்வையை உடையவனாகும். படைப்புக்கள் அனைத்துக்கும் அவற்றிற்கே உரிய தனியான செவிப் புலனை வழங்கியவன் மிகவும் நுணுக்கமாக செவிமடுக்காவிடின் அந்த ஆற்றலை எங்களுக்கு எப்படி தர முடியும்!? அனைத்து உயிரினங்களையும் அவைகளுக்கு மத்தியில் வித்தியாசமான மொழிகளில் உரையாட வைக்கும் அல்லாஹ் கதைக்கும் ஆற்றலின்றி இருக்க முடியுமா!?

கரகோஷங்களுக்கு மத்தியில் நிகழ்ச்சி தொகுப்பாளர் மேடைக்குச் சென்று பின்வருமாறு ஒரு ஆலோசனையை முன்வைத்தார்:

அருமை நண்பர்களே! உங்களது நிலையை பார்க்கும் போது நீங்கள் அனைவரும் கலைப்படைந்து விட்டீர்கள் போல் தெரிகிறது. சற்று முன்னர் பேச்சாளர் முன்வைத்த

கருத்துக்கள் போன்று இன்னும் அழகான விடயங்கள் பேசப்பட இருக்கின்றன. உங்களது நிலையை பார்க்கும் பொழுது அந்த விடயங்களை இன்னும் அவதானமாகவும், நுணுக்கமாகவும் செவிமடுப்பதற்காக இடைவேளை ஒன்று தேவைப்படுவது போல் தெரிகிறது. இப்போது நிகழ்ச்சி நிரலில் காணப்படும் 30 நிமிட இடைவெளிக்கு செல்கின்றோம். புஅயே என்ற இடத்தில் தேனீர் விருந்து உபசாரம் நடைபெறும்.

## ஒரு வேலையை பலர் செய்ய முற்பட்டால் அந்த வேலை தாருமாறாகிவிடும்

புஅயே என்ற இடத்தில் தேநீர் உபசாரம் வழங்கப்பட்டது. மாணவர்கள், யூசுப் ஆசிரியருடன் கதிரைகளில் அமர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களது கவனங்கள் அந்த இடத்திலிருந்து மீன் தொட்டிகளை நோக்கிச் சென்றது. அவர்கள் அந்த மீன் தொட்டிகளில் இருந்த இடத்துக்குச் சென்றனர். உண்மையில் அவை மிக அழகாக காட்சியளித்தன. அந்த மீன் தொட்டிக்குள் பச்சை நிற தாவரங்கள், வித்தியாசமான மீன் வகைகளும் காணப்பட்டன. நீருக்குள்ளும் அதற்கு மேல் புறத்திலும் முகில் துளிகள் இருந்தன.

யூசுப் ஆசிரியர்: உங்களில் யாராவது தனது வீட்டில் மீன் தொட்டிகளில் மீன் வளர்க்கின்றவர்கள் இருக்கிறீர்களா?

சாரா: எமது வீட்டில் இருக்கின்றன ஆசிரியரே!

யூசுப் ஆசிரியர்: எப்படி மீன் வளர்ப்பது மிகவும் கஷ்டமான ஒரு செயலா?

சாரா: ஆம் ஆசிரியரே! ஓரளவு கஷ்டமான செயல்தான். எனது தந்தை அதனை பராமரிப்புச் செய்கின்றார். நான் அவருக்கு உதவியாக இருக்கின்றேன். ஆனாலும் அது இன்பம் தரக்கூடிய ஒரு விடயமாகும்.

யூசுப் ஆசிரியர்: தந்தை அந்தப் பராமரிப்பை எப்படி செய்கின்றார் என்று சற்று விவரிக்க முடியுமா?

சாரா: ஆசிரியரே மீன் தொட்டிக்குள் மிக முக்கியமான சமநிலைகள் இருக்கின்றன. தந்தை எப்போதும் “வாழ்வு ஒரு சமநிலை” என்று சொல்லுவார். உதாரணமாக மீன்

தொட்டிக்குள் மின்சாரத்தின் உதவியுடன் ஆக்சிஜன் இயந்திரம் ஒன்று இயங்கிக் கொண்டிருக்கும். அந்த இயந்திரம் மீன் தொட்டிக்குல் வாழும் மீன்களுக்கு தேவையான தூய ஆக்சிஜனை வழங்கும். ஆக்சிஜன் குறிப்பிட்ட அளவோடு இருக்க வேண்டும். அதன் அளவு கூடவும் கூடாது, குறையவும் கூடாது. எப்போதும் சரியான சமநிலையில் இருக்க வேண்டும். ஒரு முறை நாம் விடுமுறைக்காக சென்றிருந்தோம். அப்போது அந்த இயந்திரங்கள் பழுதடைந்து போனதால் மீன்களுக்கு தேவையான ஆக்சிஜன் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக மீன் தொட்டியினுள் இருந்த அனைத்து மீன்களும் இறந்து போயிருந்தன. அதே போன்றுதான் மீன் தொட்டி எப்போதும் தூய்மையானதாக இருப்பது மிக முக்கியமானதாகும். மின்சார உதவியுடன் இயங்கும் கருவிகளைக் கொண்டு நீரின் தூ ய்மை தொடர்ந்து பேணப்படும். மீன்கள் தொடர்ந்து நீரை அசுத்தப்படுத்திக் கொண்டே இருக்கும். மீன்கள் அசுத்தமான நீரில் வாழ மாட்டாது. எனவேதான் மீன் தொட்டிக்குள் காணப்படும் அசுத்தங்களை தூய்மை படுத்தும் மீன்களையும் வளர்ப்போம்.

அத்தோடு மீன் தொட்டிக்குள் இருக்கும் ஒழுங்கும் சமநிலையும் சீர்குலைந்துவிடக் கூடாது என்பதற்காக இரண்டாம் நபர் தலையிடுவதை விரும்ப மாட்டார். ஒரு முறை மாமியின் மகன் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். அவர் தந்தையின் அனுமதியின்றி தவறுதலாக அதிகமான உணவை மீன்களுக்கு கொடுத்ததனால் அந்த மீன்கள் நோய்வாய்ப்பட்டன. அப்போது தந்தை “ஓரிடத்தில் இரண்டு தலைவர்கள் இருக்க முடியாது. அப்படி இருந்தால் அங்கு ஒழுங்கு இருக்க மாட்டாது.” என்ற முன்னோர்களின் வார்த்தையை எமக்கு ஞாபகமூட்டினார். இந்த நிகழ்வை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்.

யூசுப் ஆசிரியர்: சாரா நீங்கள் சொன்னதைப் பார்க்கும் போது மீன் தொட்டியை பராமரிப்பது இலகுவானதொரு ஒரு செயலல்ல என விளங்குகிறது அல்லவா!?

சாரா: ஆசிரியரே இன்னும் முடியவில்லை. நாம் பெரிய மீன்களையும் சிறிய மீன்களையும் வேறு வேறாக பராமரிக்கின்றோம். மீன் தொட்டியின் ஒளி சமநிலையாக இருப்பதும் மற்றுமொரு மிக முக்கியமான அம்சமாகும். அந்த ஒளி மீன்களுக்கு தீங்கு இழைத்து விடாதளவு இருக்க வேண்டும்.

யூசுப் ஆசிரியர்: உண்மையில் இந்த செயல் மிகவும் கவனமாகவும் நுணுக்கமாகவும் செய்யப்பட்ட வேண்டிய ஒரு செயல்! உங்களது வீட்டில் இருக்கும் மீன் தொட்டியின் அளவு என்ன? ஒரு அறையின் அளவு இருக்குமா?

சாரா: இல்லை ஆசிரியரே! அந்த அளவு பெயரிதாக இல்லை. ஒன்றரை மீட்டர் நீளமும், 70 சென்டிமீட்டர் அகலமும் உடையது.

யூசுப் ஆசிரியர்: பார்த்தீர்களா நண்பர்களே! ஒரு சிறிய மீன் தொட்டி கூட மிகக் கவனமான பராமரிப்பை வேண்டி நிற்கின்றது. மீன்களின் தேவைகளை சரியான நேரத்தில் பூர்த்தி செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. இரண்டாம் நபரின் தலையீடு மீன் தொட்டியின் ஒழுங்கை சீர்குலைக்கின்றது. அப்படியானால் ஓடைகள், குளங்கள், ஆறுகள், கடல்கள் மற்றும் சமுத்திரம் போன்வற்றில் வாழும் மீன்களை பராமரிப்பது யார்? அங்கே சமநிலைமையை பேணுவது யார்? தூய்மையான ஆக்சிஜனை வழங்குபவர் யார்? மீன்களோடு சேர்ந்து அங்கு வாழும் ஏனைய ஜீவன்களை போசிப்பவன் யார்? அதனை நிர்வகிப்பது யார்? தூய்மை செய்வது யார்?



முனைலிலும், சாதாரண நீர் நிலையங்களிலும் உணவுகளை எந்தவித குறையுமின்றி பெற்றுக் கொள்ளும் கடல் வாழ் உயிரினங்களைப் பற்றி சிறிது சிந்திப்போம். சில மீன்கள் மில்லியன் கணக்கான முட்டைகளை இடுகின்றன. ஆனாலும் கடலில் காணப்படும் சமநிலை எவ்விதத்திலும் குறைவதில்லை. இங்கு இந்த அற்புதமான சமநிலையை ஏற்படுத்தியவன் யார்? அதற்குப் பிறகு அந்த சமநிலையை பராமரிப்பவன் யார்?

அருமை இளைஞர்களே! சற்று சிந்திப்போம்! நாம் வாழும் பூமி, விண்வெளியில் வேகமாக சுழன்றுக் கொண்டிருந்த போதும் கடல்களோ அல்லது சமுத்திரங்களோ பூமியை ஆக்கிரமிப்பதில்லை. அற்புதமான ஒரு சமநிலை பேணப்படுகின்றது. ஓர் ஒழுங்கு அற்புதமான முறையில் தொடர்ந்தும் பேணப்படுவதானது இந்த செயலை ஒருவரால் செய்யப்படுவதோடு நிர்வாகமும் செய்யப்படுகிறது என்பதற்கான அடையாளம் ஆகும். இரண்டு படைப்பாளன் இருந்தால் அனைத்தும் குளறுபடி ஆகி அங்கு காணப்படும் ஒழுங்கும் சீர்குலையும். ஏனெனில் ஒரு வேலையை பலர் செய்கின்ற பொழுது அந்த வேலை குளறுபடியாகிவிடும். கடலின் நிர்வாகம், ஒழுங்கு, பராமரிப்பு மற்றும் அங்கு வாழும் உயிரினங்களின் உணவு இவை அனைத்தும் எமது இறைவனின் விசாலமான அறிவாலும் பலம் வாய்ந்த சத்தியுமாலே சாதிக்க முடியும்.

மாணவர்கள் ஒரு பக்கத்தில் யூசுப் ஆசிரியரை செவிமடுத்துக் கொண்டு மறுபக்கத்தில் தேனீர் அருந்திக் கொண்டிருந்தார்கள்.

## ஆச்சரியமான பேச்சாளர்

இடைவேளை அவசரமாக முடிவடைந்து விட்டது. அனைத்து மாணவர்களும் மண்டபத்துக்கு சென்று தத்தமது இடங்களில் அமைதியாக அமர்ந்துக் கொண்டார்கள். இடைவேளைக்குப் பிறகு மிக உற்சாகமாக அடுத்த பேச்சாளரின் பேச்சு எப்படி அமையப் போகிறது என்று ஆர்வத்தோடு எதிர்பார்த்து இருந்தார்கள். நிகழ்ச்சி தொகுப்பாளர், இஸ்லாம் மற்றும் விஞ்ஞான பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கற்கைகள் துறையிலே கலாநிதி பட்டத்தை நிறைவு செய்திருக்கும் கலாநிதி யூசுப் ஆசிரியர்கள் அவர்களை மேடைக்கு அழைத்தபோது அனைத்து மாணவர்களும் ஆச்சரியமடைந்தார்கள். இறுதிப்

பேச்சாளர் உண்மையிலேயே அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தினார். மாணவர்களின் முகம்களில் சந்தோசம் தென்பட்டது. ஏனெனில் மாணவர்கள் யூசுப் ஆசிரியர் கலாநிதி பட்டத்தை பெற்றிருக்கின்றார் என்ற செய்தியை அறிந்திருக்கவில்லை. யூசுப் ஆசிரியர் மேடைக்கு ஏறிய போது அனைத்து மாணவர்களும் உற்சாகமாக கரகோஷ மிட்டு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். ஒவ்வொருவரும் தத்தமது முகங்களைப் பார்த்தவர்களாக உற்சாகமாக பேச்சுக்கு செவிசாய்தார்கள்.

யூசுப் ஆசிரியர்: அன்புக்குரிய மாணவர்களே மதிப்புக்குரிய ஆசிரியர்களே! நான் உங்களோடு ஈமானின் ஆறு தூ ண்களில் நான்கு தூண்கள் குறித்து கலந்துரையாடலாம் என நினைக்கின்றேன். நண்பர்களே! ஈமானின் ஆறு தூ ண்கள் காணப்படுகின்றன. அவற்றை நபி முஹம்மது ஸ ல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்: ‘‘அல்லாஹ்வை, மலக்குகளை, வேதங்களை, நபிமார்களை, மரணத்தின் பிறகு மீண்டும் உயிர்பிக்கப்படுவது, கழா கத்ர், நன்மையும் தீமையும் அல்லாஹ்விடமிருந்து ஏற்படுகின்றது என்று ஈமான் கொள்ளல்’’ எனக் கூறியுள்ளார்கள். இப்போது இந்த ஆறு தூ ண்களையும் ஒவ்வொன்றாக பார்ப்போம்.

## ஒவ்வொரு கவிதையும் கவிஞரின் இருப்பை சுட்டிக் காட்டுகின்றது

அருமை நண்பர்களே! அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்வது என்பது அனைத்து அம்சங்களையும் இல்லாமையிலிருந்து படைத்த அல்லாஹ்வின் இருப்பையும், அவனது ஏகத்துவத்தையும் ஏற்றுக் கொள்வது மற்றும் அவனுக்கு இணையோ துணையோ இல்லை என்றும் உறுதியாக நம்புவதுமாகும். பிரபஞ்சத்தில் காணப்படும் அனைத்தும் அல்லாஹ்வின் இருப்பை சுட்டிக்காட்டுகின்றன. ஒரு கலை எப்படி கலைஞனை சுட்டிக் காட்டுகின்றதோ அதேபோன்றுதான் பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்து படைப்புகளும் படைப்பாளனான அல்லாஹ்வின் இருப்பை சுட்டிக் காட்டுகிறது. எப்படி கவிஞர் இன்றி ஒரு கவிதை, பொறியியலாளர் இன்றி ஒரு கட்டிடம் உருவாகுவது சிந்திக்க முடியாதோ அதேபோன்றுதான் படைப்பாளன் இன்றி ஒரு படைப்பையோ பிரபஞ்சத்தையோ சிந்திக்க முடியாது.



பிரபஞ்சத்தில் எந்தவொரு குளறுபடியும் காணப்படாமல் சீரானதொரு ஒழுங்கு காணப்படுவது அல்லாஹ்வின் ஏகத்துவத்திற்கான ஆதாரமாகும். பிரபஞ்சத்தில் அணு முதல் அண்டம் வரை அனைத்து இடங்களிலும் காணப்படுகின்ற அற்புதமான ஒழுங்கு மற்றும் பரிபூரணமான திட்டமிடல் இவை அனைத்தும் அல்லாஹ்வின் ஏகத்துவத்தையும் அவனுக்கு இணையோ துணையோ இல்லை என்பதனை தெளிவாக சுட்டிக்காட்டுகிறது. ஒரு இடத்தில் ஒழுங்கு இருக்குமானால் அங்கு ஒற்றுமை இருக்கிறது என்று அர்த்தமாகும். ஏனெனில் ஒரு நாட்டில் இரண்டு தலைவர்கள் இருந்தால் அல்லது ஒரு நகரதத்தில் இரண்டு கவர்னர்கள் இருந்தால் அல்லது ஒரு பாடசாலையில் இரண்டு அதிபர்கள் இருந்தால் அந்த நாட்டில் அல்லது நகரத்தில் அல்லது அந்த பாடசாலையில் எப்போதும் குளறுபடிகள் இருக்கவே செய்யும். உதாரணமாக உங்கள் பாடசாலையில் இரண்டு அதிபர்கள் இருந்தால் பாடசாலையின் செயற்பாடுகளில் குளறுபடியும் சீர்குலைவும் ஏற்பட மாட்டாதா!? ஒருவர் எடுத்த முடிவை அடுத்தவர் ஏற்றுக் கொள்ளாத போது பிரச்சினைகள் தோன்ற வாய்ப்பில்லையா?

## மலக்குகள் கண்களுக்கு தென்படாமல் இருப்பது அப்படி ஒரு படைப்பு இல்லை என்பதனை சுட்டிக்காட்ட மாட்டாது

அருமை நண்பர்களே! உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகின்றேன். உங்களுக்கு மத்தியில் அவுஸ்திரேலியாவுக்கு சென்றவர்கள் இருக்கின்றீர்களா? அப்படி இருப்பதாக இருந்தால் தமது கைகளை உயர்த்தவும். மண்டபத்தில் எந்த ஒருவரும் தனது கையை உயர்த்தவில்லை. யூசுப் ஆசிரியர்:

அப்படியென்றால் உலகில் அவுஸ்திரேலியா என்று ஒரு கண்டம் உள்ளதா?

அனைவரும் ஒரே குரலில் ‘‘ஆம் இருக்கிறது’’ என்றனர்.

யூசுப் ஆசிரியர்:அருமை இளைஞர்களே! மலக்குகள் மனிதர்களை விட வித்தியாசமான ஒரு படைப்பாகும். மலக்குகள் வாழும் உலகம் நாம் வாழும் உலகத்தை விட வித்தியாசமானதாகும். அவுஸ்திரேலியா கண்டத்துக்கு ஒருவர் சென்று அந்த இடத்தை அல்லது அங்கு வாழ்கின்ற மனிதர்களை பார்த்துவிட்டு வந்த பின்னர் எமக்கு தகவல் தந்தால் நாம் அந்த இடத்தை காணாத போதும் அங்கு மனிதர்கள் வாழ்கிறார்கள் என்பதில் எந்த வித சந்தேகமும் கொள்வதில்லையோ அங்கு சென்று வந்தவரின் தகவல்கள் எப்படி எமக்கு ஆதாரமாக இருக்கிறதோ அதே போன்றுதான் மலக்குகளின் இருப்பு குறித்தும் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அனைத்து வேதங்கள், நபிமார்கள் மற்றும் அவர்களைக் கண்டு அவர்களோடு சந்திப்பை ஏற்படுத்திய நபிமார்களின் வார்த்தைகள் எமக்கு மலக்குகளின் இருப்பை உறுதி செய்ய போதுமான ஆதாரங்கள் ஆகும்.

அருமை நண்பர்களே! எமது கண்களுக்கு மலக்குகள் தென்படுவதில்லை. ஏனெனில் அவர்கள் ஒளியினால் படைக்கப்பட்ட உணர்வுள்ள ஒரு படைப்பாகும். இறைவனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளை சரிவர நிறைவேற்றுவார்கள். அவர்கள் கண்களுக்கு தென்படாமல் இருப்பது, மலக்குகள் என்று ஒரு படைப்பு இல்லை என்ற கருத்தைக் காட்டாது. ஏனெனில் எமது கண்களுக்குப் புலப்படாத எத்தனையோ அம்சங்களை தயக்கமின்றி ஏற்றுக் கொள்கின்றோம். உதாரணமாக கிருமிகள் இருக்கின்றன. அந்தக் கிருமிகளை எமது வெற்றுக் கண்களால் காண முடியாது. எனவே பிரபஞ்சத்தில் கிருமிகள் என்ற ஒரு படைப்பை இல்லை என்று முடிவுக்கு வர முடியாது. அண்ட வெளியில் நட்சத்திரங்கள் மற்றும் கோள்கள் இருக்கின்றன. அவற்றையும் எங்களால் காண முடியாது. ஆனாலும் அவற்றை எம்மால் காண முடியாத போதும் இந்த துறையின் நிபுணர்கள் சொல்லும் தகவல்களை அடிப்படையாக வைத்து அவற்றின் இருப்பை ஏற்றுக்கொள்கின்றோம். இதே போன்று தான் மலக்குகள் பற்றி துறையில் நிபுணர்களாக கருதப்படும், அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நம்பிக்கைமிக்க

நபிமார்கள், மலக்குகளின் இருப்பை உறுதி செய்கிறார்கள். அவர்களின் இருப்பை யதார்த்தமானது; நாம் அவர்களோடு கதைக்கின்றோம் என்று கூறுகிறார்கள். எனவே அவர்களின் வார்த்தைகள் எமது ஈமானின் ஆதாரங்களாகும்.





மலக்குகள் கண்களுக்கு தென்படுவதில்லை என்பது அவர்களின் இருப்பு குறித்து சந்தேகப்படுவதற்கு காரணமாக இருக்க முடியாது. ஏனெனில் நாம் கண்களால் காணாத எத்தனையோ அம்சங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றின் இருப்பு குறித்து யாராலும் சந்தேகம் கொள்ளப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, மொபைல் போன்களில் காணப்படும் மின்காந்த அலைகளை நாம் காணவில்லை, ஆனால் அவற்றின் இருப்பை நாம் உறுதியாக ஏற்றுக்கொள்கிறோம். அண்டவெளியில் ரேடியோ அலைகள், ஒலி அலைகள், தொலைக்காட்சி அலைகள் என பல உள்ளன. ஆனால் அவைகளை நம்மால் பார்க்க முடியாது. நாம் அவர்களைப் பார்க்க முடியாது என்பதால், அவை இல்லை என்று அர்த்தமல்ல.

அருமை இளைஞர்களே! எமக்கு மலக்குகளை காண முடியாமல் இருப்பது நாம் இந்த உலகில் சோதனைக்காக படைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதனாலேயாகும். அவர்கள் தற்போதைக்கு எமக்கு காட்டப்பட மாட்டார்கள். அத்தோடு மலக்குகளை பார்க்கும் சக்தியும் இவ்வுலகில் எமக்கு தரப்பட வில்லை.

அருமை நண்பர்களே! இப்போது அல்லாஹ்வால் இறக்கப்பட்ட வேதங்கள் குறித்தும் வேதங்கள் மீதான ஈமான் குறித்தும் சற்று விளக்கலாம் என்று நினைக்கின்றேன். அல்லாஹ், மனிதனுக்கு நேரான பாதையை காட்டுவதற்கும், இம்மையிலும் மறுமையிலும் மகிழ்ச்சி தரக்கூடிய சட்ட திட்டங்களை அவனுக்கு கற்பிப்பதற்கும் நபிமார்களை அனுப்பினான்.

நபிமார்கள், மனிதர்கள் தங்களது பகுத்தறிவால் தீர்த்துக் கொள்ள முடியாத அம்சங்களை இறைவனிடமிருந்து அதன் தெளிவை பெற்று மனிதர்களுக்கு எத்தி வைக்கின்றனர். இறைவன் நபிமார்களில் ஒரு சிலருக்கு வேதங்களையும் சுஹுஃபுகளையும் இறக்கினான். அதேபோல் வேதங்களோ அல்லது சுஹுஃபுகளோ வழங்கப்படாத நபிமார்களும் இருக்கின்றனர். அவர்கள், அவர்களுக்கு முன்னர் அனுப்பப்பட்ட நபிமார்களின் வேதங்களை மற்றும் சுஹுஃபுகளை அடிப்படையாக வைத்து தமது பணிகளை நிறைவேற்றுவார்கள்.



நான்கு வேதங்கள், நான்கு முக்கியமான நபிமார்களுக்கு இறக்கப்பட்டன. அவைகள்: மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தவ்ராத் வேதமும், தாவூத் அலைஹிஸ்ஸ லாம் அவர்களுக்கு சபூர் வேதமும், ஈஸா அலைஹிஸ்ஸ லாம் அவர்களுக்கு இன்ஜீல் வேதமும் முஹம்மத் நபி ஸ ல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு புனித அல்-குர்ஆனும் இறக்கி வைக்கப்பட்டது. ஆரம்ப மூன்று வேதங்களும் அல்லாஹ்வினால் இறக்கப்பட்டது போன்று தொடர்ந்தும் இருக்கவில்லை. காலப்போக்கில் மனிதர்கள் தங்களது உலகலாவிய சுயநல தேவைகளுக்காக அவற்றை திரிவுபடுத்தினார்கள். எனவே அந்த வேதங்கள் செல்லுபடியற்றவையாக மாறின. எமது தூய அல் குர்ஆன் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எப்படி இறக்கப்பட்டதோ அப்படியே இன்று வரை எந்த ஒரு எழுத்தும் மாற்றப்படாமல் இருந்து வருகின்றது. ஏனெனில் இறுதி நாள்வரை அல்-குர்ஆனை பாதுகாப்பதாக அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான்.


# மனிதகுலத்திற்கு தீர்க்கதரிசிகள் தேவை

அருமை நண்பர்களே! நபிமார்கள் அல்லாஹ்வினால் மனித சமூகத்துக்கு அவர்களில் இருந்தே தெரிவு செய்து அனுப்பி வைக்கப்படும் ஒரு உதாரண புருஷர் ஆவார். மனிதர்கள் அவர்களை முன்னுதாரணமாக கொண்டு வாழ வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. நபிமார்களின் வரலாறு மனித சமூகத்தின் ஆரம்பம் முதலே ஆரம்பிக்கின்றது. முதல் மனிதரான ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களே முதல் நபியும் ஆவார். மனிதர்களுக்கு தாம் அறியாதவற்றை போதிப்பதற்கு ஒரு ஆசிரியரின் தேவை இருப்பது போலவே வணக்க வழிபாடுகள், பண்பாடுகள் மற்றும் சட்ட திட்டங்களை கற்றுக் கொடுக்கும் நபிமார்களின் தேவையும் இருக்கிறது.

அருமை நண்பர்களே! பிரபஞ்சத்தில் காணப்படும் அனைத்து அம்சமும் ஒரு நோக்கத்தின் அடிப்படையில் படைக்கப்பட்டுள்ளன. ஏனெனில் அவை முடிவில்லாத ஞானத்தை உடைய அல்லாஹ்வால் படைக்கப்பட்ட படைப்புகள் ஆகும். நபிமார்கள் அல்லாஹ்வால் படைக்கப்பட்ட அந்த படைப்புகளை மனிதர்களுக்கு அறிமுகப்படுத்தி எத்தி வைக்கும் தூதர்களாவார்கள். இறைவன் மனிதர்களையும் ஏனைய படைப்புகளையும் எந்த நோக்கத்திற்காக படைத்தான் என்றும் அவர்களிடமிருந்து என்ன விடயங்களை எதிர்பார்க்கின்றான் என்றும் நபிமார்களின் ஊடாக எத்தி வைக்கப்பட்டுள்ளது. அந்த தூதர்கள், அல்லாஹ்வால் அவர்களுக்கு ஏவப்பட்ட வணக்க வழிபாடுகள், பயன்பாடுகள் மற்றும் சமூக வாழ்வோடு சம்பந்தமான சட்ட திட்டங்களை தமது வாழ்வில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஏனைய சகமனிதர்களுக்கு முன்னுதாரணமாக நடந்து கொண்டார்கள்.

நாம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றும் நோய்களிலிருந்து சுகம் பெற வேண்டும் என்பதற்காகவும் வைத்தியர்களின் தேவை எமக்கு இருக்கிறது. அதே போன்றுதான் ஆன்மீக ரீதியான பிரச்சினைகள் மற்றும் உள நோய்கள், தனிமனித மற்றும் சமூக ரீதியான நோய்களுக்கு பரிகாரம் செய்வதற்காக ஆன்மீக வைத்தியர்களான நபிமார்களின் பால் தேவை உடையவர்களாக இருக்கின்றோம்.

நபிமார்கள், மனிதர்கள் உலகத்தில் எதற்காக படைக்கப்பட்டார்கள் என்ற நோக்கத்தை தெளிவுபடுத்துவார்கள்.



அல்லாஹ்வால் தமக்கு எத்தி வைக்கப்பட்ட யதார்த்தங்களை மனிதர்களோடு பகிர்ந்து கொள்வர். அவர்கள் மனித வாழ்வின் யதார்த்தம், மனித படைப்பின் நோக்கம் போன்றவற்றை வெறுமனே நபிமார்கள் ஊடாகவே அறிந்து கொள்ள முடியும். மனிதர்களால் எதனை செய்ய முடியும்? அவர்கள் செய்ய நினைக்கின்ற அம்சங்களை எப்படி செய்ய முடியும்? குறிப்பாக இந்த விடயங்களை எந்த நோக்கத்திற்காக செய்ய வேண்டும்? என்ற அம்சங்களை மனிதர்களுக்கு நபிமார்கள் கற்றுக் கொடுப்பார்கள். மனிதனில் செய்யப்பட வேண்டிய அம்சங்களை அவன் சரிவர நிறைவேற்றினால் என்ன நன்மைகளை அடைந்து கொள்வான்? அதனை நிறைவேற்றாத பட்சத்தில்


எந்தவிதமான விளைவுகள் ஏற்படும்? என்ற அம்சங்களை கண்ணியமிக்க நபிமார்களுடைய வழியின் மூலமே எமக்கு கற்றுக் கொள்ள முடியும்.

நபிமார்கள், அல்லாஹ்வால் மனிதர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தூதர்களாவார்கள். அல்லாஹ் வஹி மூலம் நபிமார்களோடு பேசுகின்றான். அல்லாஹ், நபிமார்களின் நபித்துவத்தை உண்மைப்படுத்துவதற்காக அவர்களுக்கு ஒரு சில அற்புதங்களை வழங்குகின்றான். அற்புதங்கள் ஏனைய மனிதர்களால் ஒரு போதும் செய்ய முடியாத நபிமார்களுக்கு வழங்கப்படும் அசாதாரண அம்சங்களாம். இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நெருப்பு எரிக்காமை, மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தடி பாம்பாக மாறியது மற்றும் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஒரு செய்கையினால் சந்திரன் இரண்டாக பிளந்தது, அவர்களின் வீரர்களில் இருந்து நீர் ஊற்றெடுத்தது இந்த அற்புதங்களின் ஒரு சில உதாரணங்கள் ஆகும். இந்த அத்தனை அற்புதங்களையும் படைப்பவன் அல்லாஹ் என்பதனை ஒரு போதும் மறந்து விடக்கூடாது.

## மறுமை வாழ்வும் நிச்சயமானது

அருமை இளைஞர்களே! மறுமை நாளை ஈமான் கொள்வது என்பது உலக அழிவிற்குப் பிறகு எமக்காக காத்திருக்கும் நிரந்தர வாழ்வு குறித்து ஈமான் கொள்வது என்பது பொருள் ஆகும்.

நாம் வாழும் உலகம் ஒரு சோதனைக் களமாகும். மனிதன் உலகத்துக்கு குறித்த ஒரு பணியை நிறைவேற்றுவதற்காக அனுப்பப்பட்டுள்ளான். உலக வாழ்வு நீண்ட பயணத்தின் ஒரு தரிப்பிடம் மாத்திரமே. மனிதன் ஒரு பயணத்தில் ஈடுபட்டிருக்கிறான். ஆன்மாக்களின் உலகில் இருந்து தாயின் கருவறை, பிள்ளைப் பருவத்திலிருந்து இளமைப் பருவம், இளமைப் பருவத்திலிருந்து வயோதிப் பருவத்தை நோக்கி பயணிக்கின்றான். பின்னர் வயோதிப் பருவத்திலிருந்து மண்ணறைக்கும் மண்ணறை வாழ்க்கையில் இருந்து மஹ்ஷர் மைதானத்துக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றான். அங்கிருந்து நிரந்தர வாழ்வான சுவன வாழ்வுக்கான ஒரு பாதை இருக்கிறது. இந்த பயணத்தில் உலக வாழ்வு முக்கியமான ஒரு இடத்தை வகிக்கின்றது. அழிவே முடிவே இல்லாத மற்றுமை




வாழ்வை எப்படி அமைத்துக் கொள்ளப் போகின்றோம் என்பதனை உலகத்தில் நமது செயற்பாடுகள் தீர்மானிக்கும். ஏனெனில் உலகம் மறுமையின் விளைநிலமாகும். மனிதன் இங்கு எதனை விதைக்கின்றானோ மறுமையில் அதனையே அறுவடை செய்வான்.


நாம் தற்காலிகமான உலக வாழ்வுக்காக செயல்படுவது போன்று நிரந்தரமான மறுமை வாழ்வுக்காகவும் செயற்பட வேண்டும். உலகத்தில் சாதாரண ஒரு அரசாங்கம் கூட தனது சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படும் குடிமகனுக்கு பாராட்டுக்களை வழங்குகின்றது. அந்த சட்ட திட்டங்களுக்கு மாறாக நடப்பவர்களுக்கு தண்டனைகளை வழங்குகின்றது. இது சட்டம் வேண்டி நிற்கின்ற ஒரு அம்சமாகும். அதே போன்றுதான் இறைவனும் தன்னை ஈமான் கொண்டு தனது கட்டளைகளுக்கு கட்டுப்படுகின்றவர்களுக்கு சுவனம் போன்ற உன்னதமான ஒரு வெகுமதியை வழங்குவான். மறுபக்கத்தில் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறு செய்து அவன் அனுப்பிய தூதர்களை பின்பற்றாமல் அவர்கள் கொண்டு வந்த தூதை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு தகுந்த தண்டனையையும் வழங்குவான்.

## முதல் படைப்பை விட இரண்டாவது படைப்பு எளிதானது

இறைவன், மனிதர்கள் மரணித்ததற்குப் பிறகு அவர்களை உடல்களோடு சேர்த்து மீண்டும் உயிர்ப்பிப்பான். இது அல்லாஹ்வுக்கு மிகவும் இலகுவான ஒரு செயலாகும். அல்லாஹ், அனைத்து படைப்புகளையும் முதலில் இல்லாமையிலிருந்து மிக இலகுவாக படைத்தான். இரண்டாவது முறை படைப்பது, முதலாவது முறை படைப்பதனை விட மிக இலகுவானதாகும். முதல் படைப்பை பார்த்து அவனை ஏற்றுக் கொண்டதற்கு பிறகு இரண்டாவது முறை படைப்பது கஷ்டமான ஒரு செயல் என்று கூறுவது அறிவுடைமையான ஒரு கருத்தாக இருக்க முடியாது. இந்த அம்சத்தை பின்வரும் உதாரணத்தின் மூலம் அழகாக விளங்கிக் கொள்ளலாம்:

ஒரு பாடசாலை அதிபர் பாடசாலையின் ஆரம்ப நாட்களில் ஆயிரக்கணக்கான மாணவர்களை வகுப்புவாரியாக பிரித்து அவர்களுக்கு தேவையான ஆசிரியர்களையும், எந்த எந்த வகுப்புக்களில் அவர்கள் படிக்க வேண்டும் என்பதனை ஒழுங்குபடுத்துகின்றார் என்பதனை நாங்கள் பார்க்கின்றோம். பாடவேளைகளை ஒழுங்கு படுத்தி மாணவர்களுக்கும் அறிவித்ததற்குப் பிறகு பாடங்களும் ஆரம்பித்து விட்டன. பின்னர் இடைவேளைக்கான மணி ஒலிக்கப்பட்டது. மாணவர்கள் இடைவேளையை ஓடியாடி குதூகலமாக கழிப்பதற்காக பாடசாலையின் அனைத்து திசைகளிலும் ஓடித் திரிந்தனர். இப்போது ஒருவர் அதிபரால் முதலில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஒன்று சேர்க்கப்பட்டதனை கண்ட போதும் பாடசாலை அதிபர் அனைத்து திசைகளிலும் ஓடித் தெரியும் மாணவர்களை ஒரு மணி ஓசையிலே வகுப்பறையில் ஒன்று சேர்க்க முடியாது. அதனை நான் கண்களால் காணாவிட்டால் ஒரு போதும் நம்ப மாட்டேன் என்று சொல்ல முடியுமா!?நிச்சயமாக அப்படி சொல்ல முடியாது. அப்படி சொல்வதாக இருந்தால் அது வேடிக்கையான ஒரு விடயமாக கருதப்பட மாட்டாதா!?.

ஆம் அதிபர், பாடசாலையில் காணப்படும் ஒழுங்கை இல்லாமையிலிருந்து ஏற்படுத்தி அதனை நிர்வகித்து வருகின்றார். இதனை மிக இலகுவாக செய்ய முடியுமான ஒரு அதிபரால் ஏற்கனவே இருக்கும் ஒரு ஒழுங்கை,



ஒவ்வொருவரினதும் இடங்கள் தீர்மானிக்கப்பட்டு ஒருவருக்கொருவர் அறிமுகமாய் இருக்கும் மாணவர்களை ஒரு மணியோசையில் மீண்டும் ஒன்று சேர்பது மிகவும் இலகுவானது.

அதே போன்றுதான் மறுமை நாள் ஏற்பட்டதற்குப் பிறகு மனிதனை மீண்டும் ஒரு முறை படைப்பது முதல் படைப்பை விட மிகவும் இலகுவானது. மேலே உதாரணத்தில் காணப்பட்டது போன்றே அல்லாஹ், மனிதனை இல்லாமையிலிருந்து படைத்தான். அவனது உடம்பில் உயிரணுக்கள் மற்றும் உறுப்புகளை ஏற்படுத்தினான். உலகில் வாழ்ந்த காலத்தில் ஒருவருக்கொருவர் அறிமுகமாகி, ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து செயல்பட்டு இருக்கிறார்கள். மரணித்ததற்குப் பிறகு இடைவேளைக்காக பாடசாலை வளாகத்தில் பரந்து விடும் மாணவர்கள் போல் உயிரணுக்களும் பரந்து விடும். இறைவன் மறுமை நாளில் வித்தியாசமான இடங்களில் பரந்து காணப்படும் பாடசாலை மாணவர்கள் ஒன்று

சேர்க்கப்பட்டதனை போன்று உயிரணுக்களை இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாம் அவருடைய சூர் ஓதப்படும் போது ஏற்படும் ஓசையில் ஒன்று சேர்ப்பான். இது அவனுக்கு எந்த ஒரு கஷ்டமும் இல்லை. உயிரணுக்கள் உலகத்தில் எந்த உடல்களில் தமது பனிகளை செய்தனவோ அவை குறிப்பிட்ட அந்த உடம்பில் மீண்டும் ஒருமுறை ஒன்று சேர்க்கப்படும். பின்னர் மனிதனால் உலகத்தில் செய்யப்பட்ட அனைத்து செயல்களுக்கும் அல்லாஹ்வினால் விசாரணை நடாத்தப்படும்.

ஆம் அறிவு ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் சிந்திந்து பார்க்கும் போது ஒரு விடயத்தை முதலில் செய்வது இரண்டாம் முறை செய்வதனை விட மிகவும் கடினமானது. மனித வரலாற்றில் விமானம், தொலைக்காட்சி மற்றும் கணினி போன்ற கருவிகளை முதலில் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமானதாகும். அதற்குப் பிறகு இந்த கருவிகளின் உறுதிப் பாகங்களை மீண்டும் ஒரு முறை ஒன்று சேர்த்து அந்தக் கருவியை உருவாக்குவது மிகவும் இலகுவானதாகும். மனிதனினை முதலில் படைத்தவன் அவனை இரண்டாவது முறை படைப்பதற்கு இயலாதவர் அல்ல.

## மனிதர்களுக்கு தெரிவுச்சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது

அருமை இளைஞர்களே! அல்லாஹ்வின் அறிவு முடிவற்றது. அல்லாஹ் அனைத்து விடயங்களையும் பரிபூரணமாக அறிவான். காலநேரம் மற்றும் இட வித்தியாசம் அவனுக்கு இருக்க மாட்டாது. கழா கத்ர் என்பது கடந்த காலங்களில் நடைபெற்ற, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற, நாளை நடைபெற இருக்கின்ற அனைத்து விடயங்களையும் அல்லாஹ் அறிந்தவன் என்று பொருள்படும்.

ஒரு மனிதனின் வாழ்வில் நடைபெறும் அம்சங்களை தீர்மானிப்பதில் இரண்டு அம்சங்கள் தாக்கம் செலுத்துகின்றன. முதலாவது: அல்லாஹ்வின் நாட்டம், அல்லாஹ்வின் இந்த நாட்டத்தின் மூலம் தான் படைக்க விரும்பும் மனிதனின் சிறப்பியல்புகள், உயரம், நிறம், ஆனா அல்லது பெண்ணா, எந்த நாட்டில் பிறக்க வேண்டும், இந்த சமூகத்தில் வாழ

வேண்டும், எந்த இடத்தில் பிறக்க வேண்டும், அவனுடைய தாய், தந்தை, குழந்தைகள் யாராக இருக்க வேண்டும் போன்ற அம்சங்களை நீதியாக தீர்மானிக்கின்றான். ஒரு மனிதன் இது போன்ற அம்சங்கள் குறித்து விசாரணைக்கு உட்படுத்தப்பட மாட்டான். அருமை நண்பர்களே! இரண்டாவது தீர்மானம்: மனிதன் தனக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை அடிப்படையாக வைத்து எடுக்கும் தீர்மானம். அதாவது தெரிவுச் சுதந்திரமாகும். ஒரு அடியான் இந்த சுதந்திரத்தின் மூலம் தீமையை அல்லது நன்மையை தீர்மானிக்க முடியும். மனிதன் இந்த தீர்மானத்தை எடுப்பதில் பரிபூரண சுதந்திரம் உடையவன். இந்த விடயத்தில் விதி எந்த விதத்திலும் தலையிட மாட்டாது. மனிதன் தான் எடுக்கும் தீர்மானங்களில் விதியின் தலையீடு இருக்குமானால் அவனால் செய்யப்படும் நல்ல அம்சங்களுக்காக பாராட்டப்பட மாட்டான். அதேபோன்று அதற்காக அவனுக்கு வெகுமதிகளும் வழங்கப்பட மாட்டாது. அல்லது தீமையான விடயங்களை செய்தால் தண்டனை வழங்கப்படவும் மாட்டாது.

ஆம் அல்லாஹ், எம் அனைவருக்கும் தெரிவிச் சுதந்திரத்தை தந்துள்ளான். இதனை நாம் அனைவரும் உள்ளத்தால் அறிந்திருக்கின்றோம். மனிதன் தனது சொந்த விருப்பத்தின் பேரிலே அனைத்து செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றான். மனிதன் தனது தெரிவுச்சுதந்திரத்தை பயன்படுத்தி நிறைவேற்ற இருக்கும் அனைத்து அம்சங்களையும் அல்லாஹ் தனது முடிவற்ற அறிவால் அறிந்திருப்பதன் காரணமாகவே அது நடைபெறும் முன் விதியில் எழுதியுள்ளான். நாம் எமது தெரிவுக் சுதந்திரத்தை எப்படி பயன்படுத்துவோமோ அப்படித்தான் விதியிலும் எழுதப்பட்டுள்ளது. அதாவது மனிதன் விதியில் எழுதப்பட்டுருக்கும் அம்சங்களை நிர்பந்தமாக வாழ மாட்டான். நாம் நமது தெரிவிச் சுதந்திரத்தை பயன்படுத்தி எடுக்கும் தீர்மானத்தின் அடிப்படையில் விரும்பினால் படிப்போம் அல்லது படிக்காமல் இருப்போம். விரும்பினால் விளையாடுவோம் அல்லது விளையாடாமல் இருப்போம். பாடத்தை சரியாக படிக்காமல் பொடுபோக்காக இருந்து விட்டு பரீட்சையில் மோசமான பெறுபவர்களை எடுக்கும் ஒரு மாணவன்: ”எனது விதியில் இப்படி எழுதப்பட்டிருப்பதனால்தான் நான் மோசமான பெறுபேறுகளை எடுத்தேன்” என்று சொல்லும் உரிமை அவனுக்கு கிடையாது.



மனிதர்கள் தனக்கு வழங்கப்பட்டிருக்கும் தெரிவுக் சுதந்திரத்தை அடிப்படையாக வைத்து எடுக்கும் தீர்மானங்களுக்கு அவர்களே பொறுப்புதாரிகள். உதாரணமாக ஒரு மனிதன் சந்தையிலிருந்து பழங்களை வாங்கும் பொழுது தனது அறிவையும், தெரிவுச் சுதந்திரத்தையும் பயன்படுத்தி ஆய்வு செய்து வாங்குவான். இந்தப் பழம் அழுகிறதா? உணவுக்கு பொருத்தமானதா? இல்லையா? என்று தீர்மானித்ததன் பின் தாம் விரும்பிய பழங்களை வாங்குவார். இது எமது தெரிவுச் சுதந்திரத்துக்கு ஒரு சான்றாகும்.

அப்படி இல்லாமல், எந்தவித ஆய்வும் இன்றி அழகிய பழங்களை, உணவுக்கு பொருத்தமற்ற பழங்களை வாங்கி விட்டு: ‘‘என்ன செய்ய எனது விதி இப்படித்தான்” என்று சொல்லி அடுத்தவர்களை நம்பவைக்க முடியுமா?

யூசுப் ஆசிரியர்: ‘‘எனது பேச்சை ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருந்ததற்கு உங்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவிக்கின்றேன்.” என்று கூறியவராக தனது பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். மாணவர்களது கரகோஷங்களுக்கு மத்தியில் தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சென்று அமர்ந்துக் கொண்டார்.

யூசுப் ஆசிரியருடைய மாணவர்கள் தனது ஆசிரியருக்கு பலத்த கரகோஷத்தை வழங்கினார்கள். நிகழ்ச்சி உண்மையில் மிக பிரயோசனமாக காணப்பட்டது. நிகழ்ச்சித் தொகுப்பாளர் இப்படி பயனுள்ள ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததற்காக பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் பேச்சாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## அனைத்து படைப்புகளுக்கும் ஒரு நோக்கம் இருக்கும் பொழுது மனிதன் எப்படி நோக்கமின்றி இருக்க முடியும்!

மாநாட்டின் இறுதி உரையை நிகழ்த்துவதற்காக இஸ்லாம் மற்றும் விஞ்ஞான பல்கலைக்கழக உதவி பணிப்பாளரை மேடைக்கு அழைத்தார். அனைத்து மாணவர்களும் பணிப்பாளரை கைதட்டி வரவேற்றனர். உதவி பணிப்பாளர் உற்சாகமாக தனது உரையை ஆரம்பித்தார்.

அருமை மாணவர்களே! முக்கியமான பல ஆசிரியர்களிடமிருந்து பெறுமதியான உரைகளை செவிமடுத்தீர்கள். நீங்கள் அனைவரும் மிக கவனமாக அந்த உரைகளை செவிமடுத்தீர்கள். அதற்காக உங்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.இங்கு உண்மையில் பாராட்டு பெற வேண்டியவர்கள் இளைஞர்களாகிய நீங்கள்தான். நீங்கள் எமது சமூகத்தின் எதிர்காலமாவீரர்கள். நான் இங்கிருக்கும் அனைவரையும் இளைஞர்களாகிய உங்களை கை தட்டி பாராட்டுமாறு வேண்டிக்கொள்கின்றேன். மண்டபம் முழுவதும் நீண்ட நேரம் கரகோசங்களால் நிரம்பி இருந்தது.

அருமை இளைஞர்களே! நீங்கள் மனித சமூகத்தின் நம்பிக்கை. எமது அழகிய மார்க்கமான இஸ்லாத்தை சரியாக விளங்கி, அதன்படி வாழுகின்ற போது உலகம் மிக அழகாக ஒரு இடமாக மாறும். தன்னைப் படைத்த இறைவனை அறிந்தவன், தான் உலகத்திற்கு அனுப்பப் பட்ட நோக்கத்தை அறிந்தவன். சுருக்கமாக ஒரு ஈமானுள்ள மனிதன் மனித சமூகத்திற்கு பெரும் அருளாகும். எமது முன்னோடியான நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் உருவாக்கப்பட்ட உன்னத சஹாபா

சமூகத்தைப் பற்றி சற்று சிந்தியுங்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அறியாமை, அநியாயம் மற்றும் பாவங்களோடு வாழ்ந்தார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு மு.்.மின்களாக மாறியதன் பின் நாகரிகத்தின் உச்சகட்டத்தில் இருக்கிறோம் என மார் தட்டிக் கொண்ட சமூகங்களுக்கு மனிதன் நேயத்தையும், நாகரீகத்தையும் போதிக்கும் ஆசான்களாக மாறினார்கள். அறியாமைக் காலத்தில் பெண் குழந்தைகளை உயிரோடு புதைக்கும் அளவு மிருகத்தனம் கொண்டவர்களாக இருந்த அவர்கள், இஸ்லாத்தை ஏற்று ஈமான் கொண்டதற்கு பிறகு எறும்புக்குக் கூட அநியாயம் நினைப்பதில் பின்வாங்கும் அளவுக்கு மிக உன்னதமானவர்களாக மாறினார்கள். அவர்கள் இந்த உன்னத நிலமைக்கு மாறுவதற்கு காரணமாக இருந்தது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டு வந்த ஈமானின் ஒளியாகும்.

அருமை இளைஞர்களே! அனைத்து உயிரினங்களும் ஒரு நோக்கத்துக்காக படைக்கப்பட்டிருக்கின்றன. அணு முதல் அண்டம் வரை அனைத்தும் ஒரு நோக்கத்தின் அடிப்படையில் படைக்கப்பட்டிருக்கும் போது மனிதனின் படைப்பு நோக்கமின்றி இருக்க முடியாது. கோழி, ஆடு, மாடு மற்றும் பட்டுப்பூச்சி போன்ற அத்தனை மிருகங்களும் ஒரு நோக்கத்தின் அடிப்படையில் படைக்கப்பட்டுள்ளன. மனிதர்கள் அந்த மிருகங்களிடமிருந்து பயன் பெறும் போது மனிதன் நோக்கமின்றி இருப்பது அர்த்தமற்ற ஒரு விடயம் அல்லவா?

பச்சை பசேல் என்று காட்சியளிக்கும் தாவரத்திலிருந்து கரங்கள் அற்ற சிறிய பட்டுப் பூச்சியால் நெய்து தரப்படும் பட்டுக்களில் இருந்து பயன் பெறும் மனிதன், இந்த அருளை வழங்கும் அல்லாஹ்வை அறிந்து நேசிக்க வேண்டும். உயிருள்ள மற்றும் உயிரற்ற அனைத்து படைப்புக்களும் அவற்றிற்கு வழங்கப்பட்டிருக்கும் பணிகளையும் கடமைகளையும் மிகவும் சரியாக நிறைவேற்றுகின்றன. மனிதனும் அல்லாஹ்வால் தனக்கு வழங்கப் பட்டிருக்கும் பணியையும் பொறுப்புக்களையும் சரிவர நிறைவேற்ற வேண்டிய கடமை அவனுக்கு இருக்கிறது.

நாம் அனைவரும் உயர்ந்த திறமை மற்றும் ஆற்றல் உடையவர்களாக உலகத்துக்கு அனுப்பப்படுகின்றோம். ஏனைய படைப்புகளிடத்தில் காணப்படாத பகுத்தறிவு, உணர்வு,



சிந்திக்கும் ஆற்றல், ஒரு விடயத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம், ஆச்சரியமடைதல், அன்பு செலுத்தல் போன்ற உயர்ந்த பண்புகள் மற்றும் சிறப்பம்சங்களை தன்னகத்தே பெற்றவர்களாக உலகத்தில் பிறக்கின்றோம். ஏனைய படைப்புகளில் காணப்படாத உன்னத பண்புகள் மனிதனிடத்தில் காணப்படுவது அவன் ஏனைய படைப்புகளை விட உயர்ந்தவன் என்பதனை சுட்டிக்காட்டுகின்றது. எனவே இந்த நிலை மனிதன் உலகத்திற்கு மிக முக்கியமான ஒரு இலட்சியத்தை சுமந்தவனாக அனுப்பப்பட்டுள்ளான் என்பதனை தெளிவாக காட்டுகின்றது.

ஆம் அன்புக்குரிய மாணவர்களே! அல்லாஹ், அல்குர்ஆனின் முதல் வசனத்திலே “உன்னை படைத்த உனது இறைவனின் பெயரைக் கொண்டு வாசிப்பீராக” என்று கட்டளை இடுவதன் ஊடாக வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்கிறோம். நாம் எதனை எந்த நோக்கத்தில் வாசித்தாலும் இறைவனை மறக்காமல் அவனை சிந்தித்த வர்க்கமாக அவனது பெயரைக் கொண்டு வாசிக்க வேண்டும்.

இந்த பார்வையில் பார்க்கும் பொழுது, பிரபஞ்சம் வாசிப்பதற்கு மிக பொருத்தமான ஒரு புத்தகம் போன்றதாகும். ஒவ்வொரு கலைகளும் எமக்கு அல்லாஹ்வின் படைப்புகளை மற்றும் அந்தப் படைப்பில் காணப்படும் அற்புதங்களை சுட்டிக் காட்டுகின்றன. எனவேதான் நாம் படைப்புக்களை ஆய்வு செய்யும் பொழுது படைப்பாளனை மறந்து விடக்கூடாது. கண்ணுக்கு தென்படும் படைப்புக்களை ஆய்வு செய்து கண்ணுக்கு புலப்படாத அல்லாஹ்வை அறிந்து அவனை ஈமான் கொள்ள வேண்டும். அனைத்துப் படைப்புகளிலும் அல்லாஹ்வின் இருப்பு, ஏகத்துவம், அருள், நீதி, கொடை, அவனது பண்புகள் மற்றும் பெயர்களை காண முயற்சிக்க வேண்டும்.

அருமை மாணவர்களே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பான சலாத்தை தெரிவித்துக் கொண்டு இந்த பேச்சை நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பின்வரும் ஹதீஸோடு நிறைவு செய்கின்றேன். “எமது இறைவனே! எம்மை ஈமானை நேசிக்கின்றவர்களாக ஆக்குவாயாக, எமது உள்ளத்தை ஈமானைக் கொண்டு அலங்கரிப்பாயாக, இறை நிராகரிப்பு, பாவங்கள் மற்றும் உனக்கு மாறு செய்வதனை எமக்கு அசிங்கமானதாக

காட்டுவாயாக, எம்மை நேரான பாதையில் இருக்கும் உனது திருப்தியைப் பெற்றவர்களின் கூட்டத்தில் சேர்ப்பாயாக!"

அனைத்து மாணவர்களும் இந்த அழகான மற்றும் அர்த்தமுள்ள துஆவிற்கு: "ஆமீன், ஆமீன், ஆயிரக்கணக்கான ஆமீன்!" என்று கூறினர். இந்த நிறைவுப் பேச்சால் அந்த நிகழ்ச்சி இன்னும் அழகாக மாறியது. சில இளைஞர்கள், "நாங்கள் வந்ததில் மகிழ்ச்சி!" சிலர் பேச்சுக்கள் மற்றும் பேச்சாளர்களை மதிப்பீடு செய்தனர், மேலும் சிலர், "நானும் இந்த பல்கலைக்கழகத்தில் படிக்க விரும்புகிறேன்." அவர்கள் மண்டபத்தை காலி செய்தனர். நிகழ்ச்சியின் இறுதியில் நிகழ்த்தப்பட்ட விளக்கக்காட்சிகள் மாணவர்களின் மனதிலும் இதயத்திலும் இனிய அடையாளங்களை ஏற்படுத்தியது.

## ஈமான் எமது வாழ்வின் மிகப் பெரும் துணையாகும்

திங்கட்கிழமை மீண்டும் யூசுப் ஆசிரியர் வகுப்புக்கு வருகைத் தந்தார். மாணவர்கள் மாநாட்டிற்கு சென்று வந்ததன் பிறகு அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்வது எவ்வளவு முக்கியம் என்பதனை நன்றாக அறிந்து கொண்டார்கள்.

யூசுப் ஆசிரியர்: அன்புக்குரிய நண்பர்களே! வார இறுதியில் நாம் சென்று வந்த மாநாட்டை நீங்கள் அனைவரும் மிக கவனமாக செவிமடுத்து குறிப்புகளை எடுத்தீர்கள். அதற்காக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். உண்மையில் மிகச் சிறந்த தாக்கங்களை ஏற்படுத்திய ஒரு மாநாடாக அது இருந்தது.

சாரா: ஆசிரியரே! உங்களுக்கு நாம் நன்றி தெரிவிக்க கடமைப் பட்டிருக்கின்றோம். நிகழ்ச்சியை மிகவும் சிறப்பானதாகவும் பிரயோசனமானதாகவும் இருந்தது. இந்த நிகழ்ச்சிக்கு சென்றிருக்கா விட்டால் மிகவும் கவலை அடைந்திருப்போம். ஏனைய மாணவர்களும்: "ஆம் ஆசிரியரே! நாமும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்" என்றனர்.

யூசுப் ஆசிரியர்: மாநாட்டில் உங்களுக்கு மறக்க முடியாத அம்சங்கள் எவை?

# அப்பிள் பழத்தினூடாகப் பார்த்தல்



ஸயீத்: ஆசிரியரே! எனது வாழ்வில் முதல் தடவையாக ஒரு பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்தேன். மிகப்பெரும் ஒரு மண்டபத்தில் பல்கலைக்கழக ஆசிரியர்களின் அற்புதமான ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். இது என்னைப் பொறுத்தவரையில் மறக்க முடியாத ஒரு அம்சமாக இருந்தது.


இப்ராஹீம்: ஆசிரியரே! மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரைகளில் தலைப்புகள் எனக்கு மிகவும் கவர்ச்சியாக இருந்தன. உண்மையில் மிக சிறப்பான ஒரு நிகழ்ச்சி.

யூசுப் ஆசிரியர்: எல்லோரும் தனது கருத்துக்களைச் சொல்கிறார்கள். அலி ஜான்! உமது கருத்துக்கள் என்ன?

அலி ஜான்: ஆசிரியரே மாநாட்டை ஒரு போதும் மறக்க முடியாது. அதே போன்று வாகனத்தில் நாம் சாப்பிட்ட இனிப்பு பண்டங்களையும் மறக்க முடியாது. நீங்கள் எம்மை இப்படியான மாநாட்டுக்கு தொடர்ந்து அழைத்துச் செல்லுங்கள் என்றபோது அனைவரும் சிரித்தார்கள்.

யூசுப் ஆசிரியர் மாணவர்களோடு சேர்ந்து புன்னகைத்தவராக பின்வருமாறு சொன்னார்: இளைஞர்களே! உண்மையில் நிகழ்ச்சி மிகவும் பிரயோசனமாக இருந்தது. எம் அனைவரிடத்திலும் வித்தியாசமான உணர்வுகளை அது ஏற்படுத்தியிருக்கிறது. ஈமானின் பெருமதியையும் அதன் முக்கியத்துவத்தையும் மீண்டும் ஒரு முறை விளங்கிக் கொண்டோம். ஆம் ஈமான், அனைத்து அம்சங்களினதும் சொந்தக்காரனான அல்லாஹ்வை

அவனுக்கு அறிமுகப்படுத்தும் அதே நேரம் பிரபஞ்சத்தில் எந்த ஒரு படைப்பும் நோக்கமின்றி இருக்க முடியாது என்று ஈமான் எங்களுக்கு கற்பிக்கின்றது. ஈமானையுடைய ஒருவர் உலகில் படைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொன்றிலும் இறைவனது அற்புதக் கலை அம்சங்கள் இருப்பதைக் காண்பார். அனைத்து படைப்புகளும் அல்லாஹ்வால் அவற்றுக்கு வழங்கப்பட்ட பணியை நிறைவேற்றும் பணியாளர் என்று அறிந்து கொள்வார். இப்படியாக ஒரு மு.்.மினுக்கு அல்லாஹ்வின் இருப்பு பாதுகாப்பை வழங்கும். ஒரு மு.்.மின் எந்த நிமிடத்திலும் தன்னை அவதானிக்கும், தனக்கு அன்பு காட்டும் படைப்பாளன் இருக்கின்றான் என்று நம்பிக்கை அவனுக்கு மன அமைதியை வழங்கும். உயிருள்ள மற்றும் உயிரற்ற ஏனைய படைப்புகளும் கூட அல்லாஹ்வின் பணியாளர்கள் என்ற அறிவு இருப்பதனால் அவன் அவற்றிற்கு ஒரு போதும் தீங்கிழைக்க மாட்டான். எனவே ஈமான் அவனை நன்மையான மற்றும் பிரயோசனம் உள்ள விடயங்களை செய்வதற்கு ஊக்குவிக்கும்.



ஹஸன்: ஆசிரியரே நாம் கலந்து கொண்ட நிகழ்ச்சியை எனது பாட்டிக்கு தெளிவு படுத்தினேன். அவர் மிகவும் சந்தோசம் அடைந்தார். பாட்டி எங்களுக்கு, ஈமான் ஒரு மனிதனுக்கு வழங்கும் பலத்தைப் பற்றி தெளிவு படுத்தினார். ஒரு மு.்.மின் எப்போதும் பலமானவராகவும், தைரியமானவராகவும் இருப்பார். நாம் மலாஸ்கித் மற்றும் சனக்களே போன்ற முக்கியமான யுத்தங்களை ஈமானின் பலத்தினால்தான் வெற்றி கொண்டோம் என்றார்.

யூசுப் ஆசிரியர்: உமது பாட்டி மிகச் சரியாக சொல்லியிருக்கிறார் ஹஸன்! பலமான ஈமானையுடைய ஒரு மனிதன் வாழ்க்கையில் எந்த விதமான பிரச்சினை வந்தாலும் அல்லாஹ்வின் சக்தியை தனக்குத் துணையாக எடுப்பார். ஈமான் வழங்கும் அந்த துணையின் பலத்தால் அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பார். இறைவனின் முடிவில்லாத பலத்தை தனது துணையாக எடுத்தவனை பிரச்சினைகள் என்னதான் செய்ய முடியும்!? பலமான ஈமானையுடைய ஒரு முஸ்லிம் தனது வாழ்க்கையில் பிரச்சனைகள் வரும் பொழுது உடைந்து போக மாட்டான். ஈமான் அவனுக்கு தீமைகளிளும் நன்மை இருக்கிறது என்று கற்றுக் கொடுத்ததனால் எந்த ஒரு அம்சத்தையும் தன்னை முடிவுக்கு கொண்டு வரும் என்று நினைக்க மாட்டான். நம்பிக்கையீனம், தோல்வி மனப்பாங்கு போன்றவை அவனை பீடிக்காது. உலகில் நடைபெறும் அத்தனை நிகழ்வுக்கு பின்னாலும் அல்லாஹ்வுடைய நாட்டம் இருக்கிறது என்று உறுதியாக நம்புவான். அல்லாஹ் ஒரு போதும் தன்னை உதவி இன்றி தனியே விடமாட்டான் என்ற நம்பிக்கையில் அவன் செயற்படுவான். ஒரு நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக அல்லது ஒரு பிரச்சினையே தீர்ப்பதற்காக தேவையான அத்தனை விடயங்களையும் செய்துவிட்டு அல்லாஹ்வின் மீது தவக்குல் வைப்பான்.

இளைஞர்களே ஈமானுக்கும் தைரியத்துக்கும் மத்தியில் நெருங்கிய தொடர்பு உண்டு. ஈமான் அதிகரிக்கும் பொழுது தைரியமும் அதிகரிக்கும். ஈமானிய பலத்துடன் எத்தனையோ சிறு கூட்டங்கள் மிகப்பெரும் குழுக்களை வெற்றி கொண்டுள்ளனர். ஈமான் ஒரு மனிதனிற்கு: “நீ தனித்தவன் அல்ல. அல்லாஹ்வும் உன்னுடன் இருக்கின்றான். தீர்வுகளை தேடுவதை விட்டும் பின் வாங்காதே!”. என்ற பார்வையை அவனுக்கு வழங்கும். ஈமானுள்ள ஒரு மனிதன் மரத்திலிருந்து விழும் ஒரு இலை கூட அல்லாஹ்வின் நாட்டம் இன்றி கீழே விழ மாட்டாது என்று அறிந்திருப்பதன் காரணமாக அறிவு, உள்ளம், உணர்வுகள் மற்றும் ஆன்மா நிம்மதி அடையும். தனது வாழ்நாளில் இன்பம் பெறுவான்.

ஸயீத்: ஆசிரியரே! ஈமான் ஒரு மனிதனுக்கு பிரார்த்தனை செய்யும் சந்தர்ப்பத்தையும் வழங்குகிறது அல்லவா?

யூசுப் ஆசிரியர் தலையசைத்து ஆம் என்றார்.

சரியாகச் சொன்னீர், பிரார்த்தனை செய்ய முடியுமாக இருப்பது மிகப்பெரிய ஒரு சந்தர்ப்பமாகும். இந்த சந்தர்ப்பத்தையும் எமக்கு பெற்று தருவது ஈமான் ஆகும். ஈமான் எமது மிக முக்கியமான அடைக்கலமாகும். ஈமான் தரும் பலத்தைக் கொண்டு அளவற்ற அருளுக்குள் அடைக்கலம் பெறுகின்றோம். அனைத்து அம்சங்களும் அல்லாஹ்வின் நாட்டப் படியே நடைபெறுகின்றது என்று நம்பிக்கை கொண்ட ஒரு முஸ்லிம் முதலில் அல்லாஹ்விடம் மாத்திரமே உதவி தேடுவான். தனது இறைவனிடம் பிரார்த்திப்பான். தனது ஈமானின் மூலம் தனக்கு உதவி செய்யக்கூடிய ஒருவன் இருக்கிறான் என்றும் உள்ளத்தில் தோன்றும் ரகசிய சிந்தனைகளை கூட அவன் அறிவான் மற்றும் அவன் அனைத்தின் மீதும் சக்தி உடையவனாக இருக்கின்றான் எனவே எனது பிரார்த்தனைகளுக்கு நிச்சயமாக பதிலளிப்பான் என நம்புவான்.

உண்மையான ஈமானையுடைய ஒரு மனிதனுக்கு அல்லாஹ்வுடைய முடிவில்லாத அருள் பொக்கிஷம் நிம்மதியும் நம்பிக்கையும் கொடுக்கும். அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்ளும் ஒருவர் அனைத்து நிலைமைகளிலும், எல்லா சந்தர்ப்பங்களிலும், ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பான். அல்லாஹ்வுக்கு இணைதுணை இல்லை என்பதனால் அதேபோல் எவ்வித சட்டரீதியான மற்றும் ஆன்மீக ரீதியில் தங்குதடையின்றி நேரடியாக அல்லாஹ்விடம் தனது தேவைகளை கேட்க முடியும். பேச்சாளர்களை மிக கவனமாக செவிமடுத்து சாரா: “ஆசிரியரே! மாநாட்டுக்குப் பின்னர் எனது ஈமான் அதிகரித்திருக்கிறது என உணர்கின்றேன். அதேபோன்று எனது சிந்தனையில் ஈமானை எப்படி பலப்படுத்திக் கொள்ள முடியும் என்ற கேள்வி தோன்றியது.

யூசுப் ஆசிரியர்: ஆம் இப்படி ஒரு கேள்வி நீங்கள் கேட்க வேண்டும் என்று எதிர்பார்த்து இருந்தேன். ஆனால் இடைவேளைக்கான மணி ஒலித்ததனால் யூசுப் ஆசிரியர் புன்னகைத்தவராக இந்த அழகிய கேள்விக்குரிய பதிலை இன்று கலந்துரையாட முடியாமல் போய்விட்டது. எமது அடுத்த பாடத்தில் இந்த கேள்விக்கான பதிலை கலந்துரையாடுவோம். நீங்களும் எமது ஈமானை எப்படி பலப்படுத்திக் கொள்ள முடியும்? என்று சிந்தித்து ஆய்வு செய்துவிட்டு வாருங்கள் என்று சொல்லிவிட்டு பாடத்தை முடித்தார்.

# ஈமானை எப்படி பலப்படுத்திக் கொள்ள முடியும்?

புதன் கிழமை யூசுப் ஆசிரியர் வகுப்பிற்கு வருகை தந்து வழமை போன்று மாணவர்களுக்கு சலாம் சொல்லிவிட்டு அவர்களின் சுக துக்கத்தை விசாரித்தார்கள். பின்னர் கடந்த வகுப்பில் நாம் தீர்மானித்து போன்று எமது ஈமானை எப்படி பலப்படுத்திக் கொள்ள முடியும்? என்ற கேள்விக்காண விடையை கலந்துரையாடுவோம் என்றார்.

நஸீபா: இந்த தலைப்பு குறித்து எனது தந்தையிடம் கேட்டேன் எனது தந்தை : விளையாட்டு வீரர்கள் தங்களது உடம்பை பலமாக வைத்துக் கொள்வதற்காக தொடர்ந்தும் உடற்பயிற்சியில் ஈடுபடுவார்கள் அல்லவா அதேபோன்றுதான் முஸ்லிம்களாகிய நாமும் எமது ஈமானை பலப்படுத்திக் கொள்வதற்கான தேவையை உணர்ந்து அதற்காக முயற்சிக்க வேண்டும். ஒரு மனிதன் ஈமான் பற்றி எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களை அதிகம் வாசிப்பதோடு அது குறித்து அதிகமதிகம் கலந்துரையாட வேண்டும். அப்போது ஈமான் பலம் பெரும். ஒரு மனிதன் தனது சூழலில் காணப்படும் அத்தனை அம்சங்களையும் அல்லாஹ்வின் படைப்பு என்று பார்க்கின்ற பொழுது அல்லாஹ்வின் படைப்புகளில் காணப்படும் அற்புதங்கள் தென்படும். இதனூடாக அல்லாஹ்வை அறிந்து கொள்ள ஆசைப்படுவான். தொடர்ந்தேச்சையான சிந்தனை அல்லாஹ்வின் மீதான அவனது ஈமானை அதிகரித்து பலப்படுத்தும்.

இப்ராஹீம்: ஆசிரியரே! நான் இந்த கேள்வியை உமர் மாமாவிடம் கேட்டேன். அவர் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு இபாதத்துகளை சரியாக நிறைவேற்றி சிறந்த ஒரு அடியானாக மாறுகின்ற பொழுது எமது ஈமான் பலம் அடையும் என்று சொன்னார்.

யூசுப் ஆசிரியர்: ஆம் உங்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். உமர் மாமா சொன்னது போன்று எமது ஈமானை பலப்படுத்தும் முக்கியமான ஒரு அம்சம் இபாதத்தாகும். இபாதத்துகளையும், அடிமைத்தனம் என்ற பணியையும் சரியாக நிறைவேற்றுகின்ற ஒருவர், முழு பிரபஞ்சமும் அல்லாஹ்வின் கட்டுப்பாட்டில் உள்ளன என்று

நம்புவார். தான் பொறுப்பற்ற ஒருவன் அல்ல என்பதனை உணர்ந்து கொள்வான். ஒவ்வொரு நாளும் தவறாமல் நிறைவேற்றும் தொழுகைகள் மற்றும் ஏனைய இபாதத்துக்கள் படைப்பாளனின் உயர்வையும் அவனது அருளையும் உள்ளத்தில் நிலைபெற செய்கின்றன.

இளைஞர்களே!வணக்க வழிபாடுகளில் ஈடுபடும் ஒருவர் முழுப் பிரபஞ்சமும் அல்லாஹ்வுக்கு இபாதத் செய்கின்றது என்று உணர்வான். ஏனெனில் இவ்வுலகில் படைக்கப்பட்டிருக்கும் அனைத்து படைப்புகளினதும் ஒரு நோக்கம் இருக்கிறது. உதாரணமாக, ஆடுகள் பால் தருவதற்கும் தேனீக்கள் தேன் தருவதற்கும் படைக்கப்பட்டிருக்கின்றது. ஏனைய அனைத்து படைப்புகளையும் விட உன்னதமான ஒரு படைப்பாக படைக்கப்பட்டிருக்கும் மனிதன் நிச்சயமாக ஒரு நோக்கத்துக்காக படைக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா!? அந்த நோக்கம்தான் அனைத்துப் படைப்புக்களினதும் படைப்பாளனான அல்லாஹ்வை ஈமான் கொண்டு அவனை வணங்கி வழிபடுவதாகும். ஆனால் வணக்கத்தில் ஈடுபடாத மனிதன் ஏனைய படைப்புகள் அல்லாஹ்வை வணங்கி வழிபடுகின்றன என்பதனை காணமாட்டான். காண்பதற்கான வாய்ப்பும் ஏற்பட மாட்டாது என்பது கவலைக்குரிய விடயமாகும். எமது வணக்கங்கள், தொழுகைகள் அல்லாஹ்வின் இருப்பு மற்றும் ஏகத்துவம் குறித்து மனிதனுக்கு மிகப்பெரும் ஒரு உணர்வை வழங்குகின்றது.


இளைஞர்களே! வணக்கம், ஈமான் உள்ளங்களில் நிலை பெறுவதற்கு காரணமாக அமையும். இப்ராஹீமே! உனது கையில் ஒரு மரக்கன்று இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதனை நிலத்திலே நாட்டியதன் பின்னர் அதற்கு நீர் ஊற்றவில்லை என்றால் அந்த மரக்கன்று வளர்ச்சி அடையுமா?

இப்ராஹீம்: இல்லை ஆசிரியரே! அது வளரவும் மாட்டாது, கனி தரவும் மாட்டாது. அது அப்படியே காய்ந்து போய்விடும்.

யூசுப் ஆசிரியர்: ஆம் அதேபோன்றுதான் நாம் இபாதத்துக்களில் ஈடுபடாத போது எமது ஈமான் பலவீனமடையும். எனவேதான் வணக்கத்தில் ஈடுபடுவது மிக முக்கியமாகும். எமது ஈமான் உள்ளத்தில் ஆழமாக வேரூன்றுவதற்கு மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றுதான்

வணக்கம், ஒரு நாளில் ஐந்து வேலை நிலை நாட்டும் எமது தொழுகைகள் மற்றும் துவாக்களாகும். அருமை இளைஞர்களே! மனிதன் வணக்க வழிபாடுகளின் மூலம் குறிப்பாக தொழுகையில் ஒரு நாளைக்கு ஐந்து தடவை தனது இறைவனோடு தொடர்பை ஏற்படுத்தி இறைவனோடு உள்ள தனது உறவைப் புதுப்பித்துக் கொள்கிறான். தனது தேவைகளையும் வெறுமனே அல்லாஹ்விடம் கேட்பான். தனது பலவீனத்தை உணர்ந்து இபாதத்தின் மூலம் சக்தி வாய்ந்த அல்லாஹ்வை சார்ந்துக் கொள்வான். அப்படியான ஒரு மனிதன் தனது வணக்க வழிபாடுகள் மூலம் பெற்ற உணர்வினால் தனது குறைபாடுகளையும் அறிந்து அல்லாஹ்வுக்கு தனது அடிமைத்துவத்தை முழுமையாக வெளிப்படுத்துவான். எமது வணக்கங்கள் இல்லாவிட்டால் இறைவனுடான தொடர்பு துண்டிக்கப்பட்டு நாம் சுயநலவாதிகளாகவும் அநியாயக் காரர்களாக மாறும் அபாயம் உண்டு.

யூசுப் ஆசிரியர், வகுப்பு மாணவர்களைப் பார்த்து ஈமானை பலப்படுத்தும் வழிகள் குறித்து வேற கருத்துக்கள் முன்வைக்க விரும்பு உள்ளவர்கள் இருக்கிறார்களா? என்று கேட்டார்.



ஸயீத்: முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்வு, ஏனைய நபிமார்கள் மற்றும் நபித்தோழர்களினதும் வாழ்வைப் பற்றிய அறிந்து கொள்வதும் மற்றும் அவர்கள் இந்த பாதையில் பட்ட கஷ்டங்களையும் துன்பங்களையும் அறிந்து கொள்வதும் எமது ஈமானை அதிகரிக்கும் என்று ஒரு புத்தகத்தில் வாசித்தேன் என்றார்.

யூசுப் ஆசிரியர்: ஆம் மிகவும் சரியான ஒரு செய்தி. மனிதர்கள் இந்த உலகத்துக்கு ஒரு நோக்கத்துக்காக அனுப்பப்பட்டுள்ளனர். மனிதர்களின் முதல் வழிகாட்டி நபிமார்களாவார்கள். எமக்கு முன்னர் வாழ்ந்த நபிமார்கள் அல்லாஹ்வினால் தமக்கு வழங்கப்பட்ட பணியை சரிவர நிறைவேற்றிய அத்தனை நபிமார்கள் மற்றும் இறை நேசர்களுடைய வாழ்வை படிக்கும் பொழுது

எமது ஆன்மீகம் பலமடையும். குறிப்பாக முஹம்மது அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய முன்னுதாரண வாழ்வு எமக்கு மிக அற்புதமான ஒரு வழிகாட்டியாகும்.

அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எமது இறைவனால் எம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற விடயங்களை எமக்கு கற்பித்தார்கள். அத்தோடு அந்த விடயங்களை நாம் எப்படி நிறைவேற்ற வேண்டும் என்றும் வாழ்ந்து காட்டினார்கள். குறிப்பாக தடுக்கப்பட்ட அம்சங்களை ஏன் செய்யக்கூடாது? என்று தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.




நாம் அல்லாஹ்வினால் எம்மிடம் எதிர்பார்க்கப்படுகின்ற விடயங்களை நிறைவேற்றுகின்ற பொழுது என்னென்ன வெகுமானங்கள் கிடைக்கும் அவற்றை நிறைவாற்றாதபோது எப்படியான தண்டனைகள் காத்திருக்கின்றன என்றும் எமக்கு போதித்தார். ஆரம்பமாக தனது முதல் நேரடி மாணவ சமூகமாகிய சஹாபாக்கள் ஈமான் குறித்து பரிபூரணமாக நபியவர்களிடமிருந்து கற்றுக் கொண்டார்கள். ஈமான்

என்றால் என்ன? அல்லாஹ்வை நேசித்தல் என்றால் என்ன? உண்மையான ஒரு மு.்.மின் எப்படிப்பட்டவன்? அல்லாஹ்வின் படைப்புகளை சிந்திப்பது எப்படி? அல்லாஹ்வால் எமக்கு வழங்கப்பட்டிருக்கும் பொறுப்புக்களை எப்படி நிறைவேற்றுவது? அல்லாஹ்வின் உண்மையான ஒரு அடியானாக எப்படி மாறுவது? போன்ற கேள்விகளுக்கு பதில்களை முகமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இருந்து கற்றுக் கொண்டார்கள்.

யூசுப் ஆசிரியர்: இந்தத் தலைப்பில் வேறு ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களா?

ரையான்: ஆசிரியரை ஒரு கேள்வி கேட்க முடியுமா?

யூசுப் ஆசிரியர்: ஆம் கேட்க முடியும்.

ரையான்: சிறந்த ஒரு சமூகச் சூழலில் வாழ்வதும் எமது ஈமானை பலப்படுத்த வாய்ப்பு இருக்கிறதா?

யூசுப் ஆசிரியர்: ஆம் சிறந்த ஒரு கருத்து. சிறந்த ஒரு சமூகச் சூழல் மற்றும் சிறந்த நண்பர்கள் போன்ற அம்சங்கள் ஒரு மனிதனின் வாழ்வில் இன்றியமையாத முக்கிய தேவைகளாகும். ஒரு மனிதன் வாழும் சூழல் அவனுக்கு நல்ல அம்சங்களையும் அழகிய பண்புகளையும் கற்றுக் கொடுத்தால் அந்த மனிதனும் சிறந்த மனிதனாகவும் அழகிய பண்பாடுடைய, அடுத்தவர்களுக்கு பிரயோசனமானவனாக மாறுவான். நாம் தெரிவு செய்யும் நண்பர்கள், எம்மை அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நெருங்கச் செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும். ஒரு மனிதன் ஈமான் குறித்த ஆரம்ப அறிவை குடும்பம், உறவினர்கள் மற்றும் அயலவர்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றான். தாயும் தந்தையும் ஒரு மனிதனின் முதல் ஆசிரியர்கள் ஆவார்கள். ஈமான் மற்றும் இஸ்லாத்தை அவர்கள் முதலில் தமது வாழ்வில் வாழ்ந்து காட்டுவதன் மூலம் தமது குழந்தைகளுக்கு முதல் ஆசிரியர் என்ற பொறுப்பை நிறைவேற்றுகின்றனர். உறவினர்களும் அயலவர்களும் ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைத்து சுவனத்திற்கு அழைத்துச் செல்வதற்காக உழைக்கின்றனர். எனவேதான் ஒரு மனிதன் எந்த நேரமும் சிறந்த ஒரு சூழலைத் தேடுகின்றான். இன்று சமூகத்துக்கு தீங்கு விளைவிக்க கூடிய மோசமான பழக்க வழக்கங்கள் மற்றும் கெட்ட பண்பாடுகளின் பின்னணியில் மோசமான சூழலும் கெட்ட நண்பர்களும் முக்கிய காரணிகளாக இருக்கின்றன.

அருமை இளைஞர்களே! எம்மை சுவனத்திற்கு அழைத்துச் செல்ல போவது சந்தேகமின்றி எமது ஈமானாகும். எனவே அதன் பெருமதியை உணர வேண்டும். அதனை எப்போதும் பாதுகாக்க வேண்டும். அப்படியானால் எமது ஈமானிற்கு தீங்கு விளைவிக்கும் மோசமான சூழல், கெட்ட நண்பர்கள் போன்றவர்களிடமிருந்து தூரமாக வேண்டும். பாம்பு போன்ற விச ஜந்துக்களிலிருந்து எப்படி விரண்டு ஓடுகின்றோமோ அப்படி விரண்டு ஓட வேண்டும். எம்மை நன்மைகளின் பால் அழைத்துச் செல்லும் சிறந்த சூழல் மற்றும் நல்ல நண்பர்களை தேட வேண்டும். மீண்டும் ஒரு மணி ஓசையோடு பாட வேளை முடிவடைந்தது. யூசுப் ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து “மாணவர்களே! மனிதன் ஓய்வு எடுப்பதும் மிக முக்கியமான தேவையாகும். எல்லோருமாக இடைவேளைக்குச் செல்வோம். மற்றொரு பாட வேளையில் வேறு ஒரு தலைப்பை உங்களோடு பகிர்ந்து கொள்வோம் இன்ஷா அல்லாஹ். உங்கள் அனைவரையும் அல்லாஹ்வின் பாதுகாப்பிலே விடுகின்றேன் என்று கூறி வகுப்பை விட்டு வெளியேறினார்.